# மாருதம்

சமூக, கல்வி, கலை, இலக்கிய சஞ்சிகை - 2018, 2019

இதழ் 19

ISSN 1800-4873

100/-



கேணிப்பித்தன்

## கலாநிதி.ச.அருளானந்தம்

M.Lit. PhD

வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம்

# வவுனியா ப.நோ.கூ.சங்கம் (வ-து)

நுகர்ச்சிப் பொருட்கள் விற்பனைச் சேவை
கோப் சிற்றி மினி கோப் சிற்றி சேவை
ஒப்பந்த சேவைகள்
உலக உணவுத்திட்ட பொருட்கள் விநியோகம்
கிராமிய வங்கிச் சேவைகள்
பாலர் முன்பள்ளிச் சேவை.
புதிய வேலை வாய்ப்புகளை வழங்குதல்.
வாகன சேவை
கலாசார மண்டப சேவை.
அரிசிமா உற்பத்தி, நல்லெண்ணெய் உற்பத்தி.
எரிபொருள் விற்பனை நிலைய சேவை

***மேற்படி சேவைகளைப் பெற்று கூட்டுறவு மூலம் நாட்டுயர்வு காண்போம்.***

---

**பொதிமண்டப வீதி,**
**வவுனியா.**
**தொ.பே.இல. 024 2222384, 024 2222784**

# மாருதம்

## இதழ் 19

ஆரம்பம் : மாசி முழுநிலா 1997

ஓயுதல் செய்யோம் – தலை
சாயுதல் செய்யோம்
உண்மைகள் சொல்வோம் – பல
வண்மைகள் செய்வோம்

**ஆசிரியர்கள் :**

கலாநிதி தமிழ்மணி அகளங்கன்

கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன்

**உதவி :**

திரு.த.பிரதாபன்

திருமதி.மா.நந்தீஸ்வரி (நந்தா)

**அச்சு:**

வாணி கணனிப் பதிப்பகம்,
இல.84, கந்தசுவாமி கோவில் வீதி,
வவுனியா.

024 2223658

**இலச்சினை : ப.சிவஅன்பு**

தொடர்புகட்கு:

1. கலாநிதி அகளங்கன்
   90, திருநாவற்குளம்,
   வவுனியா. 024 2221676
2. கலாநிதி.கந்தையா ஸ்ரீகணேசன்
   166 செல்வபவனம்
   சுதுமலை வடக்கு,
   மானிப்பாய். 021 2255902

ISSN: 1800-4873

## நண்பர்களுக்கு மட்டும்

## உள்ளே.....

| | |
|---|---|
| மாருதம் வாசக அன்பர்களே | 02 |
| தே(ய்)–இலை | 04 |
| அட்டைப்பட அதிதி | 05 |
| மாறுடனே சிந்தி.... | 14 |
| திரு.வை.சு.தனபாலசிங்கம் | 16 |
| உலகம் போற்றும்... | 20 |
| திரு.இரா.சுப்பிரமணியம் | 23 |
| ஊரும் பெயரும் | 26 |
| மாணவச் சாதனையாளர் விருது | 29 |
| உதிர்த்த ஞாயிறு | 31 |
| திரு.ப.எ.அன்ரன் | 33 |
| காலத்தால் அழிக்க முடியாத | 36 |
| திருமதி.சி.அகிலத்திருநாயகி | 45 |
| ஔவையாரின் அறிவுச் செல்வங்கள் | 48 |
| அவளும் பெண்தானே | 59 |
| பந்தனங்கள் | 60 |
| பிறகு பார்க்கலாம் | 63 |
| திரு.சோ.ஸ்ரீராஜ்குமார் | 67 |
| இது உன் தவறல்ல | 69 |
| இறுவையூர் சிதம்பரதிருச்செந்திநாதன் | 73 |
| இறங்கிட நீயும் | 76 |
| செவ்வாய் தோசம் | 78 |
| 2018, 2019 இல் நிகழ்வுகள் | 89 |
| 21 ஆண்டு நிறைவு | 91 |
| சைக்கிளில் | 94 |
| ஔவையாரின் கல்விச் சிந்தனைகள் | 95 |

வெளியீடு: வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம்

பதிவிலக்கம் : வட மா/க.அ/பண்/வவு/வவு/2013/02 தொடக்கம் : 1997 மாசி முழுநிலா

Published By: Circle of Arts and Literary Friends - Vavuniya, Sri Lanka. Estd: Feb. 1997
Editors : Dr.Agalangan & Dr.Kandiah Shriganeshan Email: kshriganeshan@yal oo.com

## மாருதம் வாசக அன்பர்களே!

மாருதம் 19 இதழில் உங்களைச் சந்திப்பதில் பெரு மகிழ்வு கொள்கிறோம். வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம் 1997 ஆம் **ஆண்டு மாசி மாதத்து முழுநிலா** நாளில் ஆரம்பிக்கப்பட்டது. இந்த ஆண்டு இருபத்தி இரண்டு வருடங்களைப் பூர்த்திசெய்து விட்டது.

213 மாதாந்த முழுநிலாக் கருத்தாடல்களை நடாத்தியிருக்கிறது. மாருதம் சஞ்சிகையின் **18** இதழ்களையும் **41** நூல்களையும் வெளியிட்டுள்ளது.,**"வன்னி அருவி"** என்ற பெயரில் மெல்லிசை நாடா ஒன்றை யாழ் பல்கலைக் கழக வவுனியா வளாக கலை கலாசார மன்றத்தோடு இணைந்து வெளியிட்டுள்ளது.

**"ஏடு"** என்ற குறும்படத்தை எழுத்தாளர் **வவுனியூர் இரா.உதயணன்** அவர்களின் நிதி உதவியோடு வெளியிட்டுள்ளது. **"மாவீரன் பண்டார வன்னியன்"** என்ற குறும்படத்தை வெளியிட்டுள்ளது. 18 ஆண்டுவிழாக்களைக் கொண்டாடியிருக்கிறது. கலை இலக்கியம்சார் அறிஞர்கள், படைப்பாளிகள் என்றவகையில் 13 பெரியார்களை அட்டைப்பட அதிதிகளாகக் கௌரவித்துள்ளது.

இம்முறை வவுனியாவின் கலை இலக்கிய, கல்வி, சமூக வளர்ச்சியில் முக்கிய பங்காற்றிய **கேணிப்பித்தன்** என்ற புனைபெயர் கொண்ட படைப்பாளியும், வவுனியாவின் தெற்குவலய முன்னாள் கோட்டக் கல்விப்பணிப்பாளரும், வடக்குக் கிழக்கு மாகாண ஓய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பாளரும், கல்விமானுமாகிய **கலாநிதி ச.அருளானந்தம்** அவர்கள் அட்டையை அலங்கரிக்கின்றார்.

கலை இலக்கியம் கல்வி சார்ந்த 26 துறைசார் சாதனையாளர்களுக்கு **"இலக்கியச் செல்வர்" "நாடகச் செல்வர்" "கல்வியியற் செல்வர்" "சிறுவர் இலக்கியச் செல்வர்" "இசைச் செல்வர் " "சிற்பக்கலைச் செல்வர் " நாடகக் கலைச் செல்வர்" "கவிதைக் கலைச் செல்வர் " "ஊடகக் கலைச் செல்வர்" "ஆங்கிலக் கல்விச் செல்வர்" "கலை இலக்கியச் செல்வர்" "இயற்றமிழ்ச் செல்வர்" "முத்தமிழ்ச் செல்வர்" "ஆடற் கலைச் செல்வர்" "பதிப்புக் கலைச் செல்வர்" "பரதக் கலைச் செல்வர்" "இசைக் கலைச் செல்வர்"** ஆகிய விருதுகளை வழங்கிக் கௌரவித்துள்ளது.

சிவநெறிப்புரவலர், சமூக சஞ்சீவி, தமிழியல் வித்தகர் சி.ஏ.இராமஸ்வாமி அவர்களின் பவளவிழாவையும்,அதன் நினைவாக அவரது "ஈசன் இன்கவி" நூலையும் வெளியிட்டுள்ளது.

ஆறு பெரியார்களுக்கு சான்றோர் விருது வழங்கிக் கௌரவித் துள்ளது. இம்முறை திரு.இரா.சுப்பிரமணியம், திரு.ப.எ.அன்ரன் பரந்தாமன்

(தமிழினியன்), திரு.வை.சு.தனபாலசிங்கம் ஆகியோர் **"சான்றோர் விருது"** வழங்கிக் கௌரவிக்கப்படுகிறார்கள்.

ஓவியர் ரவி அவர்கள் **"ஓவியக்கலைச்செல்வர்"** விருதையும், திருமதி. அகிலத்திருநாயகி சிறிசெயானந்தபவன் அவர்கள் **"விளையாட்டு வீரமங்கை"** விருதையும் பெறுகிறார்கள்.

மாணவச் சாதனையாளர்களாக 13 மாணவர்களைக் கௌரவித்துள்ளது. இம்முறை மூன்று மாணவர்கள் கௌரவிக்கப்படுகிறார்கள்.

இறுதிப் போர்க்காலத்தில் வவுனியா பொது வைத்திய சாலைக்கு தண்ணீர்த்தாங்கி ஒன்றை அமைத்துக் கொடுத்துள்ளது. அக்காலத்தில் வவுனியா வளாகத்தில் கல்வி கற்ற முல்லைத்தீவு மாவட்ட மாணவர்களுக்கு நிதி உதவி செய்துள்ளது. அக்காலத்தில் செட்டிகுளம் நலன்புரி நிலையத்தில் தங்க வைக்கப்பட்ட க.பொ.த (உ/த) மாணவர்களுக்கு நாடகமும் அரங்கியலும் பரீட்சைக்கான பாடக்குறிப்புக்களை வழங்கியுள்ளது.

அத்தோடு எமது ஆரம்பகால உறுப்பினரும் புலம்பெயர் உறுப்பினருமாகிய தற்போது கனடாவில் வாழும் திரு.த. விஜயசேகர் அவர்களின் உதவியோடு ஏழு இலட்சம் ரூபா பெறுமதியான அத்தியாவசியப் பொருட்களை வவுனியா பிரதேச செயலாளரூடாக நம் தமிழ் உறவுகளுக்கு வழங்கியுள்ளது.

கடந்த ஆண்டுபோல இந்த ஆண்டும் இந்த இதழ் வெளியீட்டுச் செலவில் ஒரு பகுதியைத் தந்துதவிய எழுத்தாளர் வவுனியூர் இரா உதயணன் (லண்டன்) அவர்களுக்கும், இதேபோல இந்த ஆண்டு விழாவின்போதும் விருந்தினர்களுக்கு மதிய உணவு வழங்க நிதி உதவி செய்த திரு.ஏ.குலவீரசிங்கம் (லண்டன்) அவர்களுக்கு எமது நன்றி.

வவுனியா பண்டாரிகுளம் முதலியார் அமரர் சபாரட்ணம் தியாகராஜா நினைவு மாணவச் சாதனையாளர் விருது வழங்கி வரும் கவிஞர் தி.மகேஸ்வரராஜா (லண்டன்) அவர்களுக்கும் எமது நன்றி.

மாருதம் இந்த இதழும் புதுப் பொலிவோடு பயனுள்ள பல்வேறு ஆக்கங்களையும் தாங்கி வெளிவருகிறது. ஆக்கங்களுக்கு ஆக்கியோர் பொறுப்பாவார். ஆக்கங்களை வழங்கியோர் .அனுசரணையாளர்கள் அனைவருக்கும் நன்றி. வவுனியா மாவட்டம் சகல துறைகளிலும் முன்னேறப் பாடுபடுவோம்.பயன்பெறுவோம்.

நன்றி.

ஆசிரியர்கள்

## தே(ய்) – இலை

தென்றலும் உறவாடும்
தேயிலை நிறைந்த
மலை மாலை கொண்ட
மலையகமே...

நாங்கள்
தேசத்துக்காக உயிரை
தந்து
வாழும் தேயிலைவாசிகள்!

எங்கள் தேயிலைக்கே
உலக சந்தையில்
உயர்ந்த விலை
நாங்களோ சமுகத்தில்
தாழ்ந்த நிலை....
எங்கள் தேயிலையால்
நாடு வளர்கின்றது
வளர்பிறையாய்...

ஆனால் நாங்களோ
தேய்கின்றோம்
தேய்பிறையாய்...

**செல்வகுமார் தினேஸ்குமார்**
ஆரம்பக்கல்வி
வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி

**வெங்கடேஸ்வரா**
**பல்பொருள் வாணிப நிலையம்**

இல.15, பஜார்வீதி,
வவுனியா.
தொ.பே.இல : 024 2222418



## அட்டைப்பட அதிதி
## கேணிப்பித்தன்
## கலாநிதி.ச.அருளானந்தம் M.Lit. PhD

பெயர் – சண்முகம் அருளானந்தம்

தாயின் பெயர் – செல்லம்மா

தந்தையின் பெயர்– சண்முகம்

மனைவி பெயர் – மேரிலூர்து (காதல் திருமணம்)

பிள்ளைகள் இருவர். மூத்தவர் பெயர் அருள்பாஸ்கரன். இவர் ஒரு ஆசிரியர். அத்துடன் சிறந்த ஓவியருமாவார்.மற்றவர் அ. அருள்முரளி, இவர் ஒரு டாக்டர் (நிபுணத்துவ ஆலோசகர் –(Anesthetic)

கல்வி கற்ற பாடசாலை சிவானந்த வித்தியாலயம், மட்டக்களப்பு. உயர்கல்வியை ஆசிரிய பயிற்சிக் கல்லூரி, மட்டக்களப்பு, பேராதெனிய பல்கலைக்கழகம், கிழக்குப் பல்கலைக் கழகம் ஆகியவற்றில் பெற்றார்.

கல்வித் தரம் - B.A, M. Lit. PhD

தொழில் – ஆசிரியர், அதிபர், கல்விப்பணிப்பாளர். (S.L.E.A.S.)

விலாசம் – ஆலங்கேணி, கிண்ணியா

தற்போதைய முகவரி: 37/7. மத்திய வீதி உவர்மலை, திருகோணமலை

பிறந்த திகதி - 30.01.1937

பிறப்பிடம் – ஆலங்கேணி

வசிப்பிடம் – உவர்மலை – திருகோணமலை

தொலைபேசி இலக்கம்– 026- 2221507 - 0772155023

மின்னஞ்சல் முகவரி– arulsulexi.arul@gmail.com

**கேள்வி :** உங்களது இலக்கியத்துறை மீதான ஆர்வம் பற்றி கூறுவீர்களா?

**பதில் :** படிக்கும்போது இலக்கியத்துறை மீதான ஆர்வம் உண்டாயிற்று. எனது ஆசிரியர்கள் இலக்கியம் ஆங்கிலத்திலும். தமிழிலும் கற்பிக்கும்போது நான் அப்படியே ஆழ்ந்துவிடுவேன். ஒவ்வொரு பொருளையும் உற்று நோக்கி இரசிப்பேன். நான் உயிரியல் விஞ்ஞானம் படித்தேன். அப்போது தாவரவியலையும், விலங்கியலையும் கற்பித்த திரு.பி.எஸ்.சாக்கோ

கற்பிக்கும்போது மலர்களையும், பூச்சி, புழுக்களையும் மற்றும் விலங்குகள் பற்றியும் அற்புதமாகக் கற்பிப்பார். அவற்றின் வாழ்க்கை வட்டங்களும், நான் பிறந்து வளர்ந்த மாவட்டத்தின் கிராமங்களின் இயற்கை அழகும், மக்களின் வாழ்வியலும். எங்கள் வயல், தோட்டம், பயிர்கள் இவை யாவும் இலக்கியம்தானே? இவற்றின் ஈர்ப்பினால் இலக்கியத்துறை என்னுள் புகுந்து கொண்டது.

**கேள்வி :** உங்களது ஆரம்ப முதல் இன்று வரையிலான இலக்கியப் பயணம் பற்றி கூறமுடியுமா?

**பதில்** : ஆசிரியராக இருந்தபோது மாணவர்களைக் கவரப் பல வழிகளைக் கையாண்டேன். கவிதை, கதை. கட்டுரை, நாடகம் என எழுதிக்காட்டுவேன். அவர்களை ஊக்குவிப்பேன். எனது கிராமம் விவசாயத்தை வாழ்வாதாரமாகக் கொண்டது. ஏழ்மை என்றால் என்ன? என்பதை உணர்ந்தவன். எனது ஊரைப்போன்றே அனைத்துக் கிராமங்களும் ஏழ்மை நிலையிலேயே இருந்தன. தேடு கல்வியைத் தேடும் சிறார்கள் நிறையவே இருந்தனர். பல சிறார்களுக்குப் பாடநூல்களும் உபகரணங்களும் நண்பர்களின் உதவியோடு வாங்கிக் கொடுப்போம்.சேனையூர் மகாவித்தியாலயத்தில் கற்பித்தேன். எனது ஊரைப்போன்றே அங்கும் ஏழைச்சிறார்கள் இருந்தனர். ஆனால் அச்சிறுவர்களுக்குக் கற்கும் ஆவலிருந்தது.

அப்போது உப்பாறு, கங்கை, மூதூர், கட்டைபறிச்சான் ஆகிய துறைகளைத் தாண்டி பாடசாலையில் முதலாளாக நிற்பேன். ஒவ்வொரு துறையைக் கடக்கும்போதும் தோணி வரும்வரை காணும் காட்சிகளைக் கவிதைகளாக வடிப்பேன். பிள்ளைகளுக்கு வாசித்துக் காட்டுவேன். எழுதத் தூண்டுவேன். மாதத்தில் இரண்டு மாணவர் மன்றங்களை நடத்துவேன். அனைத்துப் பிள்ளைகளையும் ஏதாவது நிகழ்ச்சியில் பங்குபெறச் செய்வேன். என்னுடன் கற்பித்த ஆசிரியர்களும், அதிபரும் வேண்டியளவு உதவினார்கள். சிறப்பாக நண்பன் கலாபூஷணம் செ.விபுணசேகரம் மிகவும் உதவினார். எனது மாணவர்களால்தான் எனது இலக்கியப் பயணம் தொடர்ந்தது. சிறப்பாக அவர்களே எனக்குச் சிறுவர் இலக்கியத்தில் நாட்டங்கொள்ள வைத்தவர்கள். கடந்த வாரம் என்னைச் சந்திக்க ஒருவர் வந்தார். "சேர்!என்னை யாரென்று தெரிகிறதா? சொல்லுங்கள்" என்றார். சட்டென்று ஞாபகம் வரவில்லை.

"நான் சேனையூரில் மூன்றாம் வகுப்பில உங்களிடம் படித்தவன்.நல்லாப் பாடுவன்" சட்டென்று நினைவு வந்தது. "கந்தசாமி" என்றேன். அவர் எனது கால்களில் விழுந்து வணங்கினார்.அவரை அணைத்து வாழ்த்தினேன். "சேர்

அப்ப நீங்க எழுதித் தந்த பாடல் எனக்குத் தெரியும். பாடுறன் கேளுங்க" என்று பாடினார்.

| | |
|---|---|
| பாட்டுப் பாடும் எங்கள் அறை | எங்கள் தமிழோ வான்பரவும் |
| பாடம் சொல்லும் எங்கள் அறை | எங்கும் காற்றில் ஆடிவரும் |
| கேட்டு நின்றால் எங்கள் அறை | பொங்கும் பாலர் உள்ளமெல்லாம் |
| காது குளிரும்மூன்றாம் வகுப்பு அறை | பாலர் எமது மூன்றாம் வகுபினிலே |

| | |
|---|---|
| சேனை ஊரில் அமைந்த நல்ல | பாலர் நாங்கள் சேர்ந்து நிதம் |
| சிறந்த மகா வித்தியாலயத்தில் | பைந்தமிழில் பாட்டிசைப்போம் |
| தேனை வெல்லும் எம்தமிழை | கோல மயில்போல் ஆடிநிதம் |
| தேடும் போது உள்ளம் துள்ளும் | கொள்ளை இன்பம் கண்டிடுவோம் |

எனக்கு உள்ளம் துள்ளியது. நான் மறந்துவிட்டேன். ஆனால் நான் எழுதிக் கொடுத்த பாடல்களை அந்த மாணவன் (அவர் இப்போது பேரப்பிள்ளைகளையும் கண்டுவிட்டார்) மறக்கவில்லை. அனைத்தையும் பாடிக்காட்டினார்.. அந்த மாணவன் 1968 – 1970 காலப் பகுதியில் சேனையூர் ம.வியில் கற்றவர். ஒரு ஆசிரியருக்கு இதைவிடவும் சிறந்த நினைவுப் பரிசு வேறேதும் இருக்குமா? அவர் பாட இப்பாடலை எழுதிக் கொண்டேன்.

கவிதை உலகினுக்கு நான் அறிமுகமானேன். எங்கள் கிராமங்கள் தோறும் கவிதை அரங்குகள் நடக்கும். சிறப்பாக நவராத்திரிக் காலங்காளிலும், கோயில் திருவிழாக் காலங்களிலும் நடக்கும். அக்கவிதை அரங்குகளில் பங்குபற்றினேன். கவிதைகளை எழுதிப் பத்திரிகைகளுக்கு அனுப்பத் தொடங்கினேன்.

'குடுகுடு நடைதான் துணையாகும்' என்ற கவிதையை எழுதி சிந்தாமணிக்கு அனுப்பினேன். தினபதி, சிந்தாமணி ஆசிரியர் அமரர் எஸ்.டி. சிவநாயகம் எனக்குக் **'கேணிப்பித்தன்'** என்ற புனைபெயரையும் அளித்து கவிதையையும் பிரசுரித்தார்.

எனது ஆக்கங்களுக்கு நல்ல இடங்கொடுத்து என்னை உற்சாகப் படுத்தினார். என்னைப்போல் பலரை உருவாக்கியவர் அவரே. நமது நண்பர் காப்பியக்கோ ஜின்னாஹ் சரிபுத்தீன் அவர்களும் என்னுடன் சிந்தாமணி மூலம் சமகாலத்தில் பயணித்தவரே. ஜின்னாஹ்விடம் அடிக்கடி அமரர் எஸ்.டி.

சிவநாயகம் அவர்கள் என்னையும் விசாரிப்பதாக ஜின்னாஹ் கூறுவர்.

எனது ஆசிரியர்களும், எனது மாணவர்களும், எனது கிராமமும்,கிராமத்தின் இயற்கை அழகும், மக்களின் வாழ்வியலும். எங்கள் வயல், தோட்டம், பயிர்கள், பாடசாலை மாணவர்கள் எனது இலக்கிய உலகினுக்குத் தீனி போட்டார்கள்.

**கேள்ளி :** நீங்கள் இதுவரையில் வெளியிட்ட நூல்கள் விபரம் பற்றி?

**பதில்** : 100 நூல்களை எழுதி வெளியிடும் திட்டத்தை நோக்கிய பயணம் எனது பயணம். பல நூல்கள் எனது கணினியில் உள்ளன. உடல்நலக்குறைவு எழுதும் வேகத்தைக் குறைத்து விட்டது. எனினும் எழுதுகிறேன். இதுவரை வெளியிட்ட நூல்கள் சிறுவர் பாடல்கள் – 19, சிறு கதைத் தொகுதிகள் – 06, சிறுவர் கதைகள் – 14, நாவல்கள் – 06, சிறுவர் கட்டுரைகள் – 14, கவிதைத் தொகுதி – 02, சிறுவர் நாவல்கள் –09, கல்வியியல் – 04, வாழ்க்கை வரலாறு – 02, ஆங்கில கதை, கட்டுரை –10, ஆய்வு நூல்கள் – 05.

**கேள்வி :** கல்விப் பணி

**பதில்** : நான் ஆசிரியராகவும், அதிபராகவும் சேவை செய்த காலங்களில் பாடசாலை, மாணவர்கள். அவர்களது கல்வியின் தரம் என்பவற்றைக் கட்டியெழுப்பும் முயற்சிகளில் ஈடுபட்டேன். நான் படித்த எனது ஊர்ப் பாடசாலைக்கு மின்னிணைப்பைப் பெற்றுக் கொடுத்தேன். அத்துடன் பாடசாலையை மகா வித்தியாலயமாகத் தரமுயர்த்தி க.பொ.த உயர்தர வகுப்பு வைக்க அனுமதி பெற்று வகுப்புக்களைத் தொடங்கினேன். முதற்தடவையில் நான்கு மாணவர்கள் பல்கலைக் கழகத்துக்குச் சென்றனர்.

சுங்கான்குழியில் புதிய பாடசாலை தொடங்க வேண்டிய அவசியத்தை அமரர் தங்கத்துரை விளக்கினார். அவ்வூர் மக்களின் உதவியினால் தற்காலிகக் கட்டிடத்தைக் கட்டி அதற்குக் **கலைமகள் வித்தியாலயம்** என்ற பெயரினைச் சூட்டி அப்பாடசாலைக்கு அதிபராகச் சென்றேன். அதன் பயனாக எங்களூர் பிள்ளைகளுக்கு (06 பேருக்கு) ஆசிரியர்களுக்கு நியமனமும் கிடைத்தது.

கண்டிக்கு இடமாற்றம் கிடைத்தது. உன்னாஸ்கிரியில் ஒரு வருடம் உயிர்பிடுங்கும் காற்றுடன் போராடிச் சேவைசெய்தேன். 17 பிள்ளைகளின் பெயர்கள் தினவரவு இடாப்பில் இருந்தன. ஆனால் பிள்ளைகள் வருவதில்லை. அதிபரும் நானே. ஆசிரியரும் நானே என எங்கும் நானாகவே நிறைந்திருந்தேன். அங்குள்ள சலூன் எனது அலுவலகமாக மாறியது. அதன் உரிமையாளர் எனது நண்பரானார். நான் கற்கும்போது இரு நகரங்களின்

கதை (Tale of two cities ) என்ற நூல் பாடநூலாக இருந்தது. அந்நூலில் முக்கிய இடமாக ஒரு சலூன் இருந்ததை உணர்ந்தேன்.

அதனைத் தொடர்ந்தே அந்த சலூன் எனது இலக்கு நிலையம் (Target spot) ஆகியது. அதன் பயன் இரண்டு கிழமைகளில் 117 பிள்ளைகள் பாடசாலைக்கு வருகை தந்தனர். ஆசிரியர்கள் இல்லை. பின்னர் அது 03 ஆக உயர்ந்தது. அத்துடன் ஒரு தொண்டர் ஆசிரியரின் சேவையும் கிடைத்தது. பாடசாலைக்கு நிரந்தரக் கட்டிடம் இல்லை. கட்டிடம் கட்டுவதற்கு நிலம் இல்லை. அங்குள்ள. தோட்ட நிர்வாகத்திடம் கதைத்து நிலத்தைப் பெற்றேன். கட்டிடத்துக்கு நிதி ஒதுக்க ஆவன செய்தேன்.

பின்னர் கலஹா தமிழ் வித்தியாலயத்துக்கு இடமாற்றம் வந்தது. அங்கு இடவசதி இல்லாது பிள்ளைகள் படும் பாட்டை நேரில் கண்டேன். பிள்ளைகள் 750 வரை கற்றுக் கொண்டிருந்தனர். 12 ஆசிரியர்கள் கடமையாற்றினர். தமிழ் பாடசாலைகளை எந்த அரசியல்வாதிகளோ, திணைக்களத் தலைவர்களோ கணக்கெடுப்பதில்லை என்பதை உணர்ந்தேன்.

பழைய மாணவர் சங்கத்தையும், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தையும் கூட்டி விளக்கம் கொடுத்தேன். அன்றே ஒரு குழு உருவாகியது. மலையகத்தில் உள்ள அபிமானிகளிடம் உதவிகோரினோம். நிதிஉதவி குவிந்தது. கலஹாவில் முக்கிய பிரமுகராக திரு. எஸ்.எம். கந்தசாமி விளங்கினார். அவரிடம் சேர்ந்த நிதியைக் கட்டிடம் கட்டுவது அவரின் பொறுப்பு எனக் கொடுத்தோம். கட்டிடம் கட்டும் நிலம் மலைச் சரிவு. அதனைச் செப்பனிடவேண்டும். சிரமதானம் கண்முன் வந்தது.

பல தேயிலைத் தோட்டங்களுக்கும் சென்று மக்களைச் சந்தித்து சிரமதானம் பற்றிய செய்தியை விளக்கினோம். தோட்ட நிர்வாகம் எங்களின் கோரிக்கைக்கு வரவேற்பளித்தது. கலஹா கடை முதலாளிகள் சிரமதானத்துக்கான சிற்றுண்டி, தேநீர், பால் எனக் கொடுத்து உதவினர். காலை 9 மணிக்குத் தொடங்கிய பணி பகல் ஒரு மணிக்கு நிறைவடைந்தது. மக்கள் ஆயிரக் கணக்கில் வந்து சிரமதானப் பணியில் கலந்து கொண்டனர். சரிவாக இருந்த நிலம் பெரு வெட்டைவெளியாகிச் சமதரையாகப் படுத்திருந்தது. அடுத்த கிழமையே கட்டிடம் எழும்பத் தொடங்கியது.

பாடசாலையில் இருந்த சிறிய கட்டிடத்தில் அதிபரின் அலுவலகமும் இருந்தது. அதுதான் எனது அலுவலகமும். வதிவிடமாகவும் மாறியது. அதற்கு மின்னிணைப்பு இல்லை. பெற்றோர் பழைய மாணவர் சங்க உதவியினால் மின்னிணைப்பைப் பெற்றேன்.

ஒரு கலைவிழாவினை ஏற்பாடு செய்தேன். ஆசிரியர்களின் திமையை வெளிக் கொண்டுவர கலைவிழா உதவியது. கல்விப் பணிப்பாளர் கலைவிழாவுக்கு வந்திருந்தார். பாடசாலையின் வளர்ச்சி கண்டார். அடுத்த கிழமை 12 ஆசிரியர்களாக இருந்த ஆசிரியர் தொகை 27 ஆக உயர்ந்தது. கட்டிடம் கட்டி முடிந்தது. க.பொ.த உயர்தர வகுப்புக்கு அனுமதி பெற்று வகுப்புக்கள். தொடங்கப்பட்டன. ஆசிரியர்கள் உயர்கல்வியைப் பெற பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் வந்து உதவ வழிசெய்தேன். ஆசிரியர்கள் பலர் தமது பட்டப் படிப்பை நிறைவு செய்தனர்.

கண்டி மஹியவா இரட்சணிய சேனை தமிழ் வித்தியாலயத்துக்கு இடமாற்றம வந்தது. அங்கும் வசதிகள் ஒன்றும் இல்லை. கல்விக்காக ஏங்கும் பிள்ளைகள். அவர்கள் அனைவரும் கண்டி மாநகர் நகரசுத்தித் தொழிலாளர்களின் பிள்ளைகள். நல்லதொரு அதிபர் இல்லாததினால் வளங்கள் இல்லாததுபோல் படுத்திருந்தது. அங்கும் மின்னிணைப்பு இல்லை. பாடசாலையின் வளர்ச்சியில் செயற்பட யாரும் இல்லை. **'ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரோ'** என்பதை எண்ணினேன். பெற்றார், பழைய மாணவர் சங்கங்களைக் கூட்டி விழிப்புணர்வுகளை ஏற்படுத்தினேன். முடிவு. அத்தொழிலாளர்களின் முயற்சியால் மின்னிணைப்பு வந்தது. 'மஹியவா கலைமகள் தமிழ் வித்தியாலயம்' என்ற பெயர் பாடசாலை பெற்றது. சனி, ஞாயிறு விடுமுறை நாட்களில் பல்கலைக் கழக விரிவுரையாளர்களும், பட்டதாரி மாணவர்களும் வந்து வகுப்புக்களை நடத்தினார்கள். என்றும் விளையாட்டுப் போட்டிகளைக் காணத இப்பாடசாலை அனைத்தையும் கண்டது.

அமரர் திரு. தங்கத்துரை உடனடியாக எனது ஊர்ப்பாடசாலையில் வந்து பொறுப்பேற்குமாறு இடமாற்றக் கடிதத்தையும், தனது குறிப்புரையையும் அனுப்பியிருந்தார். அங்கு சென்று கடமையைப் பொறுப்பேற்றேன். கல்வி நிர்வாக சேவைப் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த செய்தி இனித்தது.

## வவுனியாவில் கல்விப்பணி

வவுனியா மாவட்டம் 'ஒல்லை வா..வா' என அழைத்தது. வந்தேன். பலரது மனங்களை வென்றேன். வவுனியா மாவட்டம் கல்வியில் பின்னின்றது. வசதியுள்ளோர் யாழ்ப்பாணம், கொழும்பு சென்று கற்றனர். வன்னி மக்கள் வன்னியிலேயே சுருண்டனர். மக்கள் தொகைக்கேற்ப பாடசாலைகள் இல்லை. அப்போது வவுனியா மாவட்டத்தில் செட்டிகுளம், நெடுங்கேணி, வவுனியா தமிழ், சிங்களம் என்ற பிரிவுக் காரியாதிகாரி அலுவலகங்கள் இயங்கின.

அதற்கேற்ப செட்டிகுளம் கல்வி வட்டாரம், புளியங்குளம் கல்வி வட்டாரம், வவுனியா தமிழ் கல்வி வட்டாரம், வவுனியா சிங்களம் கல்வி வட்டாரம் என 4 கல்வி வட்டாரங்கள் இருந்தன. நான் செட்டிகுளம் கல்வி வட்டாரத்தின் கல்வி அதிகாரியாகப் பதவியேற்றேன். சைக்கிளில் எனது பயணம் தொடர்ந்தது. வவுனியாவின் மூலைமுடுக்குகள் எங்கும் எனது சைக்கிள் செல்லும். அதுகாலவரை க.பொத சாதாரண தரப்பரீட்சை எடுப்பதற்கு செட்டிகுளப் பிரதேசப் பிள்ளைகள் வவுனியாவுக்கே வரவேண்டியிருந்தது. முதன்முதல் அப்பரீட்சையை நடத்தும் நிலையத்தை செட்டிகுள ம.வி. இல் உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டு வெற்றியும் கண்டேன்.

காந்திய இயக்கம் வவுனியாவில் பல குடியேற்றங்களைச் செய்திருந்தது. சுமார் 105 கிராமங்கள் உதயமாகின. அங்கெல்லாம் பாடசாலைகள் இல்லை. பிள்ளைகள் பக்கத்திலுள்ள பாடசாலைகளுக்குப் பல மைல் நடந்து சென்றனர். அவர்களது கல்விப் பசியைத் தீர்க்க எண்ணினேன். சுமார் 65 கிராமங்களை முதலில் தெரிவு செய்து தரவுகளைச் சேகரித்து உரிய படிவங்களைத் தேடியெடுத்து அதற்கான படங்களை வரைந்து ஆயத்தப் படுத்தினேன்.

பெரியகட்டு என்ற இடத்தில் பெரியகட்டுப் பங்குத்தந்தையார் எங்களிடம் ஒப்படைத்த பாடசாலையைப் பொறுப்பேற்க 2 வருடங்கள் சென்றன. ஆனால் மாகாணசபை அமைப்பு வந்ததன் பின்னர் குறுகிய காலத்துள் 60 பாடசாலைகளைத் திறக்க முடிந்தது. பாடசாலைகளுக்குப் பெயர்களைச் சிந்தனை செய்த பின்னரே வைத்தேன்.இந்த முயற்சியில் அனைத்து இயக்கங்களும் என்னோடு கைகோர்த்து உதவின.

ஜனசக்தி உதவித்திட்டத்தில் நியமனம் பெற்ற ஆசிரியர்களை பட்டதாரிகளாக்கும் முயற்சியில் ஈடுபட்டு ஆசிரிய நண்பர்களின் உதவியினால் பட்டதாரிகளாக்க முடிந்தது. இன்று பல பட்டதாரி ஆசிரியர்களைக் காணும்போது மனம் நிறைந்திருக்கிறது.

### கலை இலக்கியம்

வவுனிய கலைஇலக்கியத் தொண்டு பசுமையானது. முத்தமிழ் கலா மன்றத்தின் ஊடாக பல நிகழ்வுகளை நடத்தக்கூடியதாக அமைந்தது எனது பாக்கியமே. அப்போது எனதருமை நண்பர் உடுவை எஸ்.தில்லை நடராஜா, திரு.க.ஐயம்பிள்ளை, திரு.பொ.மாணிக்கவாசகம், அகளங்கன் போன்றோர் மிக உதவியாக இருந்து செயற்பட்டனர்.

வவுனியா சுத்தனந்த இந்து இளைஞர் சங்கம் எனக்குப் பெரிதும் பக்கபலமாக இருந்தது. நண்பர் திரு.நா.சேனாதிராசா, சிவநெறிப்புரவலர்

ஈசன் முதலாளி இராமசாமிப் பெரியார், கண்ணகி முதலாளி வை.செ.தேவராசா ஆகியோர் மறக்க முடியாதவர்களாக எனது மனத்தில் குடியிருக்கிறார்கள்.

**கேள்வி :** நூல் வெளியீடு பற்றிச் சொல்லுங்கள்

**பதில் :** நூல்களை எழுதுவது சுகமானது. அவற்றை அச்சிட்டுச் சந்தைப் படுத்துவது மிகக் கஸ்டமானது. செலவிட அல்லது முதலிட யாரால் முடியும். அவ்வப்போது கிடைக்கும் சாஹித்ய விருதுகளில் கிடைக்கும் நிதியினால் சமாளிக்க வேண்டியுள்ளது. புத்தக வெளியீட்டுக்கு 20 – 30 அன்புள்ளங்கள் வருவார்கள்.

**கேள்வி :** ஆரம்பம் முதல் இன்றுவரை இலக்கியத்துறை மீதான உங்களது அனுபவம் எவ்வாறுள்ளது?

**பதில் :** எழுதுவது ஏனென்றால் எழுதும்போது நீ சிந்திக்கின்றாய். எழுதுவதும் ஒருவகைத் தியானமே. நாம் எழுதும்போது இந்த உடலைவிட்டு ஆன்மா வெளியெல்லாம திரிந்து பலவித அனுபவங்களை அனுபவித்து ஆனந்திக்க வைக்கும். இலக்கியத்தை அனுபவித்து எழுதவேண்டும். நமது அனுபவம்தான் நல்ல இலக்கியத்துக்கு உதவும்

**கேள்வி :** தற்போதைய சமுதாயத்தில் இலக்கியத்துறையில் ஈடுபாடுடைய இளம் எழுத்தாளர்கள் முகங்கொடுக்கின்ற சவால்கள் பற்றி?

**பதில் :** இளம் எழுத்தாளர்கள் நிறையவே எழுதுகிறார்கள். அவர்களும் எழுதுவதை நூலாக்கி சந்தைப்படுத்தலில் சிக்கலில் தவிக்கிறார்கள். எழுதுவதைப் பலமுறை எழுதி படித்துத் திருத்தி எழுதி பின்னர் சஞ்சிகைகளுக்கோ அல்லது தேசிய பத்திரிகைகளுக்கோ அனுப்பி அங்கீகாரத்தைப் பெறலாம். இன்று பல நிறுவனங்கள் அவர்களது நூல்களை வெளியிட தயாராக உள்ளன.

**கேள்வி :** இலக்கியத் துறையில் நீங்கள் பெற்ற வெற்றிகள், விருதுகள் பற்றி?

**பதில் :** வடக்கு கிழக்கு மாகாணங்கள் இணைந்திருக்கும்போது நான் பிரதி மாகாணக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றினேன். நூல்களை எழுதினாலும் அவற்றைப் போட்டிக்கு அனுப்புவதில்லை. பணியில் இருந்து ஓய்வு பெற்றபின்னர்தான் போட்டிகளுக்கு நூல்களை அனுப்பினேன். வடக்கு கிழக்கு இணைந்திருந்தபோது சுமார் 07 நூல்களுக்கு மேல் விருதுகள் கிடைத்தன. கிழக்கு மாகாணம் பிரிந்தபின் 08 நூல்களுக்குமேல் விருதுகள் கிடைத்தன. இலங்கை சாஹித்ய விருது ஆறு தடவைகள் கிடைத்தது. திருகோணமலையில் இருந்து சாஹித்ய விருது பெற்றவர்கள் வெகு

சிலரே. கல்வி அமைச்சு கொழும்பு - தேசிய நூலக அபிவிருத்திச் சபை இலக்கிய கையெழுத்துப்பிரதிகளைக் கோரும். அவற்றுள் சிறந்தனவற்றைத் தேர்ந்தெடுத்து பிரசுரத்துக்கான நிதியை வழங்கும். அவ்வாறு இரு முறை எனக்குக் கிடைத்தது. இலங்கை தேசிய நூலக ஆவணவாக்கற் சேவை சபை இவ்வாறு கோரும். அங்கும் இரண்டு நூல்களை பிரசுரிக்க நிதி கிடைத்தது. ஆளுநர் விருது, கலபூஷணம் விருது

**கேள்வி :** இலக்கியத் துறையில் உங்களைத் தொடர்ந்து உங்கள் குடும்பத்தவரின் பங்களிப்பு பற்றி?

**பதில் :** எனது மூத்தமகன் ஒரு ஆசிரியர். அவர் ஒரு பிறவி ஓவியக் கலைஞர். பலமுறை ஓவியக் கண்காட்சி திருகோணமலையிலும் இருமுறை கொழும்பு கலாபவனத்திலும் வைத்துள்ளார். 'சிறுவர் சித்திரக் கூடம்' அமைத்து பல சிறுவர் சிறுமியருக்கு ஓவியக்கலை கற்பிக்கிறார். அவர் உதவும் உள்ளங்கள் என்ற சிறுவர் நூலை எழுதினார். அதற்கு கிழக்கு மாகாண இலக்கியப் பரிசு கிடைத்தது. அவரது மகள் இரண்டு நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார்.

**கேள்வி :** 80ற்கும் மேற்பட்ட நூல்களைப் படைத்த நீங்கள், ஒரு நூல் படைப்பாளியானவன் ஒரு நூலைப் படைக்கும் போது கவனத்திற் கொள்ள வேண்டிய முக்கிய விடயங்கள் பற்றி சொல்லுங்கள்

**பதில் :** மக்களுடன் மக்களாகப் பழகி அவர்களது நடையுடை பாவனைகளைப் புரிந்து கொண்டு எழுதவேண்டும். அவர்களே நமது பாத்திரங்களாக இருக்கவேண்டும்.

**கேள்வி :** தற்சமயம் இலக்கியப் பணியில் ஈடுபட்டு வருகிறீர்களா?

**பதில் :** எனது உயிருள்ளவரை எழுத்தே என் மூச்சாக இருக்கும். இன்னும் வெளிவரப் பல புத்தகங்கள் எனது கணனியினுள் அடைகாக்கின்றன.

**கேள்வி :** தற்காலத்தில் வளர்ந்து வரும் இளங் கலைஞர்களுக்கு உங்களது அனுபவத்தின் மூலம் நீங்கள் கூற விரும்புவது?

**பதில் :** இளங்கலைஞர்கள் நன்கு வாசிக்க வேண்டும். வாசித்தவற்றையிட்டு யோசிக்க வேண்டும். அந்த நூல்களைப்பற்றி அபிப்பிராயங்களை எழுதி விமர்சிக்க வேண்டும். அந்த விமர்சனங்கள் ஆக்கபூர்வமானதாக அமைய வேண்டும். நம் நாட்டு எழுத்தாளர்களது நூல்களை வாங்கிப் படித்து உற்சாகப்படுத்த வேண்டும்.

**பேட்டி : ஆசிரியர்**

# மானுடனே சிந்தி...! செயற்படு...!

திருமதி.பாஸ்கரா பிரமேந்திரராஜா

கருவைச் சுமந்த மானை வேட்டையாடி
விருப்புடன் சுவைக்கத் தயங்கும் சிங்கம்
மாக்களுக்குள்ள இரக்கமும் பெருந்தன்மையும்
மக்களுக்கில்லையே என எண்ணுகையில் வேதனையாகிறதே!

வாழ்க்கையை வாழ விரும்பும் பேதைகளை
மீளவே முடியாது அழித்தொழிக்கும்
கீழ்த்தரமான மனிதவர்க்கம் வாழும்
தராதரமற்ற பூமிதனை நினைக்கையில் வேதனையாகிறதே!

அடுத்தவன் முன்னேற்றத்தைப் பொறுக்கமுடியாது
தடுத்து அதனை முறியடிக்க
அடுத்தடுத்துச் செயற்படும் மானுடனை
எடுத்து எண்ணுகையில் மனது வேதனையாகிறதே!

ஆடையின் அகல நீளத்தைக் குறைத்துப் பெண்கள்
நடை போட்டுக் காட்டும் கோலத்தால்
தடைகள் ஏதுமின்றி கட்டவிழ்க்கும் வன்முறைகள்
நடைபெறும் இந்தப் பாரினைப் பார்க்கையில் வேதனையாகிறதே!

உயிர்வாழத்தான் உணவு தேவை
உணவிற்காகவே வாழ்கின்ற மானுடர்கள்
நிறை உணவை விடுத்து பல துரித உணவுண்டு
குறைவான ஆயுளைப் பெறுவதை எண்ணுகையில் வேதனையாகிறதே!

மாடி மனை தருவதல்ல இன்பம்
ஓடி ஆடி அதனைப் பெற படுகின்றான் துன்பம்
அத்தனையும் அமையப்பெற்றும் மனிதன்
சிந்தையில் நிம்மதி அற்று வாழ்வதைப் பார்க்கையில் வேதனையாகிறதே!

வாழ்வு மேம்பட பல விடயங்களை காலம்
தாழ்த்தாது தருவதுதான் கணினியின்
வலைத்தளங்கள் அதனை மறந்து பல
அபலைகளின் வாழ்வைச் சீரழிப்பதைச் சிந்திக்கையில் வேதனையாகிறதே!

மேதைகள் ஆவதே வாழ்க்கையின் இலட்சியம்
போதைதரும் சுகத்தினால் அதனை அலட்சியமாக்கி
போதனைகளின் வழிச் செல்லாது பல
சாதனைகளைப் பெறமுடியாத மானுடனை எண்ணுகையில் வேதனையாகிறதே!

வாழ்வைச் செம்மையாக்கும் அனுபவமுள்ள முதியோரைத்
தாழ்த்தி மதிக்காது துன்பம் தருபவர் என எண்ணி
கஷ்டங்கள் பல கொடுக்கும் இளம்பராய
துஷ்டர்களை நினைக்கையில் மனது வேதனையாகிறதே!

தொலைக்காட்சியின் நிழற்காட்சிகளில் காலமதைத்
தொலைத்துவிட்டு நிஜவாழ்க்கையைத் தேடும்
நிலையற்ற மனித வர்க்கம்
அலைபாய்ந்து நிற்பதைப் பார்க்கையில் வேதனையாகிறதே!

பெண்ணைப் பாதுகாக்க பாரிலே படைக்கப்பட்டவன்
ஆண்மகனெனப் பகர்கின்றன தர்மசாஸ்திரங்கள்
கண் போன்ற தாலிகட்டிய மனைவிளைக் கைவிட்டு
பணம் ஒன்றே குறிக்கோளாக அலைபவரை எண்ணுகையில் வேதனையாகிறதே!

ஒருவேளை சோற்றுக்கே அல்லலுறுபவர் ஒருபுறம்
பலவேளை கேளிக்கை விருந்துகளை கொண்டாடுவோர் மறுபுறம்
தர்மவழி நின்று ஏழைகளுக்கு உதவாத
அதர்மவழி நிற்கும் பணம்படைத்தவர்களைப் பார்க்கையில் வேதனையாகிறதே!

கலியுக மானுடனே! வேதனை தரும் செயல்கள் பல
மலிந்து பூமிதனில் கொட்டிக் கிடக்கின்றன
புத்தியுடன் சிந்தித்துச் செயற்படு! அவற்றைக் களை!
சத்திய யுகம் ஒன்று உருவாகும்.



# வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் "சான்றோர்" விருது பெறும் திரு.வை.சு.தனபாலசிங்கம். சமா.நீ.

ஈழத்தின் கோலத்தில் தலையாக விளங்கி நிற்கும் யாழ்ப்பாண நன் நகரில், பலதுறைகளிலும் சிறப்பு வாய்ந்த கொக்குவில் மண்ணில் யாழ்ப்பாணத் திருத்தலங்களில் ஒன்றான நந்தாவில் அம்மன் கோவிலடிக்கு அண்மையில் அமைந்த வீட்டில் திரு.திருமதி. சுப்பிரமணியம் நாகபூஷணியம்மா தம்பதிகளுக்கு மூத்த மகனாக 19.05.1944 அன்று திரு.தனபாலசிங்கம் அவர்கள் பிறந்தார்.

## கல்வி

பத்து வயதுவரை (1954) பெருமாள் கோவிலடி - சைவ வித்தியா விருத்திச் சங்கப் பாடசாலையிலும், சென்ற் சாள்ஸ் சாதனா கழகம் என்னும் பாடசாலையிலும், கல்வி பயின்றார். பின்னர் 1954ல் முரசுமோட்டையில் அரசு குடியேற்றத் திட்டத்தில் வீடும் காணியும் அவரது தந்தையாருக்கு அரசினரால் வழங்கப்பட்டதால், அங்கு சென்று குடியேறிய நிலையில் முரசுமோட்டை முருகானந்தா வித்தியாசாலையில் 5ம் வகுப்பு முதல் எஸ்.எஸ்.சி. வரை கல்வி பயின்றதுடன் 1960ம் ஆண்டு டிசம்பரில் எஸ்.எஸ்.சி. அரச பரீட்சைக்கும் தோற்றியிருந்தார்.

## தொழில்

- 1961 – 1965 வரை திருகோணமலை துறைமுகத்தில் தற்காலிகமாகக் கப்பலில் வேலை செய்தார்.
- 1965 – 1966 வரை கொழும்பு மகரகம லங்கா வஸ்திராலய என்னும் நிறுவனத்தில் நெசவுத் தொழில் செய்தார்.
- 1968ல் பரந்தன் ப.நோ.கூ.சங்க நெசவு நிலையத்தில் நெசவு வேலை செய்தார்.

## திருமணம்

1972ல் நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும், இலங்கை புகையிரதத் திணைக்களத்தில் சண்டராக வேலை பார்த்து ஓய்வு பெற்று முல்லைத்தீவு மாவட்டம் புத்துவெட்டுவானில் வசித்தவருமான திரு.செல்லையா முருகேசு – வியாளாச்சி தம்பதிகளின் மகளான ரதிதேவி என்பவரைத் திருமணம்

செய்து, சுதானந்தன், ஈஸ்வரானந்தன், அற்புதானந்தன், சுஜானந்த் என்னும் நான்கு ஆண்பிள்ளைகளினதும் சுமித்திரா ராணி என்னும் பெண்பிள்ளையினதும் தந்தையானார்.

இவர்களில் மூன்று ஆண்பிள்ளைகள் லண்டன் மாநகரிலும், பெண் பிள்ளை சுவிஸ் நாட்டிலும் வாழ்ந்து வருகின்றார்கள். ஒருவர் புத்துவெட்டுவானில் வசிக்கின்றார். இவர் 1972 முதல் இல. 32A புத்துவெட்டுவான், கிளிநொச்சி என்னும் முகவரியில் வசித்து வந்தார். புத்துவெட்டுவான், பழையமுறிகண்டிக்குளம் போன்ற கிராமங்கள் பின்தங்கிய கிராமங்களாகும். அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் தொடர்புகளுக்கும் கல்வியாளர்களைச் சார்ந்திருக்க வேண்டியவர்களாக இக்கிராம மக்கள் இருந்தனர்.

தமிழ்நாட்டுத் தமிழ் அறிஞர்களின் புத்தகங்கள், பத்திரிகைகள் மற்றும் பேச்சாற்றல்களில் கவரப்பட்டதால், இவரிடத்தும் தமிழ் ஆற்றல்கள் விளங்குவதை நாம் காணலாம். இதனால் இக் கிராமங்களின் மக்கள் தங்கள் தேவைகளுக்காக இவரை நாடி வந்தார்கள்.

இவரின் சேவை மனப்பான்மை சிறந்து விளங்கியதால் 1978ம் ஆண்டு கௌரவ X.M.செல்லத்தம்பு. (பா.உ) துணுக்காய்ப் பகுதி ப.நோ.கூ.சங்க நெறியாளர் குழுவுக்கு இவரையும் ஒரு உறுப்பினராகச் சிபார்சு செய்ததன் மூலம் இவரது பொதுச்சேவை ஆர்வத்துக்கு அடியெடுத்துக் கொடுத்துள்ளார். இரண்டு வருடங்கள் (1978 - 1980) நெறியாளர் குழு உறுப்பினராக இருந்தார்.

பின்னர் 1980 டிசம்பர் 08ம் திகதி வெளிநாடு செல்லும் ஆர்வத்தில் இத்தாலிக்குப் பயணமானார். அங்கு ஒன்றரை ஆண்டுகள் இருந்தபின் ஆறு மாதங்கள் “சென்ற் மேரீஸ்” என்ற ராங்கர் எண்ணெய்க் கப்பலில் வேலை செய்ததன் மூலம் ஸ்பெயின், அமெரிக்கா, பிரான்ஸ் மீண்டும் இத்தாலி போன்ற நாடுகளையும் சுற்றிப் பார்க்கும் பாக்கியமும் கிடைக்கப் பெற்றது. மத்திய அமெரிக்காவில் பனாமா கால்வாயையும் காணும் பாக்கியமும் கிடைக்கப் பெற்றது. இதனைத் தொடர்ந்து 1982 ஆகஸ்ட் 08ல் மீண்டும் இலங்கை திரும்பினார்.

## இதுவரை பங்கு கொண்ட பொதுச்சேவைகள்

(1) 1982 முதல் 1994 வரை துணுக்காய் ப.நோ.கூ.சங்க புத்துவெட்டுவான் – கிளைக்குழு செயலாளராகக் கடமையாற்றியுள்ளார்.

(2) 1982 - 1983 வரை புத்துவெட்டுவான் தில்லையம்பலப் பிள்ளையார் ஆலய பரிபாலன சபையின் தலைவராக இருந்தார்.

(3) 1983-1986வரைபுத்துவெட்டுவான்கிராமோதயசபைத்தலைவராகவும் பதவி நிலைச் சமாதான நீதிவானாகவும் இருந்துள்ளார்.

(4) 1986-1987வரைபுத்துவெட்டுவான்கிராமோதயசபைத்தலைவராகவும் பதவி நிலைச் சமாதான நீதிவானாகவும் இருந்துள்ளார்.

(5) 1986 - 1992 வரை துணுக்காய் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கப் பணிப்பாளர் சபை உறுப்பினராக இருந்தார்.

(6) 1988, 1989, 1990 புத்துவெட்டுவான் கிராமோதய சபைத் தலைவ ராகவும் பதவி நிலைச் சமாதான நீதிவானாகவும் கடமையாற்றினார்.

(7) 1985, 1986, 1987 வரை கிளிநொச்சி பொலீஸ் பிரிவுக்கான விழிப்புக் குழு உறுப்பினராகக் கடமையாற்றியிருந்தார்.

(8) 1987, 1988ல் புத்துவெட்டுவான் அ.த.க.பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளராகக் கடமையாற்றினார்.

(10) 1989, 1990ல் திருமுறிகண்டி இந்து வித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளராகக் கடமையாற்றினார்.

(11) 1997 முதல் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் (SLRC) ஆயுட்கால உறுப்பினராகச் செயற்பட்டு வருகின்றார்.

(12) 2001-2003 வரை தோணிக்கல் அருள்மிகு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலய பரிபாலன சபையின் பொருளாளராகக் கடமையாற்றினார்.

(13) 2005-2010 வரை தோணிக்கல் அருள்மிகு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலய பரிபாலன சபையின் செயலாளராகக் கடமையாற்றினார்.

(14) 2004 - 2014 வரை வவுனியா இந்துமாமன்ற நிர்வாக சபை உறுப்பினராக கடமையாற்றினார்.

(15) 2011 - 2014 வரை தோணிக்கல் - 214 F, கிராம அபிவிருத்திச் சங்க நிர்வாக சபை உறுப்பினராக இருந்துள்ளார்.

(16) 2017 முதல் தற்போதும் தோணிக்கல் - 214 F, கிராம அபிவிருத்திச் சங்க நிர்வாக சபை உறுப்பினராக இயங்கி வருகின்றார்.

(17) வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் நிர்வாக சபையின் உறுப்பினராக 2017 முதல் செயற்பட்டு வருகின்றார்.

(18) வவுனியா சேக்கிழார் மன்றத்தின் ஆயுட்கால உறுப்பினராகவும், செயற்குழு உறுப்பினராகவும் செயற்பட்டு வந்த இவர். 2018ம் ஆண்டு முதல் சேக்கிழார் மன்றத்தின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டு செயலாற்றி வருகின்றார்.

**பெற்ற கௌரவங்கள்**

(1) 2005ம் ஆண்டில் "அகில இலங்கை சமாதான நீதவான்" என்ற பட்டம் இலங்கை நீதி அமைச்சினால் வழங்கப்பட்டது.

(2) "சைவசிரோமணி" என்ற பட்டம் 2013ல் சப்ரகமுவ பல்கலைக் கழக சிரேஷ்ட தமிழ் விரிவுரையாளர் கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்களின் மணிவிழாவின் போது மணிவிழா குழுவினால் வழங்கப்பட்டது.

(3) "தமிழ் முகில்" என்னும் பட்டம் 2016ல் வவுனியா கோவிற்குளம் ஸ்ரீ அகிலாண்டேஸ்வரர் திருக்கோவிலும், வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியும் இந்தியத் தமிழ்நாடு திருவையாறு தமிழ் ஐயா கல்விக் கழகமும் இணைந்து நடாத்திய உரைநடைத் தமிழ் அனைத்துலக பதின்நான்காவது ஆய்வு மாநாட்டுக் குழுவினால் வழங்கப்பட்டது.

**திறமை**

1. கவிதை புனைவதிலும், கட்டுரை வரைவதிலும் மிகுந்த ஆர்வம் கொண்டவர். இவரது பல கவிதைகள் எமது மாருதம் சஞ்சிகை இதழ்களில் வெளிவந்துள்ளன.
2. சோதிடத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். ஜெனன ஜாதகக் குறிப்பு (உள்நாடு, வெளிநாடு) எழுதுவதிலும் தரம் மிக்கவர்.
3. தற்போது இல. 37, பார்க்குழி லேன், தோணிக்கல், வவுனியா என்னும் முகவரியில் வசித்துவரும் இவரின் சமய, சமூக, கலை இலக்கியப் பணிகள் இன்னும் தொடர்கின்றன. எமது வட்டத்தில் உறுப்பினராக தவறாது நிகழ்வுகளில் கலந்துகொள்பவர். நன்றாகப் பாடும் திறமை பெற்றவர்.

**கலை களில் நாட்டங்கொண்டு கலைஞராய் கவியுந்தந்தார்**
**இலக்கிய ரசனையோடு பாடல்கள் பலவுந்தந்தார்**
**நண்பர்கள் வியக்கும்வண்ணம் பல்துறைத் திறனுங் கொண்டார்**
**வட்டம் முன்னெடுக்கும் சேவை தொண்டிலும் முன்நிற்பாரே.**

**(ஈசன்)**

**நிறைவுரை**

சமூகத்திற்காகத் தன் அறிவையும் ஆற்றலையும் அயரா உழைப்பையும் நல்கிவரும் அகில இலங்கை சமாதான நீதவானான திரு.வை.சு.தனபாலசிங்கம் J.P. அவர்கள் அவர் இன்னும் பல்லாண்டு சுகத்தோடும் மகிழ்வோடும் வாழ வேண்டும் என வாழ்த்தி சான்றோர் விருது வழங்கி கௌரவிப்பதில் வட்டம் மகிழ்ச்சியடைகின்றது.

ஆசிரியர்

# உலகம் போற்றும் மொழியியலாளர் பேராசிரியர் சுசீந்திரராஜா

**கலாநிதி. கந்தையா ஸ்ரீகணேசன்,**
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மொழியியல் துறையின் முதல் தலைவராகவும், பேராசிரியராகவும், சிரேஸ்ர பேராசிரியராகவும் சிறப்புப் பெற்று, ஓய்வு நிலை தகைசார் பேராசிரியராகவும் பெருமைபெற்று அண்மையில் தனது 85 ஆவது வயதில் காலமானார். திருநெல்வேலி ஆசிரிய கலாசாலையில் முன்னாள் அதிபர் மயிலிட்டி சுவாமிநாதன் அவர்களின் ஒன்பது பிள்ளைகளில் ஏழாவது பிள்ளையான சுசீந்திரராஜா அவர்கள்

இளமையிலே தந்தையாரின் கல்விச்சூழல் காரணமாக தமிழோடும் சைவசமயத்தோடும் இரண்டறக் கலந்த புலமைச்சூழல் அவருக்கு வாய்த்தது. சைவாசிரிய கலாசாலை உப அதிபர் பொ. கைலாசபதி மற்றும் பண்டிதமணி கணபதிப்பிள்ளை ஆகியோரின் புலமை நுட்பங்களை சிறு வயதில் உள்வாங்கிய பேராசிரியர், "பொ. கைலாசபதியின் சிந்தனைகள்" என்னும் நூலை (ஆ. சபாரத்தினம் அவர்களுடன் இணைந்து) வெளியிட்டதோடு பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்களின் இலக்கியப் பணி பற்றி ஆராய்ந்து "ஈழத்து பண்டிதமணி" என்னும் நூலையும் ஆக்கியிருந்தார் (தொகுப்பு கந்தையா ஸ்ரீகணேசன்).

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையில் எம். ஏ. பட்டம் பெற்ற பேராசிரியர் ஆரம்பத்தில் தினகரன் பத்திரிகையில் உதவி ஆசிரியராகவும், யாழ்ப்பாணக் கல்லூரி தமிழ் விரிவுரையாளராகவும் சிறிது காலம் பணியாற்றியிருந்தார். தொடர்ந்து பட்டப் பின்படிப்பை – மொழியியலில் கலாநிதிப் பட்டப் படிப்பை அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் மேற்கொண்டார். பிரபல தமிழ் அறிஞர்களான பேராசிரியர்கள் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் மு. வரதராசன், எம். சண்முகம்பிள்ளை, எஸ். அகஸ்தியலிங்கம், எஸ். வி. சண்முகம் ஆகியோரிடம் கல்வி கற்றார். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் முதல் கலாநிதியாக பெருமை கொண்ட பேராசிரியர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும் களனியாப் பல்கலைக்கழகத்திலும் மொழியியல் விரிவுரையாளராகப் பணியாற்றி சிரேஸ்ர விரிவுரையாளராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 1981 முதல் பணியாற்றத் தொடங்கினார்.

'யாழ்ப்பாணத் தமிழ்' பற்றிய தமது ஆய்வை இலண்டன் எடின்பரோப் பல்கலைக்கழகத்தில் தொடர்ந்து மேற்கொண்டு அதனை ஒரு நூலாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடாகக் கொண்டு வந்தார். களனியாப் பல்கலைக்கழகப் பேராசிரியர் டபிள்யூ. எஸ். கருணாதிலக மற்றும் அமெரிக்க கோர்னெல் பல்கலைக்கழக பேராசிரியர் ஜேம்ஸ், டபிள்யூ. கெயர் ஆகியோருடன் இணைந்து 'பேச்சுத்தமிழுக்கு ஓர் அறிமுகம்' எனும் நூலையும், பேராசிரியர் கருணாதிலகவுடனும் இணைந்து 'இலக்கியத் தமிழுக்கான ஓர் அறிமுகம்' எனும் நூலையும் எழுதி வெளியிட்டு தமிழ்க் கல்வியினை பிறமொழி பேசுவோரும் கற்க வழிகோலினார்.

தஞ்சாவூர் பல்கலைக்கழக "தமிழ் சொற்களஞ்சியத்தின்" ஈழத்து தமிழ் சொற்களின் பகுதிக்குப் பொறுப்பாக இருந்து பணியாற்றியதோடு இந்திய மொழியியல் சங்கத்தின் உறுப்பினராகவும் கேரளா திராவிட மொழியியல் கழகத்தின் வாழ்நாள் உறுப்பினராகவும் திகழ்ந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. ரஸ்ய தமிழறிஞர் அந்தனோவ், இலண்டன் தமிழறிஞர் ஆகியோரின் பாராட்டுக்களைப் பெற்ற பேராசிரியரின் மொழியியல் ஆய்வுகள் ஈழத்து தமிழியலுக்கு ஒரு புதிய பரிமாணம் எனலாம். அதனால் உலகப் பேரேடுகளான அமெரிக்க தம் வரலாற்று "Research Board of Advisors 2000" எனும் நூலிலும், கேம்பிறிட்ஜ் சர்வதேச புலமையாளர் தம் வரலாற்று அகராதியிலும் பேராசிரியரின் பெயர் பதிவுபெற்றுள்ளமை ஈழத்தவர்களுக்கு ஒரு பெருமையான செய்தியாகும்.

மலையாளம், சமஸ்கிருதம் மற்றும் ஆங்கில மொழிகளில் பாண்டித்தியம் மிக்கவராக விளங்கிய பேராசிரியர் இந்திய அவுஸ்திரேலிய பல்கலைக்கழக கலாநிதிப்பட்ட ஆய்வேடுகளின் மதிப்பீட்டாளராகவும் இலங்கை அரசின் நூலாக்கக் குழுவின் உறுப்பினராகவும், கடமையாற்றி உள்ளார். உயர்ந்த ஆய்வு, கொள்கையில் இறுக்கம், தமிழ், சைவம் என்பவற்றின் பண்பாட்டம்சங்களில் ஆய்வு நுணுக்கம் எனப் பல அம்சங்களில் பேராசிரியர் சுசீந்திரராஜாவின் முத்திரை பலராலும் போற்றப்பட்டமை அறிவுலகம் அறிந்ததே. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் மற்றும் களனியாப் பல்கலைக்கழகம் ஆகியன பேராசிரியரை பெருமையான இலக்கிய கலாநிதியாக போற்றியமை பாராட்டுதற்குரியதாகும்.

பேராசிரியர் ஓய்வுகாலத்தில் எழுதிய "தமிழியல் சிந்தனைத் துளிகள்" பாகம் 1 மற்றும் 2 என்பன சேமமடு பதிப்பக வெளியீடுகளாக வந்தன. அத்துடன் இன்னொரு நூலான "இலங்கை இந்திய தமிழ் வழக்குகளில்

சொற்களின் பயன்பாடு" என்பது கலாநிதி க. இரகுவரனின் தொகுப்பாக இந்து கலாசாரத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டது. குமரன் புத்தக இல்லத்தின் வெளியீடாக வந்த "கல்விசார் தொடர்புகள். நினைவுகள், சிந்தனைகள்" எனும் வரலாற்றுப் பதிவு நூல் பேராசிரியரின் நுண்மாண்நுழைபுலத்தை எதிர்காலச் சந்ததியினர் அறிய வழிகோலும் என்றால் மிகையாகாது.

பேராசிரியர் சுவாமிநாதன் சுசீந்திரராஜா அவர்கள் 1999 இல் ஓய்வுபெற்ற போது "ஊர் அறியாத புலமையாளர் உலகறிந்த மொழியியலாளர்" என் பேராசிரியர் சிவச்சந்திரன் எழுதியிருந்தார்.



21 ஆண்டு நிறைவு விழா



## வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் "சான்றோர்" விருதுபெறும் திரு.இரா.சுப்பிரமணியம். சமா.நீ.

வவுனியா மாவட்டத்தின் சமய, சமூக, கலை இலக்கிய, அரசியல், வரலாற்றில் நினைவு கொள்ளத்தக்க பணிகளை ஆற்றி மக்கள் மனதில் நீங்கா இடம் பிடித்திருக்கும் திரு. இரா.சுப்பிரமணியம் அவர்கள் மலையகத்தின் இரத்தினபுரி மாவட்டத்தில் திரு. இராசலிங்கம் இராமசாமி, பாக்கியம் தம்பதிகளின் மகனாக 07.01.1942 இல் பிறந்தார். இவரின் ஒரே சகோதரியின் பெயர் கமலம்.

இவர் தனது ஆரம்பக்கல்வியை தோட்டப் பாடசாலையில் கற்றார். இந்தியாவில் இருந்து வந்திருந்த திரு நவமணி என்பவர் ஆரம்பக்கல்வி ஆசிரியராக கற்பித்தார். தமிழில் வித்தியா மாளிகை என்ற புத்தகமும் ஆங்கிலத்தில் New, MOTHER READER ஆகிய புத்தகங்கள் கற்பிக்கப்பட்டன. பின் மத்துகம சென்ட் மேரிஸ் பாடசாலையில் சென்று பத்தாம் ஆண்டுவரை கல்வி கற்றார்.

மலையகத்தில் காலத்துக்குக் காலம் இடம் பெற்றுவந்த கலவரங்கள் மற்றும் பல்வேறு காரணங்களால் பலர் வன்னியில் வந்து குடியேறியுள்ளனர். திரு இரா.சுப்பிரமணியம் அவர்களும் அவர்களில் அடங்குவார்.

1958 இல் எமது நாட்டில் ஏற்பட்ட இனக்கலவரத்தால் மலையக மக்கள் பாதிக்கப் பட்டபோது திரு சுப்பிரமணியம் அவர்களும் பாதிக்கப்பட்டார். தமிழரசுக்கட்சியின் தலைவர் தந்தை செல்வநாயகம் அவர்களுக்கு இனக் கலவரத்தில் ஏற்பட்ட பாதிப்புக்களை விரிவாக கடிதமாக எழுதி ஆலோசனை கேட்டார்.

"அங்கே வாழ முடியாதுவிட்டால் வவுனியா போன்ற தமிழ் மாவட்டங்களில் வந்து குடியேறுங்கள்" என்று தந்தை செல்வநாயகம் அவர்கள் இவருக்குப் பதில் எழுதினர்.

அதை ஏற்று இவர் 1961 இல் வவுனியாவிற்கு வந்து நெளுக்குளம் என்ற கிராமத்தில் குடியேறி தனது வாழ்க்கையைத் தொடர்ந்தார். அதன்பின் மலையகத்தில் இருந்து வவுனியாவில் வந்து குடியேறிய பலருக்கும் பற்றுக்கோடாக விளங்கியவர் இவர் என்று சொல்லலாம்.

வவுனியாவின் வடமேற்குப் பகுதியில் இருந்த காட்டுப் பிரதேசத்தை வளம் மிக்க விவசாயப் பூமியாக மாற்றி கணேசபுரம் என்று பெயர் வைத்து 1962 ஆம் ஆண்டில் மலையகத்தமிழர்கள் பலரை அங்கு குடியேற்றினார்.

வவுனியாவில் அப்போது வாழ்ந்து கொண்டிருந்த சமூக, அரசியல் பெரியார்களுடன் நல்ல நட்புறவைக் கொண்டவராக விளங்கிய இவர், அரச அதிகாரிகளுடன் உரையாடி தமது தேவைகளை நிறை வேற்றிக் கொள்வதற்கு அரும் பாடு பட்டுள்ளார்.

1966 இல் கற்பக புரம், சிவபுரம், சமய புரம், முதலான கிராமங்களை உருவாக்குவதில் முக்கியமானவராகச் செயற்பட்டார். இதன் சிறப்பாக இன்று **மணிபுரம்** என்று அழைக்கப்படும் கிராமத்துக்கு அன்றைய காரியாதிகாரி (D.R.O) திரு. நாகராஜா அவர்கள் இவரது பெயரையே சுருக்கி வைத்தார். இரா.சுப்பிரமணியம் என்ற பெயரிலுள்ள மணி என்ற சொல்லை எடுத்து மணிபுரம் என்று வைத்தார்.

டாக்டர் இராஜசுந்தரம் மூலம் இக்கிராமங்களை அபிவிருத்திசெய்வதற்காக அல்லும் பகலும் அரும்பாடுபட்டார் இவர். திரு. பொ.திருஞானசம்பந்தன் (வ.தெ.த.பிரதேச சபைத் தலைவர்), திரு. நா.சேனாதிராசா, திரு தேவராசா (கிராமசேவையாளர்) திரு. ச.சுப்பிரமணியம் (நகரசபைத் தலைவர்) திரு. தா.அப்புத்துரை, திரு.V.T.சுப்பிரமணியம், திரு.வை.சிற்றம்பலம் (மொடேர்ன் ஸ்ரோர்ஸ்) முதலான சிலரை தமக்கு பல வழிகளிலும் உதவியவர்களாக நினைவு கூருகிறார்.

## கலை இலக்கியம்

தனது பதின்நான்காவது வயதில் எழுத்துத் துறையில் ஈடுபடத்தொடங்கிய இவர் நாடகக் கலைஞனாக பல நாடகங்களை மேடை ஏற்றியுள்ளார். வவுனியா நகரசபை முற்றவெளி மைதானத்திலும், பல கிராமங்களிலும் **போர்வாள், ஐந்து விரல்கள். நெற்றிக் கண், யார் குற்றவாளி, நீதி நிலைக்கும், தாய்ப்பாசம், ஒருதுளி கண்ணீர், குடிகாரக் குடும்பம், யார் துரோகி, கருப்புச்சாமி, மௌன விரதம்** முதலான பல நாடகங்களை மேடையேற்றி பலரதும் பாராட்டுக்களைப் பெற்றார்.

**அன்னை இந்திரா, தந்தை செல்வா ஒரு காவியம், நாம் கண்ட தலைவர் அமிர்தலிங்கம், உலகப் போர் 1,2,, இலங்கை மன்னன் இராவணன்,** ஆகிய நூல் களை எழுதி வெளியிட்டுள்ளார். சிறந்த பேச்சாளனாகவும் நல்ல தமிழ்ப் பற்றாளனாகவும் விளங்கும் இவர் சிறந்த வாசகர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## இவர் வகித்த பதவிகள்

தலைவர்– ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயம் – கணேசபுரம்.

மாவட்ட தேசோதயத் தலைவர் – சர்வோதயம்

தலைவர் – கிராம அபிவிருத்திச் சங்கம்

தலைவர் – சிவில் பாதுகாப்புச் சபை (218 C, மருக்காரம் பனை)

உறுப்பினர், சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்க இயக்குனர் சபை.

**பரிசுகள், பட்டங்கள்**

இவருக்கு மத்திய அரசு இவரது கலை இலக்கியப் பணிகளைப் பாராட்டி 2014 இல் **கலாபூஷணம்** விருது வழங்கிக் கௌரவித்துள்ளது.

தமிழ்நாடு திருச்சி தமிழ்ச் சங்கம் இவருக்கு **கலைமணி** என்ற பட்டத்தை 1990 இல் வழங்கிக் கௌரவித்தது.

சர்வோதயம் இவருக்கு 1991 இல் சிறந்த சேவையாளருக்கான **தேசோதயதீபம்**. விருது வழங்கிக் கௌரவித்தது.

2017-01-17 இல் நடைபெற்ற சர்வோதய நூற்றாண்டு விழாவில் **"மண்ணின் மைந்தன்"** என்ற விருதை வழங்கிக் கௌரவித்தது.

2013-06-02 இல் கலாநிதி கனக சபாபதி நாகேஸ்வரன் மணிவிழாக் குழு இவருக்கு **"சைவ சிரோன்மணி"** விருது வழங்கிக் கௌரவித்தது.

இவரின் பணியைப் பாராட்டி இவர் பங்கு கொண்ட பல சங்கங்கள் இவரைப் பாராட்டிக் கௌரவித்துள்ளன.

**அரசியல்**

அரசியலில் பெரும் ஈடுபாடு கொண்ட இவர் தமிழரசுக் கட்சியில் சேர்ந்து வவுனியா அரசியல் மேடைகளில் பேச்சாளராக மிளிர்ந்தார். பின் தமிழர் விடுதலைக் கூட்டணி மேடைகளிலும் பிரகாசித்தார். 1989 இல் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு பாராளுமன்ற அங்கத்தவராகத் தெரிவு செய்யப்பட்டார். இருப்பினும் வவுனியா இடப்பெயர்வின் காரணமாக உரிய கடிதம் இவருக்குக் கிடைக்காமையால் சத்தியப்பிரமாணம் செய்ய முடியாமல் போய் விட்டது.

நீதி அமைச்சினால் சமாதன நீதவானாக 13.01.2004 இல் நியமிக்கப்பட்ட இவரின் மனைவியின் பெயர் மாரியாயி, பிள்ளைகள் ராசேந்திரன், ராமநாதன், ராதாகிருஷ்ணன், அன்பழகன், தமிழ் வாணன், மகேஸ்வரி, விஜயகுமாரி ஆகியோராவர்.

தற்போது கணேசபுரம் கிராமத்தில் வாழ்ந்துவரும் இவர் இன்னும் நீண்டகாலம் உடல் உள ஆரோக்கியத்தோடு வாழ்ந்து சமூகத்திற்கும், தமிழ் மொழிக்கும் பணியாற்ற வேண்டுமென்று இறைவனை வேண்டுகிறேன்.

வவுனியா மாவட்டத்தின் பல்வேறு வகையான வளர்ச்சிக்கும் அரிய பங்களிப்பைச் செய்த திரு. இரா. சுப்பிரமணியம் அவர்களுக்குச் சான்றோர் விருது வழங்கிக் கௌரவிப்பதில் வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம் மகிழ்ச்சியடைகின்றது. பெருமிதம் கொள்கின்றது.

**அகளங்கன்**

# ஊரும் பெயரும்

**"தமிழ்வாரிதி"வீரசிங்கம் பிரதீபன்**
கலாசார உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம், வவுனியா.

1. வடக்கின் வாசலாம் வவுனியா நகர்
வானுறு தமிழ்ச் சுவைத் தேன் சொரியும்.
வன்னியின் இதயமாய் வளம் பல பேசியே
வந்தோரை வரவேற்று வாழ்வு தரும்.
முல்லையும், மருதமும் சிறு சிறு குன்றுடன்
மயங்கியே மக்களின் குறை தீர்க்கும்.
மூவின மக்களும் முறையுடன் கூடியே
வாழ்ந்திடவே பெரு வழி வகுக்கும்.

2. குடியிருப்புப் பதி அடியவர் கை தொழ
வாழும் கணபதி காத்து நிற்க,
அகிலாண்ட ஈஸ்வரர் அள்ளியே வரம் தர
கொண்டல் நிறை கோயிற்குளம் மிளிரும்.
ஆறு முகத்தவர் ஏறும் புதுக்குளம்
ஆறு முகத்தான் புதுக் குளமாம்.
வைரவர் அடியவர் குறைகளைத் தீர்த்திட
வைரவ புளியங் குளம் அமர்ந்தார்.

3. தோணி புரத்தீசன் நாடி வன்னி வந்து
கோயில் கொண்டான் தோணிக் கல்தனிலே,
வேலன் கதிர்காம நாதன் தருவேலை
தாங்கியே வேலன் குளம் வாழும்.
பேராறு வளைந்திட நீராறு பெருகியே
சாஸ்திரி கூழாங் குளம் நனையும்.
கூமா மரம் நிறை சோலைகள் சூழ்ந்திடக்
கூமாங் குளம் பெரும் குளிர்மை தரும்.

4. பண்டாரி குள வாயிலிலே நின்று
முத்து மாரியும் அருள் சொரிய
தாண்டும் பயணிகள் சேரும் ஒரு களம்
தாண்டிக் குளம் எனும் சிற்றூராம்,
மருத மடுவுடன், பாலமோட்டை இவை
தந்திடும் ஆவினப் பெரும் செல்வம்.
ஈச்ச மரங்களால் வேலி கட்டிக் காக்க
ஈச்சங் குளமது விளைவு தரும்.

5. இராசேந்திரன் குளம், மாளிகை என்றவை
கருங்கற் பண்பாட்டின் மூலதனம்
கள்ளிக் குளம் எனும் எல்லைக் கிராமமே
காராளர் ஏர் கொண்ட குடியாகும்.
கொம்பறை கட்டியே பொலி காத்து நின்றவர்
சேமமடு உறை காராளர்.
பறன் கட்டி நெல் வயல் காத்திட்ட வகையதால்
பறநாட்ட கல்லும் ஊராச்சே.

6. வவுனியன் விளாங்குள அலைகரை வெளிக்குள
வாயிலைத் தொட்டே முத்தமிடும்.
நொச்சிமோட்டை ஆறு யாழ் வீதிக் குறுக்காக
ஆடியே, ஓடியே வளம் பெருக்கும்,
முளரிகள் பூத்திட புளகமும் எய்தியே
நெளுக்குளம் நறுமணம் சிந்தி நிற்கும்.
பம்பை மடுக்குள மரங்களிலே பல
மந்திகள் குந்தியே பேன் எடுக்கும்.

7. பட்டாணி வர்க்கத்தின் உறைவிட மாகியே
சீர் பெற்று நின்றது பட்டாணிச்சூர்.
அருவி பாயும் வேகம் அமைதி காணவென
மூன்று முறிப்பினில் தடைகளுண்டு.
சமளங் குளத்து நீர் ஆசிகுளம் தேடி
பச்சை வயலுக்குப் பாலூட்டும்.
எமது நிலம் என கூடிய மக்களும்
சேர்ந்து நின்றே கும்மி பாடி வர

8. பூமகள் மகிழ்ந்திடப் புகழ்ந்திட நரசிம்மர்
வீற்றிருக்கும் பதி பூந்தோட்டம்.
றம்பைக்குளம், மகாறம்பைக்குளம் குளத்தடை
காத்தார் சின்னக் குளம் மகிழும்.
பூவரசன் குளம் பேரரசர் நிலம்
ஆமென்றே வர லாறு பேசிவரும்.
செக்குகள் சுற்றிட சேர்ந்திட்ட வளம் கண்டு
செங்கடிப் புலவு செல்வம் தரும்

9. மரக் காரை மரம் சிந்திடும் தேன் கண்டு
மரக் காரம் பளை ஊர் சிரிக்கும்.
பன்றிகள் பற்றையை நாடிப் பதிங்கிடும்
பன்றிக் கெய்த குளம் தனிலே.
சாளம்பை மரக் கூட்டம் நிறைந்திட நடுவிலே
சாளம் பைக் குளம் நீர் பெருக்கும்.
கந்தர் அவருக்கு சொந்த மெனநின்றே
கந்தபுரம் எனும் ஊர் சிரிக்கும்.

10. மருத மர நிழல் மருவும் உயிர்களை
மருதங்குள வயல் வரவேற்கும்.
கற்களின் நடுவிலே ஊற்றுக்கண் திறந்து
கல்மடு ஊரெங்கும் செழிப்புத் தரும்.
மகிழ மரங்களின் வரவேற்பு கண்டுமே
மகிழங் குளம் அது மகிழ்வு தர
இள மருத நிழல் அலகில் சுகம் தர
இள மருதங் குள ஊர் மகிழும்.

11. ஆண்டாண்டு காலமாய் தமிழரின் தேசமாய்
மாண்புற்று நிற்பது வவுனியா மண்.
ஆய கலை, கல்வி, தூய செல்வம் இவை
பெருகியே மங்கலம் தந்திடவே
மாவீரன் பண்டார வன்னியன் சிலையாகி
எழுந்துடன் நிற்பதும் இவ்விடமே.
வாழ்க வளம் கண்டு மேன்மை நலன் கொண்டு
வாழிய வவுனியா வாழியவே.

(வவுனியா பிரதேசத்தின் 42 கிராமசேவகர் பிரிவுகளும் உள்ளடக்கிய கவிதை)

# வவுனியா பண்டாரிகுளம்
# முதலியார் அமரர் சபாரட்ணம் தியாகராஜா நினைவு
# மாணவச் சாதனையாளர் விருது – 2019

பாடசாலை மாணவர்களின் தமிழ் அறிவை வளர்க்கவும், அவர்களது தமிழியல் சார்ந்த செயற்பாடுகளை அதிகரிக்கவும் மாணவச் சாதனையாளர் விருது திட்டத்தை 2016 ஆம் ஆண்டில் ஆரம்பித்து நடைமுறைப்படுத்தி வருகிறோம்.

அடுத்த தலைமுறையை தமிழியல் சார்ந்த துறைகளில் உற்சாகப் படுத்தவும், ஊக்கப்படுத்தவும், மட்டுமன்றி, தமிழ் அறிவோடும், தமிழ் உணர்வோடும் தமிழ்ப் பண்பாட்டோடும் வாழக்கூடிய தமிழர்களை உருவாக்கவும் இந்தத் திட்டம் உதவும் என்ற நம்பிக்கையில் இந்தத் திட்டத்தைத் தொடங்கினோம்

மாணவர்கள் தமது பாடசாலைக் காலத்தில் தமிழியல் சார்ந்த போட்டிகளில் பெற்ற சான்றிதழ்களின் அடிப்படையில் கடந்த ஆண்டில் முதல் நான்கு மாணவர்களைத் தேர்ந்தெடுத்து பத்தாயிரம் ரூபா பணப்பரிசும், சான்றிதழும், நினைவுப் பரிசும், புத்தகங்களும் வழங்கினோம்.

கடந்த மூன்று ஆண்டுகளில் நான்கு, ஐந்து, நான்கு, மாணவர்கள் என பதின் மூன்று மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கியுள்ளோம்.

போட்டியில் பங்குபற்றிய மொத்தம் 109 மாணவர்களுக்கும் ஈழத்து எழுத்தாளர்களின் தலா ஐநூறு ரூபாவுக்கும் மேலான பெறுமதியுள்ள நூல்களை பரிசாக வழங்கினோம்.

வவுனியா மாவட்டத்தில் க.பொ.த. உயர்தர வகுப்புக்களைக் கொண்ட இருபத்தொன்பது தமிழ்ப் பாடசாலைகள் உள்ளன. இந்த ஆண்டும் அப்பாடசாலைகளுக்கு போட்டி விதிமுறைகளையும் விண்ணப்பப் படிவங்களையும் அனுப்பியிருந்தோம்.

வவுனியா மாவட்டப் பாடசாலை ஒன்றில் கல்விகற்பவராகவும் 2019 இல் க.பொ.த.உயர்தரப் பரீட்சைக்கு முதல்த் தடவையாகத் தோற்றுபவராகவும் உள்ள மாணவர்களுக்கு மட்டுமே இப்போட்டி நடாத்தப்பட்டது.

நாற்பத்தி ஆறு மாணவர்கள் இம்முறை இப்போட்டியில் முறைப்படி கலந்து கொண்டார்கள். அவர்களில் மூன்று மாணவர்கள் இந்தமுறை பரிசுக்கு உரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள். ரூபா பத்தாயிரம் பணப்பரிசும் வழமைபோல ஏனைய பரிசுகளும் அவர்களுக்கு வழங்கப்படுகின்றன.

**வவுனியா பண்டாரிகுளத்தில்** சிறப்போடு வாழ்ந்து அமரத்துவம் எய்திய **நீதிமன்ற முதலியார் அமரர் சபாரட்ணம் தியாகராஜா** அவர்களின் நினைவாக அவரது மகனும் எனது மாணவனும் வவுனியா மாவட்டத்தின் கல்வி, கலை இலக்கிய சமூக வளர்ச்சியில் பெரிதும் அக்கறை கொண்டவரும், கவிஞருமாகிய லண்டனில் தற்போது வாழ்ந்து கொண்டிருக்கும் பொறியியலாளர் திரு.தி.மகேஸ்வரராஜா அவர்கள் தனது தந்தையாரின் நினைவுப் பரிசாக இத்திட்டத்தை நடாத்த உதவுவதற்கு முன்வந்தார். அவருக்கு எமது மனமார்ந்த நன்றி.

இவ்வாண்டுக்கான **முதலியார் ச.தியாகராஜா நினைவு மாணவச் சாதனையாளர் விருது பெறுவோர்.**

**செல்வி.ரிஷோபிகா செயரூபன்.** இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம், இல.271/1, முதலாம் ஒழுங்கை, உக்குளாங்குளம், வவுனியா.

**செல்வி.மயூரி பேரின்பநாயகம்.** இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம். இல.46, நேரியகுளம் வீதி, நெளுக்குளம், வவுனியா.

**செல்வி.யுவேதா ஜெயராஜா.** சைவப்பிரகாச மகளிர் கல்லூரி மருக்காரம்பளை வீதி, நெளுக்குளம் வவுனியா.

ஏனைய நாற்பத்தி மூன்று மாணவர்களுக்கும் ஈழத்துப் படைப்பாளிகளின் ரூபா ஐநூறுக்கும் குறையாத மதிப்புள்ள புத்தகங்கள் பரிசாக வழங்கப்படும்.

இவர்களுக்கு எமது பாராட்டுக்கள். வாழ்த்துக்கள். வாழ்க தமிழுடன், வளர்க தமிழுடன். உயர்க தமிழுடன். நன்றி.

ஆசிரியர்.

## 9ம் ஆண்டு நினைவஞ்சலி - 20.12.2019

வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்ட பொருளாளர் ஆக கடமையாற்றி அமரத்துவம் அடைந்த அமரர் கனகசபாபதி ரணேஷ் (மல்ரிவிஷன் அச்சுக் கலையக நிர்வாக பணிப்பாளரும் பாடசாலை அதிபரும்) அர்களுக்கு வட்டத்தின் அஞ்சலிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# உதிர்த்த ஞாயிறு

சிவநெறிப்புரவலர்
**சி.ஏ.இராமஸ்வாமி**

உயிர்த்த ஞாயிறு என்றொருநாள்
உகுத்தன உயிர்கள் ஏராளம்
பயித்தியம் பிடித்தவன் போலோருவன்
படுகொலை செய்தனன் தானிறந்தான்
பயிரென விளங்கிய பிள்ளைகள்தாமும்
பெற்றவர் உற்றவர் உறவினரென்று
முயன்றும் முடியாமல் தாமிறந்தார்
மூடர்களால் விளைந்த பயனிதுவாம்

முப்பது ஆண்டுகள் யுத்தமிங்கே
முடிந்தது என்றே தானிருந்தோம்
உப்பது இன்றி உணவருந்தி
இருந்தது தானும் நாம்மறந்தோம்
செப்பிட முடியாச் சோகம்இது
சிந்தனை இல்லா வேலைஇது
தப்பிக்கக் கூடா திவர்கள்என்று
சபதம் எடுத்திட வேண்டுமின்று

இனவெறி கொண்ட கொள்கைகளால்
இப்படியெல்லாம் கொலை செய்கின்றார்
வனசரர் என்றொரு சொல்லுண்டு
வேடர்கள் இப்படிச் செய்யவில்லை
தனதின மக்களே உயர்ந்ததென்று
தரணிக் குரைத்திட முனைகின்றார்
சினமுடை யோர்கள் அழிவதென்று
சிந்திக்க முடியாத சிறியரிவர்

ஆட்சியைப் பிடித்திடும் நோக்கத்துடன்
அரசியல் நடத்திய காரணத்தால்
வீட்சியைக் கண்டது நாடுஇன்று
விதைத்த வினைதான் விளைந்ததின்று
தாட்சியம் இன்று தேடியவர்
தண்டித்து உயிரைப் போக்கவேண்டும்
காட்சியைக் கண்டிடச் செய்யவேண்டும்
கண்டவர் இதனை உணரவேண்டும்

வீரம் என்பது இதுஅல்லவே
விடுதலை பெற்றிடப் போரும்செய்தார்
ஈரம் இற்றுயிர் பறிப்பதனால்
இறைவனுக்கும் இது ஏற்புடைத்தோ?
சாரம் இல்லாத வாழ்க்கையினைச்
சாரம் கட்டியே வாழுகின்றார்
நேரம் வந்தது இவர்அழிய
நேர்ந்து விட்ட ஆடுகள்போல்



21 ஆண்டு நிறைவு விழாவின் போது திரு.தி.மகேஸ்வரராஜா குடும்பம் (லண்டன்) மங்கள விளக்கேற்றுதல்



## வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் சான்றோர் விருதுபெறும் திரு.ப.எ.அன்ரன் பரந்தாமன் (தமிழினியன்)

வவுனியாவில் 1979 இல் வவுனியா இலக்கிய வட்டம் ஒன்றை நாங்கள் ஆரம்பித்தபோது எம்மோடு இணைந்துகொண்டு இலக்கியத்தில் பயணித்தவர் அன்ரன்.

அந்த இலக்கியவட்டத்தின் தலைவராக நானும்(அகளங்கன்) இணைச் செயலாளர்களாக திரு.பொ.மாணிக்கவாசகம், திரு.ஆர்.என்.எஸ்.மணி ஆகியோரும் உபதலைவராக திருமதி தமயந்தி சுந்தரலிங்கம்(தமிழ்க்கவி) அவர்களும் மற்றும் உறுப்பினர்களும் செயற்பட்டோம்.

அந்த இலக்கிய வட்டம் 1984 இன் பின் செயலிழந்துபோனபின் 1997 இல் மாசிமாத முழுநிலா நாளில் தொடங்கப்பட்டதுதான் இப்போது இயங்குகின்ற வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம். இந்த வட்டத்தோடு சேர்ந்து அன்டன் அவர்கள் கடந்த பத்து ஆண்டுகளுக்கும் மேலாக இயங்கி வருகிறார்.

தற்போது கன்னாட்டியில் வாழும் இவர் அங்கிருந்து எமது மாதாந்த முழுநிலாக் கருத்தாடல் நிகழ்வுகளுக்கு வந்து கலந்துகொண்டு இலக்கியப் பணியில் ஈடுபடுகிறார். எழுபத்திநான்கு வயதைத் தாண்டிய பின்னும், உடலில் தளர்வு, தடியூன்றி நடக்கும் நிலையிலும் தவறாமல் வருகிறார்.

எம்மால் வெளியிடப்படும் மாருதம் ஆண்டு இதழில் தவறாது கவிதைகளை எழுதிவருகிறார். தமிழினியன் என்ற புனைபெயரில் இவரது ஆக்கங்கள் வெளிவருகின்றன.

இவர் 1944 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 15 ஆம் நாள் (15-7-1944). கண்டி மாவட்டத்திலுள்ள கலகா என்ற இடத்தில் முருகன் பழனிச்சாமி, பூமாலை நாச்சியார் தம்பதிகளின் ஆறு பிள்ளைகளில் ஒருவராகப் பிறந்தார். இவரோடு நான்கு ஆண் சகோதரர்களும் ஒரு பெண் சகோதரியும் பிறந்தனர்.

இவரோடு சிவப்பிரகாசம், கைலைநாதன், சச்சிதானந்தன் ஆகியோர் மட்டுமே இப்போது வாழ்கிறார்கள். இராமநாதன், ஜெகதாம்பாள் ஆகியோர் காலமாகிவிட்டனர்.

இவரது தந்தையார் மலேசியாவில் சிறப்பாக வாழ்ந்தவர். மலாய், ஆங்கிலம், ஆகிய மொழிகளில் மிகவும் தேர்ச்சி பெற்றவர். இலங்கைக்குத் திரும்பியபின் பெரியோர்களின் ஆங்கிலப் பேச்சுக்களை உடனடியாக மேடையில் மொழி பெயர்ப்பவராகப் புகழ் பெற்றிருந்தார்.

மலேசியாவில் வாழ்ந்த காலத்தில் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்களின் இந்திய தேசிய இராணுவத்தில் இணைந்து பணியாற்றினார். இலங்கையில் காந்தீய வழியில் தங்களின் உரிமைகளுக்காகப் போராடினார்.

அன்ரன் அவர்கள் கண்டி கலகா தமிழ்ப் பாடசாலையில் ஆறாம் ஆண்டுவரை கல்விகற்றார்.1958 இல் சிங்கள மாணவர்களை அப்பாடசாலையில் சேர்த்ததனால் ஏற்பட்ட எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டதனால் குற்றம் சுமத்தப்பட்டு யாழ்ப்பாணம் குருகுலத்தில் சேர்க்கப்பட்டார். காரைநகர் யாழ்டன் கல்லூரியில் இரண்டு ஆண்டுகள் கல்வி கற்று பின் பேராதனை இந்துக்கல்லூரியில் க.பொ.த. உயர்தரம் கற்றார். பரந்தாமன் அவர்கள் கிறிஸ்தவ சமயத்துக்கு மாறியதால் எட்வேர்ட் அன்ரன் என்று பெயர் வைக்கப்பட்டார்.

பாடசாலைக் காலத்தில் பல நாடகங்களில் நடித்துள்ளார். பின்பு தானே பல நாடகங்களைத் தயாரித்து மேடை ஏற்றினார். ஈழத்தின் பிரபல நடிகை சந்திரகலா, மற்றும் பிரபல ஈழத்து தமிழ் சினிமா கலைஞரான பேராதனை ஜுனைதீன் முதலானவர்களோடு கொழும்பில் நாடகங்களில் நடித்துள்ளார். வவுனியாவிலும் மேடை நாடகங்களைத் தயாரித்து நெறி ஆளுகை செய்து நடித்துமுள்ளார்.

**விந்தியத்தின் விளிம்பிலே, தாய்நாடு காத்த தனயன்,** முதலான சில நாடகங்கள் இவரின் நடிப்பில் சிறப்புப் பெற்றன. பல சிறுகதைகளையும் கட்டுரைகளையும், கவிதைகளையும் இவர் எழுதியுள்ளார். சுதந்திரன் பத்திரிகை, வெரித்தாஸ் வானொலி, புதிய உலகம் சஞ்சிகை, முதலானவற்றில் இவரது ஆக்கங்கள் வெளிவந்துள்ளன.

**எண்ணங்கள் மாற்றப்படும்போது, மலைமுகடுகளில் மாலைநேர முகவரி, மழைக்குப் பூத்த காளான்கள், ஊசிமுனையில் ஒட்டகம் நுழைந்தாலும்,** முதலான இவரது பல சிறுகதைகள் வெளிவந்துள்ளன.

சில காலம் கப்பலில் வேலைசெய்தார். எமது நாட்டு விடுதலைப் போராட்டக்காலத்தின் ஆரம்பத்தில் தனது கணிசமான பங்களிப்பை வழங்கினார். யுத்தம் வலுத்த காலத்தில் இந்தியாவிற்குச் சென்றார். அங்கும் தமிழ், கலை, கவிதை, இலக்கியம் என சுறுசுறுப்பாக இயங்கினார்.

தாயகம் திரும்பியபின் இன்றுவரை தொடர்ந்து இலக்கியப் பணியிலும், பல்வேறு சமூகப்பணிகளிலும் இயங்கிவருகிறார்.ஆங்கில ஆசிரியராக பலருக்கு ஆங்கிலம் போதித்துவருகிறார். கடந்த பாராளுமன்ற பொதுத்

தேர்தலிலும் போட்டியிட்டார்.

எமது ஆண்டு விழாக்களில் கவிதை வாசித்தும், மாதாந்த நிகழ்வுகளில் கருத்துக்களைத் தெரிவித்தும், மாருதம் சஞ்சிகையில் கவிதைகள் எழுதியும் ஆண்டுவிழாக்களுக்கு ஒத்துழைப்பு வழங்கியும் வருகிறார். கவிதைத் தொகுப்பு ஒன்றை வெளியிடும் முயற்சியில் இறங்கியிருக்கிறார்.

இவரது மனைவியின்பெயர். மரியசெல்வம். சுரேஷ்குமார்(எ)கிங்ஸ்லி ஜோசப், சுலோச்சனா(எ)இவேட்னி, சுதர்சினி(எ)மெற்றலின்,( அகால மரணம்), சுகுமார்(ஹஸ்ரன்), ஈழ சுகந்தினி(மேரியன்),சுஜீவனி(ஆன்) ஆகிய ஆறு பிள்ளைகள் எட்டுப் பேரப்பிள்ளைகள், மூன்று பூட்டப்பிள்ளைகள் கண்டவர்.

இவரது மகன் சுகுமார் தென்னிந்திய சினிமாத்துறையில் நடிகராகவும், இயக்குனராகவும் தொழில் புரிகிறார்.

அன்ரன் அவர்கள் இன்னும் நீண்டகாலம் சிறப்பாக வாழ்ந்து கலை, இலக்கிய சமூகப் பணிகளை ஆற்றிட வாழ்த்தி, வட்டத்தின் சார்பில் இந்த ஆண்டுக்கான சான்றோர் விருது வழங்கிக் கௌரவிப்பதில் வட்டம் மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறது.

அகளங்கன்



ஞானப்பழம் (பா நாடக) நூலிற்காக
வடமாகாண சிறந்த நூற்பரிசு பெறுகிறார் அகளங்கன்

# காலத்தால் அழிக்க முடியாத கருத்தோவியம் கவிக்கோ

**ந.பார்த்தீபன்**
சிரேஸ்ட விரிவுரையாளர்,
வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி

"நான் கலீல் ஜிப்ரானைப் படிக்கும் போதெல்லாம் தமிழில் இப்படி எழுத யாருமில்லையே என்று ஏங்குவேன். அந்த ஏக்கம் இப்போது இல்லை. இதோ அப்துல் ரஃமான் வந்து விட்டார்" என்று குறிப்பிட்ட கவியரசர் கண்ணதாசன் மேலும் "அப்துல் ரஃமானின் கவிதைகளை ஆங்கில மொழியில் மொழி பெயர்த்து வெளியிட்டால் யார் இந்தக் கவிஞன்? என்று நிச்சயம் உலகம் வியக்கும் என்றும் குறிப்பிட்டுள்ளார். இந்நிலையில் கவிஞர் கவிக்கோ அப்துல் ரஃமான் தொடர்பாக மேலும் பல தகவல்களை முன்வைக்க வேண்டும் என்ற நோக்கில் இக்கட்டுரை எழுதப்படுகின்றது. நல்ல, சிறந்த கவிஞன் பற்றி வளரும் கவிஞர்கள் அறிந்து கொள்வது அவசியமென நம்புகின்றேன்.

இன்று திரையிசையில் புகழும் பணமும் சேர்த்துள்ள கவிஞர்கள் மு.மேத்தாவும், வைரமுத்துவும், அப்துல் ரஃமானின் மாணவர்கள். நேர்காணல் ஒன்றில் அப்துல் ரஃமானிடம் நீங்கள் ஏன் சினிமாவுக்குப் பாட்டு எழுதுவதில்லை என்று கேட்ட போது "அம்மி செதுக்குவதற்கு ஒரு சிற்பி தேவையில்லை" என்று ஆழமாகவும் ஆற்றலாகவும் பதிலளித்தாராம் அப்துல் ரஃமான். சிற்பிக்கும் அம்மி பொழிபவனுக்கும் இடையேயுள்ள வேறுபாட்டைப் புரிந்து கொண்டால் சினிமா பாடல்களுக்கும் கவிதைக்கும் இடையேயுள்ள வேறுபாடு புரிந்துவிடும்.

"ஆயிரம் திருநாமம் பாடி" என்ற தலைப்பில் கவிக்கோ எழுதிய கவிதை ஒன்றைப் பார்ப்போம்.

"அரன் என்றழைப்பினும்
வரன் கொடுப்பவன் நீ.
அரியென்று இசைப்பினும்
சரியென்று இசைப்பாய்.
கர்த்தன் என்றுரைப்பினும்
அர்த்தம் நீதான்.
அல்லா எனினும் நீ
அல்லாது வேறு யார்? "

சமயத்தின் பேரால் பூசல்கள் "தெய்வம் பலப்பல சொல்லி பகைத் தீயை வளர்ப்பவர் மூடர்" என்றார் மகாகவி பாரதி. இறைவனுக்கு எத்தனையோ பெயர்கள் அவற்றின் அர்த்தம் புரியாமல் அடிபிடிப்படுகின்ற மக்களுக்கு புரியும் வகையில் எளிமையாக எடுத்துரைத்தார் அப்துல் ரஃமான்.

"இது சிறகுகளின் நேரம்" என்ற நூலின் அறிமுகவுரையில் அப்துல் ரஃமான் "விளக்குகள் வெவ்வேறாக இருக்கலாம். ஆனால் ஒளி ஒன்று தான். மெய்ஞ்ஞானி ஒளியை மட்டும் காண்கிறான். அவன் விளக்குகளில் பேதம் பாராட்டுவதில்லை. அஞ்ஞானி விளக்குகளையே காண்கிறான். விளக்குகளில் பேதம் பாராட்டுகிறான். என் விளக்கே உயர்ந்தது என்கிறான். பெரும்பாலும் சுடர் இல்லாத விளக்கையே வணங்கிக் கொண்டிருக்கிறான். உலகம் அஞ்ஞானிகளின் கைகளில் இருக்கிறது. அதனால் அது நரகமாக இருக்கிறது. அது மெய்ஞ்ஞானிகளின் கைகளுக்கு வந்தால் சொர்க்கமாயிருக்கும்" என்று குறிப்பிட்டுள்ளார். இன்று உலகம் நரகமாக மாறிக்கொண்டிருப்பதற்கு அது சுடர் இல்லாத விளக்கைப் பற்றி சிந்திக்கின்ற அஞ்ஞானிகளின் கைகளில் இருப்பதைப் புரிந்து கொள்வோம்.

கவிக்கோ அப்துல் ரஃமானின் புதிய சிந்தனைகளைப் புரிந்து கொண்ட முதலமைச்சர் கருணாநிதி "காக்கைச் சோறு" என்ற கவிக்கோவின் கட்டுரைத் தொகுப்பில் "வெகுமானமாக எனக்கு ரஃமானைத் தாருங்கள்" என்று கேட்டிருக்கின்றார். இவ்விடயத்தைக் குறிப்பிட்டு "முதலமைச்சரே கேட்ட பிறகு புதிதாக கவிக்கோவுக்கு நான் என்ன புகழ் மாலையைச் சூட்டுவது" என்று எழுத்தாளர் ஔவை நடராசன் குறிப்பிடுவதைப் பார்க்கும் போது அப்துல் ரஃமான் கவிக்கோ தான் என எண்ணலாம்.

அப்துல் ரஃமானின் கவிதை பற்றிய கொள்கை அறிக்கையாக அமைகின்றது. "நமக்குத் தொழிலே கவிதை நாட்டுக்கு உழைத்தல்" என்றான் மகாகவி பாரதி. அப்துல் ரஃமானோ ஒரு படி மேலே சென்று "நமக்கு உயிரும் வாழ்க்கையும் கவிதை தான்" என்றார். மானிட முன்னேற்றம் தனது கவிதைகளின் குறிக்கோள் என்ற அவரது படைப்பு நோக்கம் அவரது கவிதைகள் அனைத்திலும் செயல்பட்டிருப்பதைப் பார்க்கக்கூடியதாக இருக்கின்றது.

எழுதுகோலைத் (பேனாவை) தன் கையின் ஆறாவது விரலாகவே உணர்கிறார். இந்த ஆறாவது விரல் வழியே வடியும் இரத்தமும் சதையும் தான் தன் எழுத்துக்கள் என்று ரஃமான் சொல்கின்றார். சிலுவையில் இயேசு பிரான் சிந்திய இரத்தம் மனித குலத்தை பாவ வழியிலிருந்து மீட்டது. அன்பு எனும்

தூய நெறியில் செலுத்தியது. உலகம் அடையும் வாழ்க்கைச் சிக்கல்களால் கரைந்தோடும் சிந்தனைச் சிலுவையில் அறையப்படுகின்ற கவிஞனின் இரத்தமே அவன் கவிதை. அது மனித குலத்தை மீட்டு நல்வழியில் செலுத்தும் என்பது கவிக்கோவின் நம்பிக்கை.

காதல், இயற்கை, அரசியல், சமூகம், அறிவியல், ஆன்மீகம் முதலிய வாழ்வியல் துறைகள் எதையுமே அவர் விட்டுவைக்கவில்லை. தெளிந்த சிந்தனையுடன் ஆழ்ந்த தூய உணர்வுடன், இனிய அழகியலுடன் தனது கவிதைகளைப் படைத்து வழங்கி வந்துள்ளார்.

"மூடிய இமை" என்ற கவிதையைப் பார்ப்போம்.

என்னைக் கண்டதும்
கவிழும் உன் இமைகள்
கொசு வலையா? மீன் வலையா?

இங்கே கொசுவலை புறக்கணிப்பு, மீன்வலை எதிர்பார்ப்பு. இங்கு கொசு வலை, கொசுவை வர விடாமல் தடுக்கிறது. மீன்வலை வந்த மீனைப் போகவிடாமல் தடுக்கிறது. மூடிய இமை எதிர்பார்ப்புடன் பார்ப்பவர்களுக்கு புரியாத ஒருவகை மயக்கத்தைத் தருவதாக கலைத்துவமாக வெளிப்படுத்துகின்றார். அழகியலைக் கொண்டிருக்கும் அதே வேளை சிந்தனையைத் தூண்டுவதாயும் அமைந்திருக்கின்றன அப்துல் ரஃமானின் கவிதைகள்.

இந்தக் கவிதை மேலும் இவ்வாறு வளர்ந்து செல்கின்றது.

மூடிய கதவின் மேல்
வரவேற்பு வாசகம் போல்
உன் இமைப் பீலிகள்
இந்தப் பூவன வேலிகள்
என்னையல்லவா மேய்கின்றன.

* * *

இந்தப் திரைகளால் இருளும்
துயிற் பட அரங்கில்
என் கனவுகள் ஓடுமோ?

* * *

சில நேரங்களில்
இமைச் சிறகுகளை
விட்டு விட்டு
உன் பார்வைகள்
பறந்து வருவது
என் கிளைகளில்
இரை தேடவோ
கூடு கட்டவோ?

* * *

உன் இதழ்களுக்குள்
உறக்கமாகும் மௌனம்
உன் இமைகளின்
மொழியாகுமோ?

* * *

உன் இமைகளின்
அடை காப்பில்
இரு கறுப்பு நிலாக்கள்
அவற்றிலோ
என் இரவுகள் தாகிக்கும்
பௌர்ணமிகள்

* * *

சில தருணங்களில்
உன்னையும் மீறி
ரகசியம் கசிய- நீயே
ஒரு மூடிய இமைதான்.

புதுக்கவிதையில் படிமங்கள், குறியீகள் இடம்பெற வேண்டும். மரபுக் கவிதைகளில் உவமான, உவமேயம் இடம்பெற்று அதன் தரத்தையும் சிறப்பையும் வெளிக்காட்டின. இன்று பலருடைய மரபுக் கவிதைகளில் இவை அருகியுள்ளது போல் புதுக்கவிதைகளிலும் குறியீடும் படிமமும் இல்லாத நிலை காணப்படுகின்றது. இவற்றில் வளரும் கவிஞர்கள் கவனம் செலுத்த வேண்டும்.

கவிக்கோ புதுக்கவிதையில் குறியீடு என்ற விடயத்தையே தனது ஆய்வுப் பொருளாக்கி முனைவர் பட்ட ஆராய்ச்சியை சென்னை உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தில் செய்துள்ளார். புதுக் கவிதையின் வரவு அதிகரித்துள்ள நிலையில் இவருடைய ஆய்வை புதுக்கவிதை எழுத முயற்சிக்கும் கவிஞர்கள் படிக்க வேண்டும். இல்லையேல் இவரது கவிதைகளையேனும் படிக்க வேண்டும்.

**நூல்கள் :-**

பால் வீதி (1974), நேயர் விருப்பம் (1978), சுட்டுவிரல் (1989), ஆலாபனை (1995), விதைபோல் விழுந்தான் (1998), முத்தமிழின் முகவரி (1998), மின்மினிகளால் ஒரு கடிதம் (2012) ஆகிய நூல்களைத் தமிழுக்குத் தந்துள்ளார்.

கவிஞர் மீராவுடன் இணைந்து அன்னம் பதிப்பகம் மூலம் அதிகமான அதே வேளை தரமான நூல்களை வெளியீடு செய்ய உதவி வந்துள்ளார். இவருடைய "கவிராத்திரி" என்ற கவியரங்கச் செயற்பாடு பல கவிஞர்கள் உருவாகவும் தங்களைத் தக்க வைத்துக் கொள்ளவும் காரணமாக அமைந்துள்ளது.

**விருதுகள், பட்டங்கள் :-**

கவிக்கோவின் தமிழ் இலக்கியப் பணியைத் தெரிந்து கொள்ள அவருக்கு கிடைத்த விருதுகள், பட்டங்களைப் பார்ப்போம். 1989இல் தமிழ்க் கலைக் கழகத்தின் தமிழன்னை விருது வழங்கப்பட்டது. இதே காலப்பகுதியில் தமிழக அரசின் **பாவேந்தர் விருது, கலைமாமணி விருது** என்பனவும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். 1997இல் கலைஞர் விருதும், 1999இல் கவிதைக்கான **சாகித்திய அக்கடமி விருதும்** வழங்கி கௌரவிக்கப்பட்டார். "வெகுமானமாக ரஃமானைத் தாருங்கள்" என்று முதலமைச்சர் கேட்டதாகக் குறிப்பிட்டது மாபெரும் கௌரவம் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

**கொள்கை :-**

"தனி ஒருவனுக்கு உணவில்லையேல் இந்த ஜெகத்தினை அழித்திடுவோம்" என்று உணர்ச்சி பொங்க பாரதி குறிப்பிட்டது போல் சமூக அக்கறை. குறிப்பாக மானிட அக்கறை அப்துல் ரஃமானிடம் அதிகளவில் காணப்பட்டிருக்கிறது.

"உழைப்பு" என்ற கவிதையில் உழைத்துச் சிவந்த கைகளைத் திருமகளின் (செல்வத்தின்) இருப்பிடமான செந்தாமரையாகக் காட்டுகிறார். தனரேகை கையில் இல்லை. தரிசுகளில் ஏர்முனை கீறும் கோடுகள் தான் தனரேகை என்கின்றார்.

"மணி வைரத் தோள் என்ற
மந்தரங்கள் இங்கிருக்கத்
தயக்கமென்ன அமுதெடுக்க
தரைக்கடலையே கடைவோம்" என்று கூறும் போது

வாசகனின் இரசனையைத் தூண்டுகிறார். விவசாயிக்கு ஏருழவன் என்பது போல் மீன் பிடிப்போரை நீருழவன் என்று குறிப்பிடுவதுண்டு. மேலுள்ள கவிதையிலும் தரைக்கடலை கடைந்து அமுதெடுக்கலாம் எனும் போது மனிதனின் பசியைப் போக்கும் அமுதைத் தரைக்கடலாம் நிலத்தில் பெற்றுக் கொடுப்பவனை நாம் நினைக்காமல் இருக்க முடியாது.

சாதி, தீண்டாமை என்ற அரக்கன் எம்மைப் பற்றிப் பிடித்திருக்கும் வரையில் எமக்கு விடிவேது? "இட்டார் பெரியர், இடாதோர் இழிகுலத்தோர்" என்று ஔவையார் சொன்ன போதும் "ஆண் சாதி – பெண் சாதி, இதைத் தவிர வேறு சாதியில்லை" என்று காமராஜர் சொன்ன போதும், இன்னும்

எத்தனையே அறிஞர்களும் அனுபவத்தவர்களும் சாதி பற்றி எவ்வளவோ இடித்துரைத்த போதும் அத இரத்தத்தோடு கலந்த நோயாய் இன்றுவரை இருப்பது சாபக்கேடு. "நிற்க அதற்குத் தக" என்பது நீரெழுத்துத்தான். அப்துல் ரஃமானும் ஆதங்கத்தோடு அதனைப் பதிவிடுகிறார்.

"ஆலாபனை" என்ற தொகுதியில் "அந்த இடம்" என்ற தலைப்பில்

"கை இல்லாத நீ
எல்லோரையும் தழுவுகிறாய்
கையிருக்கும் நாம்
சக மனிதனிடமே
தீண்டாமையைக்
கடைப்பிடிக்கிறோம்
கையிருப்பு ஒரு குறையோ? " என்று கை இல்லாத சாதி எல்லோரையும் தழுவுகிறது என்று கூறியதோடு சமூக உறவு சாதியின் பெயரால் வளர்ந்து நிற்கும் கொடிய நோயான தீண்டாமையைக் காட்டுகிறார். கையிருந்து என்ன பயன்.........?

"பால் வீதி" என்ற தொகுதியில் "இசை" என்ற தலைப்பில் இசை தரும் புல்லாங்குழல் அழுது உருகும் அதன் தோற்றத்தில் புதிய கற்பனையைக் காட்டுகிறார்.

"ஒற்றை நெருப்பு உதட்டின்
வாசிப்பில்
புல்லாங்குழலே
உருகுகிறது"

"மின்மினிகளால் ஒரு கடிதம்" என்ற தொகுப்பில் "காதல்" எனும் தலைப்பில்

"கற்களில் இடறும் போது
பாடும் நதியைப் போல
உன் நினைவுகள் இடறும் போது
நான் பாடுகிறேன்"

என்று ஒரு முதுமைக் கவிஞன், தனது 75 ஆவது வயதில் (1937 ஆம் ஆண்டு பிறந்தவர் இக்கவிதையை 2012 ஆம் ஆண்டு எழுதினார்) இளைஞனான மனோ நிலையில் நின்று எழுதியுள்ளார்.

"இயல்பாக வளர்ந்த
திறமை ஒன்று
ஈடு சொல்ல முடியாத
இலக்கிய புலமை இரண்டு
பரந்து தரை வெளியில் பாயும்
ஆற்றுச் சிந்தனையை
பனி மலையிலிருந்து வழிந்து வீழும்
அருவிச் சிந்தனையாக
மாற்றிக் கொண்ட புதுமை மூன்று
கலைமனத்தில் அலைபுரள
கரை புரளத் ததும்பும்
கற்பனை நான்கு
இந்த நான்கையும் அளவாகக் கலந்து
வரைந்த உரைக்கோலங்கள்" என்று ஔவை நடராசன் எழுதியுள்ளது சிந்தனைக்குரியது. சீர்த்தூக்கிப் பார்க்க வேண்டியது.

ஒரு சொல்லை அரை மைல் குடைந்து பொருள் பார்க்கும் அளப்பரிய அறிவாற்றல் அப்துல் ரஃமானின் தனியுரிமை எனலாம். வெள்ளை இனத்தவரின் இனவெறிக் கொடுமைக்கு உள்ளாகும் நீக்ரோ மக்களின் மீது கொண்ட பரிவினால் இந்த உருவகக் கவிதையைத் தந்திருக்கிறார். இங்கு இரவு – நீக்ரோ, சூரியன் – வெள்ளையன், புல் இதழ் – பச்சை நாக்கு, பனித்துளி – இரத்தத்துளி ஆகிய உருவகங்களை கையாண்டிருக்கிறார். கவிதையைப் பாருங்கள்.

"வெண்புள்ளி குத்திய
இரவு நீக்ரோவைப்
படுகொலை செய்கிறான்
வெள்ளையன்
தரையின்
பச்சை நாக்குகளில்
வார்த்தையாக முயலும்
ரத்தத் துளிகள்"

இயற்கை – புதிய காட்சி – மனக்காட்சி உசுப்பல். இது சாட்சி என்ற கவிதையில் காணப்படுகிறது. உருவகச் சிறப்பை உணர்த்தி நிற்கிறது.

கவியரசு கண்ணதாசனைப் பற்றி கவிக்கோ குறிப்பிட்ட வரிகளைப் பாருங்கள்.

"இவன்
மீன் விற்கும் சந்தையில்
விண் மீன் விற்ற பைத்தியக்காரன்"

உவமை, உருவகம், குறியீடு, படிமம் என்பவற்றை ஏந்திவரும் "மரமும் மனிதனும்" என்ற கவிதை, 2000 ஆம் ஆண்டு க.பொ.த (சா/த) தமிழ்மொழிப் பாடப் புத்தகத்தில் எமது ஆசிரியர்களும் மாணவர்களும் அறிந்து கொள்வதற்காகத் தரப்பட்டுள்ளது.

மண் மனிதனுக்குப் புதைகுழி
மரத்திற்கோ கருவறை
மரங்கள் சாய்ந்தால்
காட்டிலிருந்து வீட்டிற்கு வரும்,
மனிதன் சாய்ந்தால்
வீட்டிலிருந்து காட்டிற்குப் போகிறான்.

* * *

மரம் புழுதியில் பூக்களையும்
கழிவு நீரில் கனிகளையும் தருகிறது.
மனிதன் பூக்களில் புழுதியையும்
கண்களில் கழிவு நீரையும் செய்கிறான்

* * *

மரம் அத்தனை கைகளாலும் கொடுக்கிறது
மரம் வானத்தை நோக்கியே வளர்கிறது
மனிதன் புழுதியிலே புரளுகிறான்

* * *

மரமாகத் தான் முடியவில்லை
மரங்களைப் படைக்கவாவது
மனிதனுக்குத் தெரிகிறதா?

* * *

இதோ அவன் படைத்த மரங்கள்
தூக்கு மரங்கள், சிலுவை மரங்கள்
கழுமரங்கள், கொடி மரங்கள்

* * *

மரம் மனிதனுக்கு ஒரே சிபி, ஒரே சீதக்காரி
மரங்களில் எல்லாமே சிபிகள், சீதக்காதிகள்
மரம் கொடுப்பதற்காகவே கைகளை நீட்டுகிறது
மனிதன் வாங்குவதற்காகவே
கைகளை நீட்டுகிறான்

* * *

மலர்களைத் தின்று முட்களை
உற்பத்தி செய்யும் மரங்கள்
மரம் உயர் திணையா?
அஃறிணையா?

* * *

இப்பாடலில் சங்க காலத்து இலக்கியக் குறியீடான சிபிச்சக்கரவர்த்தி, பிற்காலத்துக் கொடை வள்ளலான சீதக்காதி என்போர் பேசப்படுவதை நோக்கலாம். அவர்களது கொடைத்திறமையை விளங்கலாம். சிபிச்சக்கரவர்த்தி புறாவுக்காகத் தன்னுடைய சதையைக் கொடுத்த கதை சீதக்காதி ஈந்து சிவந்த கையையுடையவர் எனும் கதை இப்பாடலிலே குறியீடுகளாகின்றன.

புதுக்கவிதையில் குறியீடுகள் மிக முக்கியத்துவமானவை. அவை இலக்கியக் குறியீடுகளாக, சமயக் குறியீடுகளாக, சமகாலவிடயக் குறியீடுகளாக

சரித்திரக் குறியீடுகளாக, சார்பு நிலைக் குறியீடுகளாக வருவது இயல்பு. இந்த இயல்பை நன்கு பயன்படுத்திக் கொண்டவர் கவிக்கோ அப்துல் ரஃமான்

எழுதுபவர்களின் தலைவாயிலில் தம் கவிதை வெளியீடுகளின் வாயிலாகவும் புதுக்கவிதைத் துறையில் நிலை நிறுத்திக் கொண்டவர்களுள் அப்துல் ரஃமான் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர். முதலிடத்தில் வைத்து போற்றப்படுபவர் எனப் புகழப்படுகின்றார்.

"பால்வீதி" மூலம் தன்னை ஒரு சோதனைப் படைப்பாளியாக இனங்காட்டிக் கொண்டார். அதன் பின் தொடர்ந்தும் அதனைத் தக்கவைத்துக் கொண்டார். கவிதைகளை நேரடியாகத் தராமல் உவமைகள், உருவகங்கள், படிமங்கள், குறியீடுகள் ஆகியவற்றின் வழி வெளியீடு முறையை அமைத்துக் கொண்டார். வளரும் கவிஞர்களுக்கு முன்னோடியாகத் திகழக்கூடியவர் . முன்மாதிரியாகவும் திகழ்கின்றார்.

புதுக்கவிதை எழுத முயற்சிக்கும் கவிஞர்கள், கவிக்கோ அப்துல் ரஃமானின் முயற்சிகளை ஐயம் தெளிவுறக் கற்று தொடர்ந்தும் எழுத வேண்டும். நேரடியாக எடுத்தேன், கவிழ்த்தேன் என்று எழுதிவிட்டுப் போகாமல் சிறந்த புதுக்கவிதை எழுத்தாளர்களாக வருவதற்கு தன்னுடைய ஆராய்ச்சி மூலமும், அதனை விளக்கும் எழுத்தின் மூலமும் உதாரணப் புருஷராகத் திகழ்ந்த அப்துல் ரஃமானைப் படியுங்கள்.

"எனக்கு உயிரும் வாழ்க்கையும் கவிதை தான்" என்று சொல்லிலும் செயலிலும் வாழ்ந்து காட்டிய கவிக்கோ, நிதியமொன்றை உருவாக்கி, அந்தத் திரட்டு நிதியில் சிறந்த கவிதைக்கு ரூபா. 30,000 (முப்பதாயிரம்) சன்மானத்தை ஆண்டு தோறும் வழங்கும் முன் மாதிரியை மனங்கொள்வோம் கவிதைகளை இனங்கண்டு, கவிஞர்களை ஊக்குவித்த கவிக்கோ அப்துல் ரஃமான் காலத்தால் அழிக்க முடியாத கருத்தோவியம்.



# வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் "விளையாட்டு வீரமங்கை விருதுபெறும் வீழ்தல் இல்லா வீரமங்கை திருமதி.சி.அகிலத்திருநாயகி

எழில்மிகும் ஈழத் திருநாட்டின் வன்னிப் பிரதேசத்தில் நீர் வளமும் நில வளமும் நிறைந்து விளங்கும் முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைத்துறைப்பற்றுப் பிரதேசத்தின் ஒரு பகுதியாக விளங்குவது முள்ளியவளை எனும் வளம் நிறைந்த கிராமமாகும்.

இங்கு சப்த கன்னியர் ஆலய பூசகர் பரம்பரையினராகவும், பளையில் வைரவர் கோயில் பூசகர் பரம்பரையினராகவும், தற்போது முள்ளியவளை பளையில் வைரவர் கோவிலடியில் வாழ்ந்துவரும் திருமதி.சிறிசெயானந்தபவன் அகிலத்திருநாயகி அவர்கள். முள்ளியவளையில் வைரமுத்து செல்லப்பா சிவக்கொழுந்து தம்பதிகளின் ஆறாவது பிள்ளையாக 07.02.1951ல் பிறந்தார்.

திருநாவுக்கரசு, இரத்தினசபாபதி, இரத்தினசிங்கம், பொன்னம்பலம் ஆகிய சகோதரர்களுடனும், சரஸ்வதி என்னும் சகோதரியுடனும் பிறந்த இவர் தம்பிப்பிள்ளை சிறிசெயானந்தபவன் அவர்களைத் திருமணம் செய்து, யசாந்தி, தீபன் ஆகிய பிள்ளைகளுக்குத் தாயானார்.

"அகிலம்" என எல்லோராலும் அன்போடு அழைக்கப்படும் இவர் முள்ளியவளை இந்து த.க.பாடசாலையில் தனது ஆரம்பக்கல்வியையும், வன்னியின் புகழ்பூத்த பாடசாலையான வித்தியானந்தாக் கல்லூரியில் இடைநிலைக் கல்வியையும் கற்றுத் தேர்ந்தார். பாடசாலைக் கல்வியின் பின்னர் முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் சிறைச்சாலைப் பொறுப்பாளராகச் சேவையாற்றியுள்ளார்.

பாடசாலைக் காலங்களில் இவரது முதல் தெரிவாக விளையாட்டே இருந்தது. பெண்கள் விளையாட்டுத் துறையில் சாதிப்பதென்பது எமது சமூக, கலாசாரப் பின்னணி சார்ந்து மிக்க சவால் நிறைந்ததொன்றாகக் காணப்பட்ட போதும் தனது ஆர்வத்தாலும் விடா முயற்சியாலும் அதனைச் செயலில் நிறைவேற்றிக் காட்டியவர் "அகிலம்".

இலங்கையில் மட்டுமல்லாது கடல்கடந்த நாடுகளான தாய்லாந்து, சிங்கப்பூர், ஜப்பான், மலேசியா ஆகிய நாடுகளிலும் விளையாட்டுத்துறை சார்ந்து தனது வெற்றிகளை இவர் பதிவு செய்துள்ளார். விளையாட்டுத்துறையில் நிகழ்த்திய சாதனைகளுக்கு மேலதிகமாக ஜப்பானில் விளையாட்டுத்துறையில் இவர் "டிப்ளோமா" சான்றிதழ் பெற்றுள்ளமை சிறப்பாகக் குறிப்பிட்டுக் கூற வேண்டிய ஒன்றாகும்.

இவரது விளையாட்டுத் திறமைக்கு வாய்ப்பாக சிறைச்சாலைகளுக் கிடையிலான விளையாட்டுப் போட்டி நடாத்தப்பட்டபோது தனது 48 ஆவது வயதில் சிறந்த விளையாட்டு வீராங்கனையாகத் தெரிவு செய்யப்பட்டார். 2008 ஆம் ஆண்டில் வெலிக்கடை, கண்டி, போகம்பறை, கேகாலை ஆகிய சிறைச்சாலைகளின் விளையாட்டுச் சாதனையாளர் என்ற விருதையும் வெற்றிக் கிண்ணங்களையும் சுவீகரித்துக் கொண்டார்.

இவற்றைவிட, 2009 ஆம் ஆண்டு தமிழ், சிங்களப் புத்தாண்டை ஒட்டி நடாத்தப்பட்ட விளையாட்டுப் போட்டியில் 5000 மீற்றர் ஓட்டப் போட்டியில் முதலாமிடத்தைப் பெற்றுக் கொண்டதோடு அதே ஆண்டில் துவிச்சக்கர வண்டியோட்டப் போட்டியிலும் முதலிடத்தைப் பெற்றுக் கொண்டார்.

2010 ஆம் ஆண்டில் "இலங்கையின் சிறந்த சாதனையாளர்" என்ற விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்ட இவர் கொழும்பில் நடைபெற்ற "வர்ண இரவுகள்" நிகழ்வில் "A" தர விளையாட்டு வீரருக்கான சான்றிதழையும் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

2014 ஆம் ஆண்டில் இரண்டு தடவைகள் சிங்கப்பூரில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் தங்கப் பதக்கங்களை வென்று வெற்றிவாகை சூடி வந்த இவர். இவ்வாண்டிலே கண்டி மாவட்டத்தில் சிறந்த விளையாட்டு வீராங்கனையாகத் தெரிவு செய்யப்பட்டு வெற்றிக்கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டமை குறிப்பிட வேண்டிய ஒன்று.

இதனைத் தொடர்ந்தும் 2015 ஆம் ஆண்டில் மாசி, பங்குனி, வைகாசி ஆகிய மாதங்களில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளிலும் பங்கு கொண்டு, தங்கப் பதக்கங்களையும் சிறந்த விளையாட்டு வீராங்கனைக்கான வெற்றிக்கிண்ணத்தையும் பெற்றுச் சாதனை நிலைநாட்டியுள்ளார். இதன் பின்னர் கம்பஹா மற்றும் மாத்தளை மாவட்டங்களிலும் விளையாட்டுத்

துறை சார்ந்த சிறந்த வீராங்கனையாகத் தெரிவு செய்யப்பட்டுக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

2018 ஆம் ஆண்டிலும் தனது 67 வது வயதில் 3 தடவைகள் சம்பியன் பட்டத்தை வென்றுள்ள ஓய்வில்லா உழைப்பாளி இவர். இந்த ஆண்டில் மாத்தளை மாவட்டத்தில் மாவட்ட மட்டச் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டதோடு 800 மீற்றர் ஓட்ட நிகழ்ச்சியில் இவரால் சாதனை இலக்கும் (Record) நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

2017 இல் முல்லைத்தீவில் நடைபெற்ற வர்ண இரவு நிகழ்வில் முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திருமதி.ரூபவதி கேதீஸ்வரன் அவர்களால் விளையாட்டு வீர விபூஷண விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

இவ்வாறு தனது பாடசாலைக் காலம் முதல் இன்றுவரை தொடர்ச்சியான தனது விளையாட்டுச் சாதனைகளால் விளங்கிநிற்கின்ற திருமதி. சிறிசெயானந்தபவன் அகிலத்திருநாயகி இன்னுமின்னும் பல சாதனைகளை நிகழ்த்த வேண்டும் என்றும் அதற்கான உடல் பலத்தையும் நீண்ட ஆயுளையும் இறைவன் வழங்க வேண்டும் என்றும் வேண்டுகிறோம்.

இவருக்கு **"விளையாட்டு வீரமங்கை"** என்னும் பட்டம் வழங்கி கௌரவிப்பதில் வட்டம் மகிழ்ச்சியும் பெருமிதமும் அடைகிறது.

**ஆசிரியர்**

# ஒளவையாரின் அறிவுச் செல்வங்கள்

திரு.நா.தியாகராசா. சமா.நீ. B.A

**முகவுரை**

"ஒளவைக் கிழவி நம்கிழவி அமுதினும் இனிய சொற்கிழவி.
செவ்வை நெறிகள் பற்பலவும் தெரியக் காட்டும் பழங்கிழவி,
நெல்லிக் கனியைத் தின்றுலகில் நீடு வாழும் தமிழ்க்கிழவி."

என்று நாம் சிறுவயதிலிருந்தே போற்றிப் புகழ்ந்து வரும் ஒளவையார் ஒருவரே தானா? அல்லது அறிவும், ஆற்றலும், தமிழ்புலமையும் கொண்ட மூன்று வேறு வேறு ஒளவையார்கள் வெவ்வேறு காலகட்டங்களில் வாழ்ந்தனரா? என்பதும் இன்று வரையும் சரியாகத் தெளிவுபடுத்தப்படாதன வாகவே இருக்கின்றன.

கடைச்சங்க கால புலவர்களான கபிலர், பரணர். நக்கீரர், மற்றும் பறம்பு மலையின் பாரி வள்ளல், திருக்கோவலூர் அதியமான், தொண்டமான் மற்றும் மூவேந்தர்கள் உட்பட்ட சங்க கால அரசர்கள் வாழ்ந்த காலத்தில் ஒளவையார் வாழ்ந்தார் என்பதை ஒளவையாரின் சங்ககாலப் பாடல்கள் மூலம் அறியக்கிடக்கிறது.

அதன் பின்னர் பல்லவர் ஆட்சிக்காலத்தில் தேவார முதலிகளுள் மூன்றாமவரான சுந்தர மூர்த்தி நாயனார் வாழ்ந்த காலத்திலும், ஒளவையார் வாழ்ந்தார் என்றும் சொல்லப்படுகிறது. மேலும் சோழர் ஆட்சிக் காலத்தில் கம்பர். ஒட்டக்கூத்தர், புகழேந்திப் புலவர், சயங்கொண்டார். ஆகியோருடன் குலோத்துங்க சோழனுடைய அரச சபைப் புலவராக ஒளவையார் வாழ்ந்தார் என்றும் அறியக்கிடக்கிறது.

ஆக, மிகநீண்ட இடை வெளிகளைக் கொண்ட மூன்று காலகட்டங்களிலும் ஒளவையார் வாழ்ந்திருக்கிறார் என்பது இலக்கிய வரலாறு. தமிழ் புலமையும் பாண்டித்தியமும் எந்தப் புலவருக்கும் சவால் விடக்கூடிய அபூர்வமான அறிவும், ஆற்றலும், உறுதியும் கொண்ட முதல் தரமான வீரப் பெண்ணாகவே ஒளவையார் எல்லாக் கால கட்டங்களிலும் வாழ்ந்திருக்கிறார்.

அதியமான் கொடுத்த அதிசய கரு நெல்லிக்கனியை உண்டு காயசித்தி செய்து ஒளவையார் நீடு வாழ்ந்தார் என்று விளங்கிக் கொண்டாலும், ஒரே நபர் மிக நீண்ட காலம் வாழ்ந்தார் என்பதை அறிவு பூர்வமாக ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

## பிறப்பு

இவர் தென் இந்தியாவில் உறையூரில் பகவனார் அல்லது ஞாளித்தன் என்னும் சோழிப் பிராமணருக்கும், ஆதி என்னும் புலைச்சிக்கும் மகளாகப் பிறந்தார். தெய்வப்புலவர் திருவள்ளுவர், இடைக்காடர், சங்கப்புலவர் கபிலர். அரசன் அதியமான் ஆகியோர் இவரது ஆண் சகோதரர்கள் என்றும்: உப்பை, உறுவை, வள்ளி என்போர் சகோதரிகள் என்றும் அறியக்கிடக்கிறது. இருந்தாலும் இவர்கள் ஒருவரை ஒருவர் சகோதரர்கள் என்று அறிந்திருக்கவில்லை என்றும் கூறப்படுகிறது.

பகவானும், ஆதியும் செய்து கொண்ட ஒப்பந்தப்படி ஔவையாரைப் பிறந்த இடத்திலேயே அவர்கள் விட்டுச் சென்றனர். **“இட்டமுடன் என்தலையில் இன்னபடி என்று எழுதிவிட்ட சிவனுஞ் செத்து விட்டானோ”** என்ற ஔவையாரின் பாடல் கலங்கி நின்ற தாயாருக்கு ஔவையார் ஆறுதல் கூறுவதாக அமைந்துள்ளது. அதன் பின்னர் ஔவையார் காவிரிப்பூம் பட்டினத்தில் பாணர்சேரியிலும், அதியமானுடைய திருக்கோவலூரிலும் வளர்ந்தார்.

சிறிது காலம் மதுரையிலும், சோழநாட்டிலும், சேரநாட்டிலும், சிலகாலம் முனிவர்கள் வாழும் இடங்களிலும் வாழ்ந்தார். இல்லற வாழ்வை வெறுத்து தவ வாழ்வை மேற்கொண்டு மூதாட்டியாகவே வாழ்வை நிறைவு செய்து கொண்டார்.

## ஔவை

இவரது இயற்பெயர் 'ஔவை' என்பதே. 'ஆர்' என்பது மரியாதை விகுதியாக அவரது பெயரோடு சேர்க்கப்பட்டு 'ஔவையார்' என்றே எல்லோரும் அவரை அழைத்தனர். இப்படி 'ஆர்' விகுதியைப் பெயர்களோடு சேர்த்து அழைக்கும் வழக்கம் சங்ககாலத்திலிருந்து இன்று வரையும் உண்டு. ஔவைக்கிழவி, ஔவைப் பிராட்டி, தமிழ் மூதாட்டி, தமிழ்க்கிழவி, ஔவைப்பாட்டி என்றெல்லாம் நாம் அவரை மனங்குளிர வாய்நிறைய அழைத்து மகிழ்கிறோம்.

இது தவிர ஏழு ஔவையார்கள் வாழ்ந்தனர் என்று கூறுவாருமுளர். ஆனால் எல்லா ஔவையார்களும் தமிழ்ப் புலமையும் வீரமும் வாய்ந்த மூதாட்டிகளாக இருந்தார்களா? என்பது ஆராட்சிக்குரியது. 'அபிதான சிந்தாமணி' என்ற நூல் மூன்று ஔவையார்கள் வாழ்ந்துள்ளனர் என்று கூறுகிறது.

அரசர்களின் வீரத்தையும், கொடைச் சிறப்பையும் பாடி வாழ்த்தி. அவர்கள் கொடுத்த வெகுமதிகளைப் பெற்று ஔவையார் வாழ்ந்தார். மேலும் தனவந்தர்களையும், பிரபுக்களையும் பாடிப் பரிசுகள் பெற்றார். இருந்தாலும்,

வறுமையில் வாடி கூழுக்கும் பாடினார் என்றும் சொல்லப்படுகிறது. ஏழைகள் கொடுத்த கூழ். கஞ்சி என்பனவற்றை விரும்பி உண்டார். தமிழ்ப் புலமையோடு, வறுமையும் ஔவையாரிடம் தாராளமாகவே இருந்தது எனலாம்.

விவேகம் நிறைந்த மூதாட்டியான ஔவையார் வீராங்கனையாகவும் செயல்பட்டார். பறம்பு மலை மன்னன் பாரி வள்ளலுக்கும் மூவேந்தர்களுக்கும் போர் மூண்ட போதும், குறுநில மன்னர்களிடையே போர் மூண்ட போதும். சமாதானத் தூதராகச் செயல்பட்டுச் சண்டைகளை நிறுத்தினார். உயிர் இழப்புக்களைத் தவிர்க்கும்படியும் சமாதானத்தையே விரும்பும்படியும் அரசர்களை அறிவுறுத்தினார்.

**ஔவையாரும் விநாயகரும்**

சேரமான் பெருமாளும், சுந்தர மூர்த்தி நாயனாரும் "பொன்வண்ணத்தந்தாதி"யை கைலாயத்தில் அரங்கேற்றம் செய்யப் போவதையறிந்து அவர்களுடன் தானும் சேர்ந்து போக வேண்டுமே என்று அவசரமாக ஔவையார் பிள்ளையாருக்கு பூசை செய்தார். அப்போது பிள்ளையார் "ஔவையே அவசரப்படாதே பூசையை ஆறுதலாகச் செய் உன்னை நான் விரைவில் கைலாயத்தில் சேர்ப்பேன்" என்று கூறியபோது "சீதக் களப செந்தாமரைப் பூம்- பாதச் சிலம்பு பல இசை பாடப்" என்ற விநாயகர் அகவலை ஔவையார் பாடினார். பிள்ளையார் தனது துதிக்கையில் ஒவையாரை ஏற்றி. எல்லோருக்கும் முன் அவரைக் கைலாயத்தில் சேர்த்து அற்புதம் நிகழ்த்தினார். இதுவும் ஔவையாருக்குக் கிட்டிய ஒரு தெய்வானுபவமாகும்.

**ஔவையாரும் முருகனும்**

மாடுமேயக்கும் சிறுவனாக வந்த முருகப் பெருமானிடம் ஔவையார், சுட்டபழம் கேட்டு நாவற்பழம் பெற்றுக் கொண்ட சம்பவம் நாமெல்லாம் சிறுவயதிலே படித்து மனதில் பதித்துக் கொண்ட பக்திக் கதையாகும். அதுவும் ஔவையாருக்குக் கிட்டிய ஒரு தெய்வானுபவமாகும்.

இவரால் புகழ்ந்து பாடப்பட்ட அரசர்களாக அதிகமான். சேரமான். வெண்கோ, தொண்டமான், நாஞ்சில் வள்ளுவன், உக்கிரப் பெருவழுதி. இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி ஆகியோரைக் குறிப்பிடலாம்.

**ஔவையாரும் அதியமானும்.**

அதியமானுடைய பிறந்த நாளில் புலவர்கள் எல்லோரும் நீண்ட வாழ்த்துப் பாடல்களைப் பாடி அவனை வாழ்த்தினார்கள். ஆனால் "வரப்புயர" என்று மட்டுமே ஔவையார் அவனை வாழ்த்தினார். ஔவையாருக்குப் புலமையிலும்

வறுமை வந்ததா? அல்லது கஞ்சத்தனம் வந்ததா? என்று புலவர்களும், சபையினரும் ஔவையாரைப் பரிகசித்தனர். அப்போது ஔவையார் தனது பாடலை பின்வருமாறு பாடிக்காட்டிய போது அரசனும், புலவர்களும் ஆச்சரியப்பட்டு அவரின் புலமையை மெச்சினார்கள்.

"வரப்புயர நீருயரும்
நீருயர நெல்லுயரும்
நெல்லுயரக் குடியுயரும்
குடியுயரக் கோன் உயர்வான்"

ஔவையார் நீண்டகாலம் அதியமானிடத்திலேயே வாழ்ந்தார் என்றும் அறியக்கிடக்கிறது.

## ஔவையார் அருளிய அறிவுச் செல்வங்கள்

ஔவையார் பாடியவை எல்லாமே அறிவுச் செல்வங்கள்தான். சங்கச் செய்யுள் தொகுப்புக்களில் 59 பாடல்கள் ஔவையாரின் பாடல்களாக உள்ளன. நற்றிணை 07, குறுந்தொகை 15, அகநானூறு 04, புறநானூறு 33

அதியமானிடம் நெல்லிக்கனியைப் பெற்றுக் கொண்டபோது ஔவையார் பாடிய **சங்கப் பாடல்**

பால்புரை பிறைநுதல் பொலிந்த சென்னி
நீல மணிமிடற்று ஒருவன் போல
மன்னுக பெரும நீயே! தொன்னிலைப்
பெருமலை விடரகத்து அருமிசை கொண்ட
சிறியிலை நெல்லித் தீங்கனி குறியாது
ஆதல் தன்னகத்து அடக்கிச்
சாதல் நீங்க எமக்கு ஈந்தனையே !

இப்படி 33 செய்யுள்கள் காலத்தால் முந்திய சங்கச் செய்யுள் அமைப்பில் புறநானூற்றில் உள்ளன.

**ஆத்திசூடி 108 வரிகள்**

அறஞ்செய விரும்பு
ஆறுவது சினம்
இயல்வது கரவேல்
ஈவது விலக்கேல்

(இவை அகர வரிசைப்படியும், உயிர்மெய் எழுத்து வரிசையிலும் பாடப்பட்டவை.)

**கொன்றை வேந்தன் 91 வரிகள்**

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்
ஆலயம் தொழுவது சாலவும் நன்று
இல்லறம் அல்லது நல்லறம் அன்று
ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்

(இவையும் அகர வரிசைப்படியும், உயிர்மெய் எழுத்து வரிசையிலும் பாடப்பட்டவை.)

விநாயகர் அகவல் 72 வரிகள்

மூதுரை (வாக்குண்டாம்) 31 வெண்பாக்கள்

நல்வழி 41 வெண்பாக்கள்

தனிப்பாடல்கள் 70 பாடல்கள்

(இவற்றில் அதிகமானவை வெண்பா அமைப்பில் உள்ளன.)

'ஆத்திசூடி' 'கொன்றை வேந்தன்' என்பவை சிறுவர்கள் மனனம் செய்து மனதில் பதிவு செய்து கொள்வதற்காகப் பாடப்பட்ட இரத்தினச் சுருக்கமான அறிவுரைகள். மந்திரங்கள் போன்றவை. அல்லது சித்தாந்தங்கள் போன்றவை. அவற்றின் ஒவ்வொரு சுருக்கமான வரிகளும் செல்வத்துள் செல்வம் போன்றவை.

'மூதுரை' 'நல்வழி' சிறியோருக்கும் பெரியோருக்குமாகப் பாடப்பட்ட அனுபவ முதிர்வுகள். கற்போரின் சிந்தனையைத் தூண்டி நிதர்சனத்தை உணர்த்துபவை.

தனிப்பாடல்கள் பெரியவர்களின் கவனத்தை ஈர்ப்பவை. சமூகச் சிந்தனையை உண்டாக்குபவை.

**'வாக்குண்டாம், (மூதுரை) வெண்பாக்களில்,**

அற்ற குளத்தில் அறுநீர்ப் பறவைபோல்
உற்றுழித் தீர்வார் உறவல்லர் – அக்குளத்தில்
கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே
ஒட்டி உறுவார் உறவு.

இப்பாடலில் உண்மையான உறவினர் யார் என்பதை நிதர்சனமான உவமானம் மூலம் ஔவையார் கூறியுள்ளார்.

ஆழ அமுக்கி முகக்கினும் ஆழ்கடல்நீர்
நாழி முகவாது நாநாழி – தோழி
நிதியும் கணவனும் நேர்படினும் தத்தம்
விதியின் பயனே பயன்.

இப்பாடலில் நாம் எமது ஆவலுக்கேற்றபடி எப்படிச் செயற்பட்டாலும், விதியே வலிமையானது உலக மாந்தர் எல்லோரும் விதி வழிப்பட்டோர் என்ற உண்மையை உணர்த்தினார்.

மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்
மன்னனில் கற்றோன் சிறப்புடையன் – மன்னர்க்குத்
தன்தேசம் அல்லால் சிறப்பில்லைக் கற்றோர்க்குச்
சென்றஇட மெல்லாம் சிறப்பு.

இப்பாடலில் உலகத்தில் மன்னருக்குக் கிடைக்காத சிறப்பு கற்றோருக்கு கிடைக்கும் என்று சிறப்பித்துச் சொன்னார். 'நல்வழி' வெண்பாக்கள் அத்தனையும் அறிவுச் செல்வங்கள்தான்.

புண்ணியமாம்: பாவம்போம்: போனநாள் செய்தஅவை
மண்ணில் பிறந்தார்க்கு வைத்தபொருள் – எண்ணுங்கால்
ஈதுஒழிய வேறில்லை எச்சமயத்தோர் சொல்லும்
தீதுஒழிய நன்மை செயல்.

இப்பாடலில் எல்லாச் சமயங்களும் தீதை நீக்கி நல்லதைச் செய்யும்படியே சொல்கின்றன என்றார்.

வருந்தி அழைத்தாலும் வாராத வாரா
பொருந்துவன போமினென்றால் போகா– இருந்தேங்கி
நெஞ்சம் புண்ணாகி நெடுந்தூரம் தாம்நினைந்து
துஞ்சுவதே மாந்தர் தொழில்.

நாம் விரும்பியதெல்லாவற்றையும் பெற்றுக் கொள்ளலாம், நாம் விரும்பாததைத் தவிர்த்துக் கொள்ளலாம் என்று நினைப்போர், அது நடக்காத போது நமது முன்வினைப் பயனே எல்லாவற்றுக்கும் காரணம் என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றார்.

ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவரோ மாநிலத்தீர் – வேண்டா
நமக்கும் அதுவழியே நாம்போம் அளவும்
எமக்கென்னென்று இட்டுண் டிரும்

இப்பாடலிலே இறப்பின் உண்மையையும், மனிதரின் இயலாமையையும் உணர்த்தி எமது இறுதிக்காலம் வரை மற்றவர்களுக்கு உண்ணக் கொடுத்து வாழ்வதே சிறப்பு என்றார்.

ஆற்றங் கரையின் மரமும் அரசறிய
வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே –

இப்பாடலிலே வாழ்க்கையின் நிலையாமையை எதிர்வு கூறித் தெளிவுபடுத்தினார்.

செய்தீ வினையிருக்கத் தெய்வத்தை நொந்தக்கால்
எய்த வருமோ இருநிதியம்-- வையத்து
அறும்பாவம் என்னஅறிந்து அன்றிடார்க்கு இன்று
வெறும்பானை பொங்குமோ மேல்.

இப்பாடலில் வறுமைக்கு முற்பிறப்பில் செய்த பாவம்தான் காரணம் என்றும், இப்பிறப்பில் கொடை கொடுத்து முன்னைய பாவத்தைப் போக்கிக் கொள்ளுங்கள் என்றார்.

பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்துவைத்துக்
கேடுகெட்ட மானிடரே கேளுங்கள் -- கூடுவிட்டிங்கு
ஆவிதான் போனபின் ஆரே அனுபவிப்பார்
பாவிகாள் அந்தப் பணம்.

இப்பாடலிலே உங்கள் பணத்தில் புண்ணிய காரியங்கள் செய்யுங்கள். அந்தப் புண்ணியம் நீங்கள் இறந்த பின் உங்களோடு வரும். அப்படிச் செய்யாவிட்டால் உங்கள் பணத்தை யாரோ எடுத்துக் கொள்வார்கள். அதோடு உங்களுடன் புண்ணியமும் வராது என்றார்.

வெட்டெனவை மெத்தெனவை வெல்லாவாம் வேழத்திற்
பட்டுருவும் கோல்பஞ்சிற் பாயாது-- நெட்டிருப்பு
பாரைக்கு நெக்குவிடாப் பாறை பசுமரத்தின்
வேருக்கு நெக்கு விடும்.

இப்பாடலிலே கடுமையான சொற்களால் சாதிக்க முடியாத விடயங்களை மென்மையான சொற்களால் சாதிக்கலாம் என்பதை: யானையின் உடலில் ஊடுருவும் அம்பானது பஞ்சிலே பாயாது என்றும், இரும்பு அலவாங்குக்குப் பிளக்காத கற்பாறையானது மரத்தின் மென்மையான வேருக்கு பிளந்து வளர இடம் கொடுக்கும் என்றும், இரண்டு உண்மைகளைச் சொல்லி விளங்கப்படுத்தினார்.

**தனிப்பாடல்கள்**

'தனிப்பாடல் திரட்டு' என்ற நூலில், ஒளவையார் பாடிய 70 பாடல்கள் இடம் பெற்றிருக்கின்றன. தனிப்பாடல்களாக வேறும் பாடல்கள் இவர் பாடினாரா? என்று அறியமுடியவில்லை. செல் அரித்தவை, கால வெள்ளத்தில் அள்ளுண்டு போனவை எனப் பல பாடல்கள் எமக்குக் கிடைக்கவில்லை என்றுதான் நாம் சமாதானமடைய வேண்டும். சம காலத்தில் வாழ்ந்த கம்பர்

இராமாயணத்தையும் புகழேந்திப் புலவர் நளவெண்பாவையும் இயற்றிய போது ஔவையார் ஒரு காவியத்தையோ அல்லது ஒரு சிற்றிலக்கியத்தையோ பாடவில்லை என்பதும் ஆராய்வுக்குரியது. ஆனால் 'அசதிக் கோவை' என்ற நுலை ஆக்கினார் என்று அறிக்கிடக்கிறது.

தனிப்பாடல்கள்: வெண்பா. ஆசிரியப்பா. விருத்தம் முதலிய பாவகைகளில் அமைந்துள்ளன. எழுபது தனிப்பாடல்களும் வித்தியாசமான கருத்துக்களையும், அனுபவங்களையும் சொல்லுவனவாக இருக்கின்றன. இவற்றில் ஔவையாரின் அறிவாற்றல் வியப்பை உண்டாக்குகிறது. திருவள்ளுவர்: அறம், பொருள், இன்பம் என்று முப்பாலை 1330 குறளில் சொன்னார். ஆனால் ஔவையாரோ அறம். பொருள், இன்பத்துடன். பேரின்பத்தையும் சேர்த்து ஒரு வெண்பாவில் சொன்னார்.

ஈதலறந் தீவினைவிட்டு ஈட்டல்பொருள் எஞ்ஞான்றுங்
காதல் இருவர் கருத்தொருமித் – தாதரவு
பட்டதே இன்பம் பரனைநினைந்து இம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு.

முருகப் பெருமானை ஔவையார் நேரில் கண்டதான தெய்வ அனுபவத்தை யதார்த்த ரீதியான கருத்துக்களுடன் பாடியுள்ளார்.

இனியது கேட்கின் தனிநெடு வேலோய்
இனிது இனிது ஏகாந்தம் இனிது....
பெரியது கேட்கின் எரிதவழ் வேலோய்
பெரிது பெரிது புவனம் பெரிது....
அரியது கேட்கின் வரிவடி வேலோய்
அரிது அரிது மானிடராதல் அரிது....
கொடியது கேட்கின் நெடிய வெவ் வேலோய்
கொடிது கொடிது வறுமை கொடிது....

"ஐயம் இட்டு உண்" என்று ஆத்திசூடியில் சொன்னவர் தனிப்பாடலில்

ஐய மிடுமின் அறநெறியைக் கைப்பிடிமின்
இவ்வளவேனும் அன்னம்மிட்டு உண்மின்– தெய்வம்
ஒருவ னேயென்று முணரவல் லீரேல்
அருவினைக ளைந்து மறும். என்று கூறினார்.

சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்
வைத்ததொரு கல்வி மனப்பழக்கம் --நித்தம்
நடையும் நடைப்பழக்கம் நட்பும் தயையும்
கொடையும் பிறவிக் குணம்.

இப்பாடலிலே நட்பும். இரக்கமும். கொடையும் ஒருவருக்குப் பிறவிக்குணம் என்றார்.

இருந்து முகந்திருத்தி ஈரோடு பேன்வாங்கி
விருந்து வந்ததென்று விளம்ப-- வருந்திமிக
ஆடினாள் பாடினாள் ஆடிப் பழமுறத்தால்
சாடினாள் ஓடோடத் தான்

இப்பாடலிலே ஔவையாருக்கு அன்னமிடச் சொன்ன கணவனை அடித்து விரட்டிய சண்டாளியைப் பற்றிச் சொன்னார்.

மதியாதார் முற்றம் மதித்தொருகால் சென்று
மிதியாமை கோடி பெறும்
உண்ணீர் உண்ணீரென்று உபசரியார் தம்மனையில்
உண்ணாமை கோடி பெறும்
கோடி கொடுத்தும் குடிப்பிறந்தார் தம்மோடு
கூடுதல் கோடி பெறும்
கோடானு கோடி கொடுப்பினும் தன்னுடைநாக்
கோடமை கோடி பெறும்.

இப் பாடலிலே நான்கு கோடிகளைக் கூறிய ஔவையார் மனிதருக்கு நாக்குப் புரளாத நாணயமே சிறந்ததென்றார்

கற்றது கைம்மண்ணளவு கல்லாதது உலகளவுஎன்று
உற்ற கலைமடந்தை ஓதுகிறாள் -- மெத்த
வெறும்பந் தயங்கூற வேண்டாம் புலவீர்
எறும்பும் தன்கையால் எண்சாண்.

இப்பாடலிலே தற்புகழ்ச்சி வேண்டாம் கல்வி கரையிலது என்றார்.

தாயோடு அறுசுவைபோம் தந்தையொடு கல்விபோம்
சேயோடு தான்பெற்ற செல்வம்போம் --ஆயவாழ்வு
உற்றா ருடன்போம் உடன்பிறப்பால் தோள்வலிபோம்
பொற்றாலி யோடுஎவையும் போம்

இப்பாடலிலே மனிதருக்கு ஏற்படும் இழப்புக்களை ஒவ்வொன்றாகச் சொல்லி இறுதியிலே மனைவியை இழந்தால் எல்லாம் இழக்கப்பட்டுவிடும் என்றார்.

கருங்காலிக் கட்டைக்கு நாணாத கோடாலி
இருங்கதலி தண்டுக்கு நாணும்-- பெருங்கானில்
காரெருமை மேய்க்கின்ற காளைக்கு நான்தோற்றது
ஈரிரவும் துஞ்சாதுஎன் கண்.

இப்பாடல் ஔவையாருக்கு முருகன் காடசி கொடுத்த தெய்வானுபவம் சம்பந்தமானது. கருங்காலிக் கட்டையைப் பிளக்கும் கோடரி, வாழைத் தண்டைப் பிளக்காது. அதேபோல பாரோர் போற்றும் புலமை வாய்ந்த நான் மாடு மேய்க்கும் சிறவனாக வந்த முருகனிடம் தோற்றுவிட்டேனே என்று வெட்கப்படுகிறார்.

**முடிவுரை**

முன்னர் பாடசாலைத் தமிழ்ப் புத்தகங்களில் நிச்சயமாக ஔவையாரின் பாடல்கள் சில இடம்பெற்றிருக்கும். அவற்றைச் சிறுவயதிலேயே மாணவர்கள் மனனம் செய்து கொள்வார்கள். அவற்றின் பொருள் என்ன என்பதை பெரிய வயதில் உணரும்போது ஆச்சரியமாகவும், அற்புதமாகவும் இருக்கும். ஔவையாரின் அனுபவ அறிவும், தமிழ்ப் புலமையும் வியப்பை உண்டாக்கும்.

இப்போது இந்த அறிவுச் செல்வங்கள் தேடுவாரற்றுத் தெருவோரத்தில் எறியப்பட்டவையாகி விட்டன. ஔவையார் சிறியவர்களுக்காகவும், பெரியவர்களுக்காகவும் எவ்வளவோ கஸ்டப்பட்டு பனை ஓலை ஏட்டிலே பக்குவமாக எழுதிய இப்பாடல்கள், ஊர் ஊராகச் சென்று சிறுவர்களுக்கும், பெரியோருக்கும், அரசர்களுக்கும் பாடிக்காட்டிய இப்பாடல்கள் அவற்றின் பெறுமதியை இழந்துவிட்டன. இவைஎல்லாமேகல்வியாளரின்கவனத்திலிருந்து மறைந்து விட்டன. கல்வியின் தரமும், கனமும் குறைக்கப்பட்டமை இதற்குக் காரணமாகலாம். ஔவையாரின் அறிவுச் செல்வங்களின் பெறுமதி திரும்பத் திரும்ப எல்லோருக்கும் உணர்த்தப்பட வேண்டும்.

தென் இந்தியாவில் தமிழ் நாட்டில் கன்னியாகுமரி மாவட்டத்தில் 'முப்பாவிடல்' என்ற ஊரில் ஔவைப் பாட்டியார் இறந்த இடத்தில் அவரது உருவச்சிலை வைக்கப்பட்டுள்ளது. துளசியா பட்டணத்தில் அருள்மிகு விஸ்வநாத சுவாமி கோவிலில் ஔவையாருக்கான கோவில் இருக்கிறது. அங்கே வருடாந்தம் விழா நடாத்தப்படுகிறது.

தமிழ் நாடு அரசாங்கம் ஆண்டு தோறும் **பங்குனி சதய நட்சத்திர நாளில்** ஔவையார் விழாக் கொண்டாடுகிறது. தமிழ்நாட்டில் பல ஊர்களிலும் ஔவையாரின் உருவச்சிலைகள் வைக்கப்பட்டுள்ளன. இலங்கையிலும் வடக்கு கிழக்கில் சில பொது இடங்களிலும், வீதிச்சந்திகளிலும் ஔவையாரின் உருவச்

சிலைகள் வைக்கப்பட்டுள்ளன. வவுனியாவில் கொறவப்பொத்தானை வீதியில் வெளிக்குளத்தில் மாமடுச்சந்தியில் ஔவையாருக்கு நகரசபையினால் சிலை வைக்கப்பட்டுள்ளது. ஔவையாரின் சில பாடல்கள் ஆங்கிலத்தில் மொழி பெயர்ப்புச் செய்யப்பட்டுள்ளதாகவும் அறியக்கிடக்கிறது

தமிழ் இலக்கிய வரலாற்றில் தனது அதீத தமிழ்ப் புலமையினால் முதன்மை இடத்தைப் பெற்றுக் கொண்டு, பெண் புலமையளர்களுக்கே முன்னோடியாக வாழ்ந்த ஔவைப் பிராட்டியார் நம்மை விட்டு நீங்கி ஆண்டுகள் ஆயிரத்துக்கு மேல் முடிந்து விட்டன. அவர் தமிழ் சிறார்களுக்காகவும், பெரியவர்களுக்காகவும் அருளிச் செய்த அறிவுச் செல்வங்கள, அள்ள அள்ளக் குறையாதவை. அவற்றை எமது சமுதாயம் அக்கறையுடன் படித்துப், பாதுகாத்து எதிர்காலச் சந்ததியினருக்கு பரிசளிக்க வேண்டும். ஔவையாரின் பாடல்கள் பற்றிய விழிப்புணர்வு தமிழ் சமுதாயத்திலே முக்கியமாக இளைஞரிடையே ஏற்படுத்தப்பட வேண்டும். தமிழ் இலக்கிய வரலாற்றிலும், தமிழர் தம் நெஞ்சங்களிலும் ஔவையின் புகழ் என்றென்றும் நின்று நிலைக்க வேண்டும்.

**நா.தியாகராசா** BA, JP.
திருநாவற்குளம், வவுனியா.

ஈசன்



**இரசாயன உரங்கள், கிருமி நாசினிகள் விற்பனையாளர்.**

**இல: 27, பசார்வீதி, வவுனியா.**

# அவளும் பெண் தானே!

நந்தா

அல்லல் பட்டிருப்பாள்.
தொல்லைப்பட்டிருப்பாள்.
கல்லைத் தின்றிருப்பாள்.
நெல்லைத் தின்றிருப்பாள்.

வடிச்ச கஞ்சி குடித்தே
வயிற்றை நிரப்பி வைப்பாள்.
வந்தாரை வரவேற்று
வாஞ்சையுடன் உபசரிப்பாள்.
கஞ்சியை வடிச்செடுத்து
கணச்சூடு அடங்குமென்று
கோப்பையில் நிரப்பி வைத்து
குதூகலமாய் பேசிடுவாள்.

பசி நூற்கும் தண்ணீரும்
சில நேரம் தீர்ந்து விட
தறியாட்டம் இவள் மட்டும்
ஓயாமல் ஓடிடுவாள்.
கண்ணகியாள் பாதம்படில்
கால்சருகும் உயிர்த்தெழும்.
மாதரசி வாழ்வு கண்டு
மண்ணும் தலை வணங்கும்.

குடும்பம் குலையாம
கோட்டுக்கு போகாம
ஐந்து பிள்ளை பெற்றெடுத்து
அழகாக வளர்த்தெடுத்து
இஞ்சினியர் டாக்டர்
ஆக்கிவிட்ட மேதையவள்.
ஐந்தாம் வகுப்பும்
படித்து முடிக்கவில்லை.

பெண்மைக்கு இலக்கணமாய்
பெருமைகள் சேர்த்தமகள்
ஒற்றைக் குச்சியன்றி
பொன்னகை காணவில்லை.
அதுவும் சில நேரம்
அடகுக் கடை சேர்ந்துவிடும்.

அப்போதெல்லாம் வேப்பங்குச்சியே
காதிற்கு அணியாகும்.

பிள்ளைகள் வளரும் வரை
பூமகள் பொறுத்திருந்தாள்.
நன்றாக வளர்ந்த பிள்ளை
நல்வாழ்வு தந்தது – இன்று
நலமாக வாழ்கிறாள்.

இன்றைய விசித்திரமோ
கலிகால தரித்திரமோ
ஏது நாம் சொல்ல
நீரும் அறிந்திருப்பீர்
பாட்டிக்கு விசயம்
சொல்லவே வேண்டாம்.
பாவம் மீதமாய் உள்ள
உயிரும் போய்ச் சேர்ந்துவிடும்.

குண்டுமணி இல்லையென்று
கோட்டில் ஒரு கூட்டம்
குறட்டைத் தொல்லையென்று
கோட்டில் சில கூட்டம் – தமக்கு
சுதந்திரம் இல்லையென்று – ஒரு கூட்டம்
சுதந்திரம் வேண்டும் என்று மறுகூட்டம்
கதை பேச்சு இல்லையென்று ஒரு கூட்டம்
கஸ்ரப்படேலாது என்று சில கூட்டம்

நல்ல கைபேசி இல்லையென்று
ஒரு கூட்டம்.
நற்தாயை விலக்கென்று
சில கூட்டம்
நீதிமன்று வாசலிலே...
அணிவகுத்து நிற்கிறது.

காலக் கொடுமையிது – தந்த
பரிசிற்கு யாரைக் குறை சொல்ல.
அவளும் இங்கே தான்
அடிபட்டும் உதைப்பட்டும்
அன்புடனே வாழ்ந்தாள்
வாழ்கிறாள் நலமாய்.

# பந்தனங்கள்

**அருட்கலைவாரிதி. கலாபூசணம்**
**ஸ்தபதி.சு.சண்முகவடிவேல்**

தத்துவக்கருத்துக்கள் பொதிந்த விக்கிரகங்கள் அனைத்தும் சிற்ப ஆகம முறைகளில் செதுக்கப்பட்டு பிரதிஷ்டை செய்யப்படுகின்றன. .பிரதிஷ்டைக்கு முன்பாக ஆசனமும் விக்கிரகமும் பொருத்தும் இடத்தில் பலவிதமான பந்தனங்கள் செய்யப்படுகின்றன.அப்பந்தனங்கள் பற்றி சுருக்கமாகக் காண்போம்.

பந்தனம் என்பது பல பொருட்கள் சேர்ந்த சாந்து அல்லது கலவையாகும். பந்தனங்களை சுவர்ணபந்தனம், ஏகபந்தனம், திரிபந்தனம், பஞ்சபந்தனம், அஷ்டபந்தனம், என வகைப்படுத்தலாம்

**சுவர்ணபந்தனம் :**

சுவர்ணத்தில் இருவித பந்தனங்கள் செய்யலாம். (சுவர்ணம் – தங்கம்) தங்கத்தை குவையில் (உருக்குவதற்கு பயன்படும் பாத்திரம்) வைத்து உருக்கி ஆசனமும் விக்கிரகமும் பொருந்தும் பொருத்துவாய் இடுக்கில் ஊற்றி, சுத்தியலால் வளையமாகத்தட்டி அமைத்தல் உஷ்ண பந்தனம் எனப்படும்.

தங்கத்தை உருக்கி மெல்லிய தகடுகளாக்கி சூடு ஆறிய பின்னர், ஆசனமும் விக்கிரகமும் பொருந்தும் பொருத்துவாயில் செருகி சுத்தியலால் நன்குதட்டி ஆசனத்தையும் விக்கிரகத்தையும் ஒன்றாக்கல் சீதபந்தனம் எனப்படும்.

சிற்பிகளால் செதுக்கப்பட்ட அனைத்து விக்கிரகங்களுக்கும் உஷ்ண பந்தனமும் சீதபந்தனமும் பொருந்தும். தான்தோன்றி லிங்கங்களுக்கும், மிகப்பழமையான விக்கிரகங்களுக்கும் சீதபந்தனமே மிகவும் ஏற்றதாகும்.

தங்கத்திற்கு மாற்றாக வெள்ளி, ஈயம் போன்ற உலோகங்களிலும் முன்சொன்ன முறையில் உருக்கி பந்தனம் செய்யலாம். சுவர்ண பந்தனம் நூறு ஆண்டுகளும், வெள்ளி ஐம்பது ஆண்டுகளும், ஈயம் இருபத்தைந்து ஆண்டுகளும் ஆசனத்துடன் விக்கிரகத்தை இணைத்து வைத்திருக்கும்.

**ஏகபந்தனம் :**

ஏகபந்தனம் என்னும் கலவையில் வெள்ளைக் குங்கிலியமே முக்கிய பொருளாகும். குங்கிலியம் ஒரு பங்கும், தேங்காய் எண்ணெய் அரைப்பங்கும் சேர்த்து சட்டியில் போட்டு நெருப்பில் காய்ச்சி பந்தனமாக உபயோகிக்கலாம். (ஏகம் – ஒன்று) இப்பந்தனம் ஒருவருடகாலம் வரையில் நிலைத்திருக்கும். பாலஸ்தாபனம் செய்யும் பிம்பங்களுக்கு சாந்தாகப்பயன்படும்.

**திரிபந்தனம் :**

சுக்கான்தூள், வெள்ளைக்குங்கிலியம், வெண்ணெய் இம் மூன்றும் சேர்ந்த கலவையே திரிபந்தனம் ஆகும். சுக்கான் தூள் இரண்டு பங்கும், குங்கிலியம் மூன்று பங்கும், வெண்ணெய் அல்லது தேங்காய் எண்ணெய் இரண்டு பங்கும் சேர்ந்த கலவையை பாத்திரத்திலிட்டு நன்கு காய்ச்சி பந்தனமாகப் பாவிக்கலாம்.

இன்னொரு முறையிலும் இப்பந்தனத்தைத் தயாரிக்கலாம். மூன்று கலவைகளையும் காய்ச்சாமல் நன்றாகக் கலந்து, வெண்ணெய் சேர்த்து இடித்து மெழுகுபோலாக்கி பந்தனம் செய்யலாம்.

திரிபந்தனத்தை பிறிதொரு கலவைகள் கொண்டும் தயாரிக்கலாம். சுக்கான்தூள், சர்க்கரை, கனிந்த வாழைப்பழம் இம்மூன்றயும் நன்கு பிசைந்து திரிபந்தன சாந்து தயாரிக்கலாம்.

திரிபந்தனம் மூன்று ஆண்டுகள் வரைக்கும் நிலைத்திருக்கும். ஆசனத்தையும், விக்கிரகத்தையும் படிய வைப்பதற்கு இச்சாந்து பயன்படும். பாலஸ்தாபன விக்கிரகங்களுக்கும் இதை சாந்தாகப் பயன்படுத்தலாம்.

**பஞ்சபந்தனம் :**

சுக்கான் தூள், கொம்பரக்கு, குங்கிலியம், கஷாயம், வெண்ணெய் சேர்ந்த கலவையே பஞ்சபந்தனமாகும். (கஷாயம் என்பது கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய் என்பவற்றை அவித்தெடுக்கும் சாறாகும்.)

சுக்கான் தூள் ஒரு பங்கும், கொம்பரக்கு முக்கால் பங்கும், குங்கிலியம் இரண்டு பங்கும், கஷாயம் ஒரு பங்கும், வெண்ணெய் ஒரு பங்கும் சேர்த்து நன்கு காய்ச்சி பந்தனம் செய்யலாம்.

இக்கலவைகளைக் காய்ச்சாமலும் பந்தனம் தயாரிக்கலாம். ஐந்து கலவைகளையும் ஒன்று சேர்த்து இடித்து மெழுகுபோலாக்கி பந்தனம் செய்யலாம். இப்பந்தனம் ஆறு ஆண்டுகள் வரை நிலைத்திருக்கும்.

**அஷ்ட பந்தனம் :**

அஷ்டபந்தனம் எட்டுவிதமான பொருட்களின் கலவையாகும். இக்கலவை மிகவும் சக்தி வாய்ந்ததாகும். பெரும்பாலும் கும்பாபிஷேகக் கிரிகைகளின்போது இதையே சாந்தாகப் பயன்படுத்துவர். முறையாகத் தயாரிக்கப்பட்ட அஷ்டபந்தனம் நாற்பது ஆண்டுகள் ஆயுள் கொண்டதாகும். எனினும் பன்னிரண்டு வருட முடிவில் இக்கலவையை மாற்றுதல் வேண்டும்.

அஷ்டபந்தனம் எட்டுப்பொருட்களின் கலவையை மாத்திரம் குறிப்பதல்ல. இன்னுமொரு மிகமுக்கியமான கருத்திலும் வழங்கி வருகிறது. அதாவது எட்டுத்திக்குகளிலும் பந்தனம் செய்வதற்குரிய பொருளாகும்.

ஆசன, விக்கிரக பொருத்துவாயில் சாத்தப்படும் அஷ்டபந்தனம் எட்டுத்திக்குகளிலும் சரியான முறையில் சாத்தப்படல் வேண்டும். சரியாக சாத்தப்படாவிட்டால் ஊருக்குக் கெடுதல் ஏற்படும் எனறு சிற்ப நூல்கள் கூறுகின்றன.

அஷ்டபந்தனம் கல்காவித்தூள், சுக்கான் தூள், குங்கிலியம், செம்பஞ்சு, கொம்பரக்கு, ஜாதிலிங்கம், வெள்ளை மெழுகு, எருமை வெண்ணெய் என்பவற்றின் கலவையாகும்.

கல்காவித்தூள் ஒரு பங்கும் , சுக்கான் தூள் ஆறு பங்கும், குங்கிலியம் நான்கு பங்கும், செம்பஞ்சு ஒரு பங்கும், கொம்பரக்கு இரண்டு பங்கும், ஜாதிலிங்கம் இரண்டு பங்கும், வெள்ளை மெழுகு இரண்டு பங்கும், எருமை வெண்ணெய் ஒரு பங்கும் கொண்ட கலவையை உரலில் இட்டு நன்கு இடிக்க வேண்டும். இடிக்கும் போது ஏற்படும் சூட்டினால் இக்கலவை இளகிவிடும். இளகிய கலவையை உருண்டையாக உருட்டி வைக்க வேண்டும்.

விக்கிரகத்துக்கு அஷ்டபந்தனம் சாத்தும் பொழுது, உருண்டையாக்கிய கலவையை திரும்பவும் உரலில் போட்டு இடிக்க வேண்டும். இடிக்கும்போது இளகிவரும் பந்தனத்தை மெல்லிய கயிறு போல உருட்டி விக்கிரகமும் ஆசனமும் சேரும் பொருத்துவாயில் சாத்திவிடல் வேண்டும். சாத்தியவுடன் அஷ்டபந்தனம் கெட்டிப்பட்டுவிடும்.

பந்தனங்கள் பீடத்தையும், பிம்பத்தையும் இணைக்கும் பொருளாகவும், மருந்துகள் நிறைந்த மருத்துவப் பொருளாகவும் விளங்குகின்றன.

# பிறகு பார்க்கலாம்

த.நிறைமதி

இந்த நிமிடம் கண்டதெல்லாம் நான் காணாததாக இருந்திருக்கக் கூடாதா என மனம் ஏங்கியது. கால்களுக்குக் கீழே பூமி நழுவியது.... இதயத்தை யாரோ பிடித்து அழுத்தி கசக்கியது போன்ற வேதனை....

"கண்டதெல்லாம் பொய்" என மனம் அலறியது. அந்த வேதனையின் ஆழத்தை.... வலியை வெளிப்படுத்த வார்த்தையேது?

இது நாள் வரை வாழ்ந்த வாழ்வு.... எண்ணிய எண்ணங்கள்.... மனதை நிரப்பிய கனவுகள் எல்லாம் அந்த ஒரு கணத்திலே அர்த்தமற்றதாக ஆகிப் போனது!

இருபத்தொன்பது வயதின் முதிர்ச்சியை ஆளுமையை அடித்து வீழ்த்தி அழுகை வெடித்துக் கிளம்பியது. புயலென வீடு திரும்பி குளியலறையுள் நுழைந்து "ஓ" வெனக் கதறினேன்....

உயிரற்ற உடலாகிப்போனேன். உணவு வெறுத்தது. உறக்கம் விடைபெற்றது. அமைதியின் முகவரியை மனம் தொலைத்தது. இது பச்சைத் துரோகம் என்று எனக்குள்ளே நானிட்ட கூச்சல் எவருக்கு கேட்டிருக்கும்....! துளித்துளியாய் வீழ்ந்த நீரைச் சேகரித்து அருந்தப் போகும் தருணத்தில் யாரோ வந்து தட்க் கொட்டிவிட்ட நிலையில் எனது மனம்

அடுத்து வந்த நாட்களில் எல்லோரும் ஒரேவிதமாக விசாரித்தார்கள்.

"என்ன தம்பி செல்வம் உமக்கு வவுனியா பிடிக்கேல்லை போல.... ஜேமனியில இருந்து வரேக்கை நல்ல செழிப்பாய் இருந்தீர்.... இப்ப....என்ன அதுக்கிடையில நல்லா உடைஞ்சு போனீர்....."

மனதை அழுத்திய பாரத்தின் பிரதிபலிப்புக்கள். காரணத்தை கட்டாயம் கேட்டேயாக வேண்டும். காணட்டும் அவளை.... மனம் கூப்பாடு போட்டது. இரண்டு வாரங்களின் பின்பு அவளை எதிர்பாராத விதத்தில் நேருக்கு நேராகக் காணும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. அறிமுகமில்லாத ஒருவரைக் கண்டால் எப்படி நடந்து கொள்வார்களோ அப்படி நடந்து கொண்டாள்.

"என்னைத் தெரியேல்லை என்ன?

அவளது முகத்தை ஆவலோடும் கோபத்தோடும் ஏறிட்டேன். தனது ஞாபகங்களைத் தேடுவது போல புருவம் சுருக்கி, கண்களை இடுக்கி என்னைப் பார்த்தாள்

"மஞ்சு.....நான்.....செல்வன்.."

மிகுந்த ஏமாற்றத்தோடு நான் என்னை வெளிப்படுத்தினேன் "ஓ..! செல்....வன்..எந்த ..அஆ இலக்கிய மன்றமோ.....?

அவளது வார்த்தைகள் அதை வெளிப்படுத்திய விதம்.....எல்லாம் என்னை ரணப்படுத்தின. விட்டால் அங்கேயே அப்போதே அழுதிருப்பேன்.

அது ஒரு அழகிய காலம். உயர்தர பரீட்சை முடிவுகளுக்காகக் காத்திருந்த வேளை வவுனியா இலக்கிய மன்றத்தில் இணைந்திருந்தேன். மஞ்சுவும் தான்....!

ஒவ்வொரு ஞாயிறும் மாலை வேளைகளில் சைவப்பிரகாசாவின் மண்டபத்தில் ஒன்று கூடுவோம். இலக்கிய ஆக்கங்கள் ஆர்வங்கள் பற்றி அலசுவோம். அடுத்த ஞாயிறு எப்போது வருமென்ற ஏக்கங்களோடு ஞாயிறுகள் சென்று மறையும்.

மஞ்சு நன்றாக பாடுவாள். ஆழமான கவிதைகள் எழுதுவாள். இவளது ஆற்றல்கள், அடக்கமான அழகு எல்லாமே என்னைக் கவர்ந்தன. ஒரு நாள் சைவப்பிரகாசாவின் "மா' வின் கீழ் அவளது வருகைக்காகக் காத்திருந்தேன்.... கையில் கடிதத்தோடு மஞ்சு வந்தாள்....

என்னை ஒருமுறை நிமிர்ந்து பார்த்துவிட்டு நான் நீட்டிய கடிதத்தை வாங்கிக் கொண்டாள் போய்விட்டாள்....

"வாங்கீட்டாளே அப்பிடியென்டா....."

மனம் குதூகலித்தது.

ஆனால் அதற்குப் பின்வந்த நாட்கள் எனது ஏக்கமும் அவளது மௌனமுமாகவே கழிந்தன. அவளது பதிலை எதிர்பார்த்துத் தவிக்கத் தொடங்கினேன். அவளோ நீண்ட மௌனம். ஒருநாள் தைரியமாகக் கேட்டேன்.

"ம்......மஞ்சு ..... என்ன....ஒன்டும் சொல்ல மாட்டீராம்.

அன்று ஒருகணம் என்னை நிமிர்ந்து நோக்கினாள்.

"செல்வன்.... நான் ஒன்டு சொல்லட்டுமா?

நான் ஒன்றும் கூறாது அவளது கண்களை ஆராய்ந்தேன்.

"அதில்ல... உங்கட குடும்பத்தைப் பற்றி எனக்குத் தெரியும். அப்பா இல்லாத குடும்பத்தை அம்மா எத்தின நாளைக்கு கொண்டு சுமக்க முடியும். அதுவும் தம்பி, மூன்டு தங்கச்சிமாரெண்ட பெரிய குடும்பம் வேறை. அம்மா தோள் பாரத்தை மாற்ற வேண்டாமா? தொடர்ந்து படிப்போ உழைப்போ

தேடவேணும். பொறுப்புக்கள் நிறைவேற்ற வேணும். கண்ணுக்கு முன்னால இருக்கிற இந்தப் பொறுப்புக்கள் பெரிசில்லையா? முதலில அதுபற்றி யோசியுங்கோ..... கடமைகள முடியுங்கோ.... பிறகு பாப்பம் செல்வம்....!

"மஞ்சு ........ அப்படியென்டால்....."

"அதான்.....பிறகு பாப்பம் என்டு சொன்னேனே....!"

அவள் போய்....போய் விட்டாள்

"பிறகு பாக்கலாம் என்டா என்ன? எனக்காகக் காத்திருக்கிறன் என்டா சொல்லுறாள்! ஓம்....ஓம் அப்பிடித்தான்....பொறும் மஞ்சு கண்மூடித்திறக்கிறதுக்கிடையில என்ரை கடமைகள முடிச்சுப் போட்டு ஓடி வருவன்.. அன்றிலிருந்து மஞ்சு நானாகிப் போனாள். நான் அவளாகிப் போனேன்.

உழைப்பதற்காக வெளிநாடு ஓடினேன் சுகம், துக்கம், கஷ்டம், நஷ்டம், இரவு, பகல் எதுவும் பாராது உழைத்தேன். அந்த நாட்களில் எனது தாரக மந்திரம் மூன்று தான் குடும்பம் உழைப்பு, மஞ்சு.... ஆயிற்று.

காலங்கள் ஓடி ஒன்பது வருடங்களை விழுங்கி விட்டிருந்தது. இன்னும் இன்னும் மஞ்சு பசுமையாக மனதுள் பொக்கிஷமாக... அவளை நினைத்துக் கொண்டு அவளோடு வாழப்போகும் வாழ்க்கையை எண்ணிக்கொண்டு எனது பொறுப்புக்களை செவ்வனே நிறைவேற்றிய மகிழ்விலும் மஞ்சுவைக் காணப் போகும் பூரிப்பிலும் மீண்டும் ஊருக்குள் கால் பதித்தேன் அப்போது மனம் இலேசாக இருந்தது.

ஆனால் ஒன்பது வருடங்களின் பின்பு ஆவல் பூக்க நான் கண்ட மஞ்சு...... கழுத்தில் தாலியோடும் கையில் குழந்தையோடும் நின்றாள்! கதைப்பதற்கு எதுவுமில்லை என்பது போல் நின்ற மஞ்சுவைப் பார்த்து உடைந்தேன்.

"மஞ்சு......ஏன்......ஏன் இப்படி.....ஏன் என்னை ஏமாத்தினீர்......? மஞ்சு திடுக்குற்றாள்.

"ஏமாத்தினதோ....!

"எனக்காகக் காத்திருப்பன் என்டத மறந்திட்டீரா?"

மஞ்சு தனது ஞாபகங்களை திரட்டுவது போல மௌனம் காத்தாள் நகம் கடித்தாள். கண்களைச் சிறிது மூடினாள். பின்பு என்னை நேராகப் பார்த்தாள்.

"நான் யாருக்கும் எந்த வாக்குறுதியும் குடுத்ததாக ஞாபகமில்லை"

"பிறகு... பிறகு பார்க்கலாம் என்டதுக்கு என்ன அர்த்தம்....?

ஓ..! எல்லாம் ஞாபகத்திற்கு வந்தது போல மஞ்சுவின் முகம் பிரகாசித்தது.

"செல்வன்.... ஐயோ.... பொறுப்புக்கள் முன்னால இருக்கிற காலத்தில லவ் அது இதெண்டு திரிஞ்சு காலத்தை வீணடிக்கலாமா? ஒருவேளை நான் அப்ப ஒரேயடியாய் பிடிக்கேல்லை என்று சொல்லியிருந்தால் யார் கண்டது உங்கட செயற்பாடுகள் மாறிப்போயிருந்தால்....! வாழ்க்கையே திசைமாறி போயிருக்கும். இளமை எதையும் நிதானிக்காத பருவமல்லா.... ஏமாற்றங்களால வழிமாறிப்போகக் கூடாதே என்டு நினைச்சன். அந்த அக்கறையில தான் "பிறகு பாப்பம்" என்டு சொல்லியிருப்பன். அதவிட எனக்கு வேறை எண்ணங்களில்லை. வேறை அர்த்தமுமில்லை. சொறி செல்வம். அண்டைக்கு நான் சொன்ன சொல்லுக்கு எந்தப் பொருளும் இல்லை...

ஆழமாக அடிபட்ட ஆத்திரத்தோடு, காயத்தோடு, அவமானத்தோடு, இயலாமையோடு, ஏமாற்றத்தோடு விருட்டென பின்னால் திரும்பி நடந்து வந்து விட்டேன்.

"இனி ஜேமனிக்கு போகமாட்டன். என்டனி இப்ப திரும்ப ஏன் தம்பி போகநிக்கிறாய்" அம்மா தான் கேட்கிறா. கவலையோடு, அவளை மறக்காமலிருக்க முன்னம் போனனன். இப்ப அவள மறக்கிறதுக்காக இந்த ஊரைவிட்டு போறன்.

அம்மாவிடம் இப்படிச் சொல்ல முடியுமா?

மெல்ல சிரித்து வைத்தேன்.

Vaani

VAANI COMPUTER PRINTING CENTRE

Digital Printing, Banner, Sticker, Multi Colour Offset Printing, Computer Designing, T-shirt Printing, School Batch, School Tie, Medals, Binding, Laminating, Wholesale Dealers in All Kind Papers, Wedding Cards, Cake Boxes

No.85, Kanthasamy Kovil Road, Vavuniya.
Tele : 024 2223658, Mobile: 77 6316365
E-mail: vaaniprinting@gmail.com FB : vaani printers



## வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் "ஓவியக்கலைச்செல்வர்" விருதுபெறும் திரு.சோமசுந்தரம் ஸ்ரீராஜ்குமார் (ரவி ஆர்ட்ஸ்)

ஈழத்தின் வடக்கில், யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள உரும்பிராய் என்னு ஊரில் திரு கந்தையா சோமசுந்தரம், பத்மாவதி தம்பதிகளின் மகனாக திரு. ஸ்ரீராஜ்குமார் அவர்கள் 1058.11.16 ஆம் திகதி பிறந்தார்.

இவரோடு உடன் பிறந்தவர்கள் சாந்திகுமாரி(U.K), இந்திரகுமார்(U.K) தர்சினி(அமெரிக்கா), சாந்தகுமார்(வவுனியா) ஆகியோராவர்.

இவர் உரும்பிராய் இந்துக் கல்லூரியில் கல்விகற்று க.பொ.த. சாதாரண தரத்தை முடித்தபின் ஓவியத்துறையில் இருந்த அதீதமான ஈடுபாட்டின் காரணமாக ஆட்டிஸ்ட் மணியம் என அழைக்கப்பட்ட பிரபல ஓவியர் கலாபூஷணம் பெ. சுப்பிரமணியம் அவர்களிடம் ஓவியக்கலையைப் பயின்று ஓவியரானார்.

விளம்பர ஓவியங்கள், சினிமா பனர்கள், பாடசாலைச் சுவர் ஓவியங்கள், போட்டோ ஓவியங்கள், மற்றும் கோவில் ஓவியங்கள், பதாகைகள் எனப் பலவகையான ஓவியங்களை இவர் வரைந்து வருகிறார்.

வவுனியாவில் இந்து ஆலயங்களுக்கான திரைச் சேலைகள், பலவற்றை வரைந்துள்ளார். அத்தோடு தனி நபர் ஓவியங்களையும் வரைந்து வருகிறார்.

வவுனியாவில் றோயல் படமாளிகை, நியூ இந்திரா படமாளிகை, ஆகியவற்றுக்கான சினிமா கட் அவுட் களை சிறப்பாக வரைந்தார். இப்போது வசந்தி சினிமா படமாளிகைக்கான சினிமா கட் அவுட் களை வரைந்து வருகிறார்.

வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தில் வரையப்பட்ட பகவத் கீதைக் காட்சி, திருவள்ளுவர், பாரதியார், தமிழ்த்தாய், படங்களும், வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயத்தில் வரை யப்பட்டுள்ள பல படங்களும், வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க முன்பக்க மதில்ச் சுவரில் வரையப்பட்டிருக்கும் பசுவதைக்கு எதிரான அழகான ஓவியமும் இவரது கைவண்ணத்தில் உருவானவையே.

2010 இல் வவுனியா பிரதேச கலாசாரப் பேரவையும், வவுனியா பிரதேச செயலகமும் இணைந்து நடாத்திய பிரதேச இலக்கிய விழாவில், சிறந்த ஓவியக் கலைஞருக்கான கௌரவிப்பைப் பெற்றார்.

வவுனியா நகரசபை 2019 இல் நடாத்திய "எழு நீ விருது வழங்கல் விழா"வில் கௌரவிக்கப்பட்டார்.

தற்போது, இலக்கம் 04, காத்தார் சின்னக்குள வீதி, பூந்தோட்டம் வவுனியா என்ற முகவரியில் வாழ்ந்துவரும் திரு.சோமசுந்தரம் ஸ்ரீராஜ்குமார் அவர்கள் இன்னும் நீண்டகாலம் ஓவியப்பணியில் ஈடுபட்டு இக்கலையை வளர்க்க, எல்லாம் வல்ல இறைவன் இவருக்கு ஆரோக்கியத்தையும், நீண்ட ஆயுளையும் வழங்க வேண்டுமெனக் கேட்டு, இவருக்கு "ஓவியக் கலைச் செல்வர்" என்ற பட்டத்தை வழங்குவதில் எமது வட்டம் பெரு மகிழ்வு கொள்கிறது.

ஆசிரியர்





கடந்த ஆண்டின் மாணவச் சாதனையாளர் விருது

# இது உன் தவறல்ல

(நாடகம்)

நாடக மாந்தர் :-

- தந்தை : சூரியகாந்
- தாய் : விமலா
- மகள் : பானுஜா
- ஆசிரியர் : சுமதி
- முச்சக்கரவண்டிச் சாரதி : ரகு

**காட்சி – 1**

**இடம் : வீடு**

**பாத்திரங்கள் : தந்தை, தாய், மகள்**

(ஒரு குடும்பத்தில் தந்தை, தாய், மகள் என வாழ்ந்து வந்தனர். தாயும், தந்தையும் அலுவலக வேலைக்குச் செல்பவர்கள். மகளுக்கோ பதின்மூன்று வயது. தினமும் மகள் தனியாக முச்சக்கர வண்டியிலே பாடசாலை செல்வாள்.)

(காலை வேளை 5.30 மணியளவில் சூரியகாந் வீட்டில்)

தாய் (விமலா) :- (விறுவிறுப்புடன்) என்னங்க! என்னங்க! என்ன மாதிரி? என்ன Office க்கு கொண்டு போய் இறக்கி விடுறீங்களா? இல்லாட்டி நான் பஸ் பிடிச்சு போகட்டா?

தந்தை (சூரியகாந்) :- (கோபத்துடன்) பொறு பொறு நீ சீவி சிங்காரிக்கிறது எண்டா பொறுங்க போவோம் என்ப, வெள்ளன வெளிக்கிட்டியெண்டா என்னங்க, என்னங்க, எண்டு கத்திக்கொண்டு திரிவாய். பொறு வாறன்.

விமலா :- சரி பெரிசா பேசாம வாங்க, (அறைக்குள் சென்று) பானுஜா! அம்மா பானு எழும்புங்க. அம்மா Office க்கு போயிட்டு வாறன் மா. ரவி அங்கிள் வருவார் ஆட்டோவில ஏறி ஸ்கூல் போங்கம்மா.

பானுஜா :- அம்மா இண்டைக்குமா? ஏன் அம்மா, நீங்க கொண்டு போய் விடுங்களன். இல்லாட்டி அப்பாவ இறக்க சொல்லுங்கோ. ரவி அங்கிளோட நான் போகமாட்டன்.

விமலா :- இல்ல டாம் மா, அப்பாக்கும் வேலை, எனக்கும் வேலை. அம்மாட குட்டியல்லோ. வெளிக்கிட்டு போங்கம்மா.

பானுஜா :- சரிமா நான் போறன் (முக வாட்டத்துடன் செல்கிறாள்)

சூரியகாந் :- சரி பானுமா அப்பா போயிட்டு வாறன். (கைகாட்டியபடி தாயும், தந்தையும் சொல்கிறார்கள்)

## காட்சி – 2

**இடம் : ஓட்டோ**

**பாத்திரங்கள் : ரகு (ஆட்டோ சாரதி, பானுஜா**

(பானுஜா பாடசாலை செல்வதற்காக புறப்பட்டு முச்சக்கர வண்டியில் ஏறுகிறாள்)

| | |
|---|---|
| ரகு | :- (முச்சக்கர வண்டியின் கண்ணாடியை பானுஜாவின் முகம் பார்க்க திருப்பியபடி) பானுக்குட்டி சாப்பிட்டிங்களா? |
| பானுஜா | :- ம்.... சாப்பிட்டன் (கோவத்துடன் கூறுகிறாள்) |
| ரகு | :- என்ன பானுக்குட்டி அங்கிளோட கோவமா? |
| பானுஜா | :- ஓம்... அங்கிள். உங்களோட வரவே பயமா இருக்கு. |
| ரகு | :- ஏன் பானுக்குட்டி |
| பானுஜா | :- நீங்க சும்மா சும்மா தொடுறீங்க அது எனக்கு பிடிக்கல |
| ரகு | :- அங்கிள் ஒரு அன்பில தானே மா தொட்டன் அதுக்கா குட்டி கோவப்படுறீங்க? சரி இண்டைக்கு என்ன சோப் போட்டு குளிச்சீங்க? நல்ல வாசமா இருக்கு |
| பானுஜா | :- டவ் சோப் அங்கிள், சரி அங்கிள் நான் ஸ்கூல் போகணும் |
| ரகு | :- வாங்க போவோம். |

## காட்சி – 3

**இடம் : வகுப்பறை**

**பாத்திரங்கள் : சுமதி, பிள்ளைகள்**

(பாடசாலையில் ஆசிரியர் கல்வி கற்பிக்கும் போது)

| | |
|---|---|
| பிள்ளைகள் | :- குட் மோர்னிங் மடம் |
| ஆசிரியர் (சுமதி) | :- குட் மோர்னிங் பிள்ளைகள்! எல்லாரும் பாடத்த எடுங்க படிப்போம். |
| பிள்ளைகள் | :- மடம் இண்டைக்கு என்ன படிக்கப் போறோம் |
| ஆசிரியர் (சுமதி) | :- இண்டைக்கு தொடுகை பற்றி படிப்போம். |
| பிள்ளைகள் | :- மடம் அப்படி எண்டா....? |
| ஆசிரியர் (சுமதி) | :- தொடுகைகள் என்பது ஒருவரை தொடும் விதமாகும். தொடுகைகள் இரண்டு வகைப்படும். ஒன்று நல்ல தொடுகை (குட் ரச்) அடுத்தது கெட்ட தொடுகை (பாட் ரச்) |
| பிள்ளைகள் | :- நல்ல தொடுகையா? அப்படி எண்டா? |
| ஆசிரியர் (சுமதி) | :- உங்களில் ஒருவர் ஓடும் போது கீழே விழுந்தால் |

என்ன செய்வீங்க

பிள்ளைகள் :- தூக்கி விடுவோம். மருந்து போடுவோம்.

ஆசிரியர் (சுமதி) :- ஆம் பிள்ளைகள்! நல்ல எண்ணத்தில் தொடுவதே நல்ல தொடுகை. நீங்கள் கூடிய புள்ளி எடுத்தால் ஆசிரியர் நல்லது எண்டு தலையை தடவுவது. உங்களுக்கு வருத்தம் வந்தால் உங்களது தாய் கவனிப்பது போன்றது.

பிள்ளைகள் :- ஓ.... எனக்கு விளங்கிட்டு மடம், நல்ல தொடுகை பாதுகாப்பானது. எமக்கு விரும்பத்தக்கது. அப்படி எண்டா கெட்ட தொடுகை என்பது....

ஆசிரியர் (சுமதி) :- ம்... கெட்ட தொடுகை என்பது கூடாத எண்ணத்துடன் உங்களது அந்தரங்க உடல் உறுப்புக்களைத் தொடுவது. உங்களுக்கு நோவு ஏற்படும் வகையில் கிள்ளுவது. அடிப்பது, கடிப்பது என்பதை குறிப்பிடலாம்.

(பாடத்திற்கான நிறைவு மணி அடிக்கிறது)

சரி பிள்ளைகளே உங்களுக்கு சந்தேகம் இருந்தால் கேட்டுக்கொள்ளுங்கள்.

பிள்ளைகள் :- தங்யூ மடம்

## காட்சி – 4

**இடம் : பாடசாலை**

**பாத்திரங்கள் : பானுஜா, சுமதி**

(பானுஜா தனக்கு நேர்ந்தது பற்றி ஆசிரியரை தனியே சந்தித்து கூறுகிறார்.)

பானுஜா :- மடம்! கொஞ்சம் தனியா கதைக்கலாமா?

சுமதி :- ம்.... சொல்லு பானுஜா. ஏன் முகம் வாட்டமா இருக்கு

பானுஜா :- இல்ல மடம். இன்டைக்கு சொல்லி தந்தீங்க தானே, கெட்ட தொடுகை, நல்ல தொடுகை எண்டு

சுமதி :- ஓம் அதுக்கென்ன

பானுஜா :- இல்ல மடம் என்ன ஸ்கூலுக்கு இறக்கி விடுற ரகு அங்கிள் (பானு அழுகிறாள் ஆசிரியர் திகைத்தவாறு பார்க்கிறார்)

சுமதி :- என்னம்மா நடந்தது சொல்லுங்க.

பானுஜா :- அவர் என்ன கண்ட இடமெல்லாம் கூடாத தொடுகை (அழுகிறாள்)

சுமதி :- ம்... புரியுதுமா. இது பற்றி உங்கட அப்பா அம்மாட சொல்லியிருகீங்களா?

பானுஜா :- இல்ல மடம். அவுங்களுக்கு கேக்க நேரமில்ல. அந்த அங்கிளோட போக பிடிக்கல மடம். பயமா இருக்கு. காப்பாத்துங்க.

சுமதி :- சரி மா. இந்த அங்கிளிட்ட இருந்து காப்பாத்துறன். ஆனா இப்படி இனி நடக்க கூடாது. யாராவது உங்கள தொட முற்பட்ட முதல்ல "என்ன தொட வேண்டாம்" எண்டு உறுதியா கண்ணபாத்து சொல்லுங்க. இல்லாட்டி தப்பி ஓடப்பாருங்க. ஓட முடியாட்டி சத்தமா கத்துங்க. அப்படி அவர் கட்டாயப்படுத்தி ஏதும் பிரச்சினை எண்டா பெரியவங்களிட்ட சொல்லுங்க. இந்த தவறுக்கு நீங்க காரணமில்ல.

பானுஜா :- சரி மடம். நீங்க சொன்ன மாதிரியே செய்யுறன். போயிட்டு வாறான் மடம்.

## காட்சி – 5

**இடம் : வீடு**

**பாத்திரங்கள் : விமலா, பானுஜா**

(பானுஜாவின் சுகாதார ஆசிரியை சுமதி, பானுஜாவின் தாய்க்கு தொலைபேசி அழைப்பினூடாக அனைத்தையும் சொல்கிறார். தாயும் தனது தவறை உணர்ந்து கொள்கிறார்)

விமலா :- பானு ஏன் மா ரகு அங்கிள் பற்றி ஏங்கிட்ட சொல்லல. உங்கட சுமதி ரீசசர் போனில சொன்னவ.

பானுஜா :- இல்லமா உங்களுக்கும் வேலை, அப்பாக்கும் வேலை அதான்ம்மா சொல்லல

விமலா :- சரியம்மா. இனி ரகு அங்கிள் உங்கள கொண்டு போய் இறக்க மாட்டார். நான்... தான் வருவன். என்னட்ட என்ன எண்டாலும் சொல்லுங்க

பானுஜா : (முக மலர்ச்சியுடன்) உண்மையாவா சரியம்மா. இனி உங்க கூட தான் ஸ்கூல் போவன். என்னோட நல்ல அம்மா!

**டயாலினி இன்பநாயகம்**

கிறிஸ்தவ பிரிவு,, வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி.

# இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் எழுத்தால்சமூகத்தைநேசித்தவர்:தேசியத்தைவளர்த்தவர்

**கலாநிதி. கந்தையா ஸ்ரீகணேசன்,**
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,

ஓர் இலக்கியகாரனின் சிந்தனைத் தடத்தில் மனிதர்களின் நடத்தைக் கோலங்களும் அதனூடாக அவர்களின் சமூக ஊடாட்டங்களும் பதிவு பெறுகின்றன. அப்பதிவுகள் கால ஓட்டத்தில் அழியாச் சுவடுகளாக மாறிக் காலந்தோறும் மனித இருப்பின் அவலத்தை, சுவையை, இன்பத்தை அடுத்த சந்ததியினருக்கு எடுத்துச் செல்லும் தகைமை உள்ளவை ஆகின்றன.

அந்தவகையில் தமிழிலக்கியத்தில் சங்கப்பாடல்கள் மூலம் சிலப்பதிகாரமோ, தேவார திருவாசக, ஆழ்வார் பாடல்களோ, கம்பராமாயணமோ அல்லது சமகாலத்து நவீன தமிழிலக்கியப் படைப்புக்களான நாவல், சிறுகதை கவிதைகளோ மனிதரின் அவ்வக்காலத்து பாடுகளை எடுத்தியம்புகின்றவையே. அதனால் அந்தக் காலங்களும் அந்தப் படைப்பாளிகளும் என்றென்றும் மக்கள் மனங்களில் வாழ்ந்து கொண்டிருப்பர்.

அந்தவகையில் சமகாலத்து ஈழத்து தமிழர் வாழ்வின் பாடுகளை போருக்கு முந்திய, போர்க்காலத்து, போருக்குப் பிந்திய காலத்து மக்கள் துயர்களைத் தமது எழுத்தினூடாக கொண்டு வந்தவர் இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் அவர்கள் என்றால் மிகையாகாது.

1978 இல் பாடசாலை மாணவனாக இருந்த காலத்தில் தந்தையார் சிதம்பரநாதபிள்ளையின் கலை உலகினால் உற்சாகம் பெற்றும் அக்காலத்து முன்னணி எழுத்தாளர்களின் படைப்புக்களினால் உந்தப் பெற்றும் சிறுகதை உலகில் பிரவேசித்து மித்திரன், வீரகேசரி எனத் தொடங்கி பின்னாளில் ஈழநாடு, ஈழமுரசு, முரசொலி, ஈழநாதம், உதயன், தினக்குரல் எனப் பல்வேறு பத்திரிகைகளிலும் மல்லிகை, அமிர்த கங்கை, செய்திக்கதிர், வெளிச்சம், ஆதாரம், உள்ளம், எனப்பல ஈழத்து சஞ்சிகைகளிலும் எழுதி முன்னணி எழுத்தாளராகப் பரிணமித்தார்.

1998 இல் "என்றாவது ஒரு நாள்?" என்னும் குறுநாவலிலை இணுவில் கலை இலக்கிய வட்டத்தின் நிகழ்வொன்றில் வெளியிட்டதன் மூலம் பிரசுர உலகிலும் தம்மை வெளிக்காட்டிக் கொண்ட திருச்செந்திநாதன் தொடர்ந்து 1988 இல் "முடிவல்ல ஆரம்பம்" எனும் நாவலை மீரா வெளியீடாக வெளியிட்டதன் மூலம் நாவல் உலகிலும் தம்மைப் பதிவு செய்து கொண்டார். சீதனம், சாதி, போராட்டச் சூழல் என யாழ்ப்பாண நிலைமைகளை படம் பிடிக்கும்

இந்நாவல் போராட்ட காலத்தைப் பகைப்புலமாகக் கொண்டுள்ளது. (ஜீவநதி, கார்த்திகை, 2018). 1991 இல் அவரது அடுத்த நாவல் "முள்முடி மன்னர்கள்" மீரா வெளியீடாகவே வந்தது. குடும்பச் சுமையுடன் கல்வி, வேலைவாய்ப்பு என அலையும் யாழ்ப்பாண இளைஞர்களின் வாழ்வியலை எடுத்துக் காட்டும் படைப்பாக காணப்படுகின்றது. 1992இல் மீரா வெளியீட்டாகவே பிரசுரிக்கப்பட்ட "மீண்டும் புதிதாய்ப் பிறப்போம்" எனும் நாவல் போரின் பாதிப்புக்கள், பெண்களின் இக்கட்டான சூழ்நிலை, இடப்பெயர்வு என கதைக்களம் விரிகின்றது.

தொண்ணூறுகளில் தீவிரமாக எழுத்துப் பணியோடு பத்திரிகைப் பணியிலும் ஈடுபட்டு தேசியம் சார்ந்த கலை இலக்கிய பத்திரிகைச் செயற்பாட்டில் முழுமூச்சாக ஈடுபட்டார். போரின் எல்லாவிதமான தாக்கங்களுக்கும் ஈடுகொடுத்து ஊர் விட்டு ஊர்மாறி தமது குடும்பத்தையும் இணைத்துக் கொண்டு அவர் ஆற்றிய எழுத்துப் பணி காலத்தால் என்றும் போற்றப்படும்.

எண்பதுகளின் ஆரம்பத்தில் இணுவில் கலை இலக்கிய வட்டத்தின் செயற்பாடுகளோடு தன்னைப் பிணைத்துக்கொண்டு தலைவராகவும் பணி ஆற்றியதோடு பல்வேறு கருத்தரங்குகள், விமர்சன அரங்குகள், நூல் வெளியீடுகள், என்பவற்றையும் ஒழுங்கு செய்து தமது இளவல்களுக்கு வழிகாட்டினார்.

இடப்பெயர்வு காலத்தில் தாம் வாழ்ந்த சூழலிலும் வன்னி இலக்கிய இளவல்களுக்கு ஒரு வழிகாட்டியாக இருந்து எழு கலை இலக்கியப் பேரவையை உருவாக்கினார். அவ்விலக்கிய குழுவின் வெளியீடாக சிறுகதைத் தொகுப்பு மற்றும் நூல்களை வெளியிட்டதோடு கருத்தரங்குகளையும் வன்னிப் பகைப்புலத்தில் நடாத்தியதோடு மீண்டும் யாழ்ப்பாணத்தில் வேலை செய்த காலத்தில் 'தளவாசல்' என்னும் புதிய சஞ்சிகையின் 4 இதழ்களை தமது இலக்கிய இளம் நண்பர்களான கை.சரவணன், நிசாகரன், மயூரரூபன் ஆகியோரோடு இணைந்து வெளியிட்டிருந்தார்.

இளவயதில் தந்தைவழி நின்று ஒரு சில நாடகங்களை எழுதி மேடையேற்றியிருந்தார். 'தேவயானி', 'சுக்கிராச்சாரியார்', 'அரங்கேற்றம்' போன்ற நாடகங்களுடாக ஊர் மக்கள் மத்தியில் பிரபல்யம் பெற்றிருந்த திருச்செந்திநாதன் தமது சிறுகதைகள் ஊடாக குறிப்பாக வீரகேசரி வார மலரில் வெளிவந்த கதைகள் ஊடாக நாடளாவிய ரீதியில் புகழ் ஈட்டியிருந்தார். 150 க்கும் மேற்பட்ட சிறுகதைகளை எழுதி வெளியிட்ட திருச்செந்திநாதன் அவர்கள் 4 சிறுகதைத் தொகுதிகளையும் இலக்கிய உலகிற்கு அளித்துள்ளார்.

வெட்டுமுகம் (1973), என்னுடையதும் அம்மாவினதும் (1998), மணல்வெளி அரங்கு (2002) என்பன தேசிய கலை இலக்கிய பேரவை வெளியீடுகள் ஆகவும் 'மருத்துவர்களின் மரணம்'(2016), எழு கலை இலக்கியப் பேரவையின் வெளியீடாகவும் வெளிவந்துள்ளன.

யாழ்ப்பாண மத்தியதர வர்க்கத்து வாழ்நிலைகள், போர், இடப்பெயர்வு, நெருக்கடிகள் என்பவற்றோடு போர்க்காலத்து இளைஞர் அவலங்கள் என்பன சிறுகதை கருப்பொருட்களாக அடையாளம் கண்டுகொண்டுள்ளார். போருக்குப் பிந்திய காலச் சூழலில் மக்களின் அவலங்களை 'மருத்துவர்களின் மரணம்' என்னும் சிறுகதைத் தொகுப்பின் ஊடாக வெளிக்கொணர்ந்துள்ளர்.

நாடகம், நாவல், சிறுகதை எனும் வடிவங்களுடபக இலக்கியத் தடம் பதித்த திருச்செந்திநாதன் அவர்கள் ஒரு பத்திரிகையாளனாக, பத்திரிகை ஆசிரியராக பணியாற்றிய வேளையில் இளைய படைப்பாளிகளை அரவணைத்தும், வழிகாட்டியும் நின்ற பக்குவம் பல இளைய தலைமுறை எழுத்தாளர்களால் இன்றும் போற்றப்படுகின்றது. புதுக்குடியிருப்பில் எழுகலை இலக்கியப் பேரவையை உருவாக்க திருச்செந்திநாதனுடன் தோளுக்கு தோளாக நின்றவர் போரின் உக்கிரத்தில் மறைந்த பத்திரிகையாளர் அமரர் சத்தியமூர்த்தி.

அமரர் திருச்செந்திநாதன் பத்திரிகை எழுத்துக்கள் ஊடாக பல்வேறு விமர்சகர், ஆய்வாளர் கருத்துக்களை புதிய வாசகர்களுக்கு அறிமுகம் செய்து வைத்தவர். சிதம்பரநடராஜன், நி.இராஜநாயகி, நடராஜன் மைந்தன், இணுவிலான் எனப் பல புனைபெயர்களுடன் தனது பதிவுகளை மேற்கொண்டிருந்தார். சமகால இலக்கிய செல்நெறிகள் பற்றியும், தரமான இலக்கிய விமர்சனங்களை அறிமுகப்படுத்தியும் இலக்கியப் பணிபுரிந்தவர்.

**'தளவாசல்'** சஞ்சிகை அவரது இலக்கிய இதழாக பரிணமித்து வந்த வேளையில் நோயின் கடுந்தாக்கத்தினால் தம்முயிரை நீத்து புகழுடல் எய்தினார். இரு வருடங்களுக்கு முன்னர் தனது வாழ்க்கைத் துணைவியை இழந்ததிலிருந்து உற்சாகம் குன்றியிருந்த நண்பர் திருச்செந்திநாதன் தனது இரு ஆண்பிள்ளைகளையும் இரு பெண் பிள்ளைகளையும் தவிக்கவிட்டு மறைந்து விட்டமை ஈழத்து இலக்கிய உலகிற்கு ஒரு பெரும் இழப்பு ஆகும்.

தெல்லிப்பளை பிரதேச செயலகத்தின் நிர்வாக உத்தியோகத்தராக கடமையாற்றி ஓய்வு நிலையைக் கடந்த 4 வருடங்களுக்கு முன் பெற்றிருந்தார். அன்னாரின் ஆத்ம சாந்திக்காக நாமும் பிரார்த்திப்போம்.

## இறங்கிட நீயும் தயங்குவதா?

மைதிலி தயாபரன்

அன்பின் வழியிலேயெம் உயிர்நிலையே யென்றிடவே
அனைத்துப் பரிமாணம் அன்புக்குள் அடங்கியதாய்
அன்பாம் இயல்பதனை பிராணிக்காய்க் காட்டிடவும்
இரக்கம் எனவேயொரு பெயரதனை வைத்திட்டாய்

சிபியரசின் இரக்கமே புறாவுக்காய் ஆகிடவே
சிரத்தையுடன் தந்துநின்றான் சிறுபறவை அதற்கெனவே
பசுவின் துயரமதைப் பார்த்திடவே துணியானாய்
புத்திரனைக் கொடுத்திடவே வந்துநின்ற சோழமன்னன்

பாசம் என்னுமொரு படிமத்தை வைத்தெடுத்து
படைத்திட்டான் பெற்றோரைத் தன்னுடைய அம்சமென
நேசமதைக் கொடுத்திட்டார் நல்பேற்றைக் தந்துநின்றார்
நலமுடனே வளர்ந்திடவும் நல்லபல வழங்கிநின்றார்

பாசத்துக்கு இலக்கணமோர் தசரதனைக் காட்டியுமே
பந்தத்தின் ஆழமதை சொந்தத்தில் கொட்டியெடுத்து
தேசத்தின் எழுச்சியெனத் தெளிந்துநின்ற தனயனுமே
தேசமெங்கும் பாசமதைத் தெளிவாகக் காட்டிநின்றான்

காதலையும் அன்பையுமே கண்ணாகக் காட்டவென
காரிகைகள் தாம் வந்தார் கருத்தினிலே கவர்ந்திழுக்க
கண்ணும் கண்ணும் நோக்கி காதல் நோய் தனையெடுக்க
கண்ணாளன் நினைவினிலே காதல் மணம் விசும்பியதும்

தமயந்தி வைதேகி பாஞ்சாலி சந்திரமதி
தாரையுடன் உருமையும் மண்டோ தரியுமே
தானெல்லா மரபினரும் களவியலைக் கொண்டுநின்றார்
தாமாக வெளிப்படுத்தித் தரமதனைப் பேணிட்டார்.

அனைத்துபல வடிவமதில் ஆக்கிநின்ற அன்பதுவும்
என்பில்லா மனிதன்போல் எங்கேயோ ஓடிடவும்
அன்பதனின் பரிமாணம் அதுவறியா நின்றிடவும்
அன்பைத் தேடியலை அவலநிலை எழுந்ததுவா?

ஆக்கமென்றே ஆக்கிவிட்ட அகிலமதைக் கொண்டிமுக்க
அன்புநிலை அதுவென்றும் பரிமாணம் எடுத்திடுமோ
ஆக்கியோனே நீ இன்று ஆக்கமதைத் தேடுவதா?
ஆண்டவனே நீயுமிங்கு இறங்கிவரத் தயங்குவதா ?

## இந்தியாவுக்கு சுதந்திரம் வழங்கப்பட்ட வரலாறு

1947 ஆகஸ்ட் 15 நாம் எப்படி சுதந்திரம் பெற்றோம் மௌண்ட் பேட்டன், நேருவை அழைத்து உங்கள் இந்தியாவிற்கு சுதந்திரம் கொடுக்கப் போகிறோம். அதை எப்படிக் கொடுப்பது என்று கேட்க நேருவுக்கு குழப்பமாக இருந்தது. எதை அடையாளமாக வைத்து சுதந்திரத்தைப் பெறுவது (பிரிட்டிகூஷ் அரசு இந்தியாவுக்கு சுதந்திரம் வழங்கியது என்பதற்கு எந்த சாசனமும் இல்லை) உடனே நேரு, மூதறிஞர் ராஜாஜியை அணுகி "எனக்கு இந்த நடைமுறைகள் தெரியாது. அதனால் தாங்கள் தான் தீர்வு கூற வேண்டும்" என்று கூற, உடனே ராஜாஜி "கவலை வேண்டாம் எங்கள் தமிழகத்தில் மன்னர்களிடம் ஆட்சி மாற்றம் ஏற்படும் போது ராஜகுருவாக இருப்பவர் செங்கோலைப் புதிய மன்னருக்குக் கொடுத்து ஆட்சி மாற்றம் செய்வார். நாமும் அந்நியன் கையால் சுதந்திரம் பெறுவதை விட குரு மகானின் கையால் செங்கோலைப் பெற்று ஆட்சி மாற்றம் அடையலாம்" என்றார். நேருவும் "நேரம் குறைவாக உள்ளது உடனே ஏற்பாட்டை செய்யுங்கள்" என்று உத்தரவிட்டார்.

ராஜாஜி உடனே திருவாவடுதுறை ஆதீனத்தைத் தொடர்பு கொண்டு விசயத்தை சொல்ல அப்போது கடும் காய்ச்சலில் இருந்த ஆதினம் அவர்கள் உடனே முறையாக செங்கோல் தயாரித்து தங்க முலாம் பூசி இளைய ஆதினம் தம்பிரான் பண்டார சுவாமிகளிடம் பொறுப்பை ஒப்படைத்து கூடவே ஓதுவார் மூர்த்திகளையும் உடனே அனுப்பி வைத்தார்.

(தேவாரத்தில் இருந்து கோளறு பதிகம் பதினொரு பாடல்களை குறித்துக் கொடுத்தார். இந்த பாடல்களை அப்போது ஓதுவார் மூர்த்திகள் பாடவேண்டும்)

ராஜாஜி அனுப்பிய தனி விமானத்தில் அவர்கள் செங்கோலுடன் டில்லி

தொடர்ச்சி.. பக்.92



# செவ்வாய் (குஜன் / அங்காரகன்) தோசம் தொடர்பான ஜாதக ஆய்வு

இன்றைய எமது சமூகத்தில் திருமண வாழ்வில் பாரிய நெருடலையும் அச்ச உணர்வினையும் கொடுத்துக்கொண்டுள்ள விடயம் செவ்வாய் தோசம் என்றால் மிகையில்லை. அதிகமாக இது இந்து மக்களால் திருமணப்பொருத்தத்தில் கடைப்பிடிக்கப்படுகின்ற விடயமாகும். நெருப்பில்லாமல் புகையாது. காரணம் இல்லாமல் காரியம் இல்லை. எமது இந்துமதம் மனிதனுக்கு பயன்படக்கூடிய அனைத்துவகையான அறியலையும், விஞ்ஞான ரகசியங்களையும் அழகிய கதைகள் ஊடாகவும், சம்பிரதாயங்கள், அனுஸ்டானங்கள், வழிபாடுகள் ஊடாகவும், பழக்கவழக்கம், விரதங்கள், உணவுமுறைகள் ஊடாகவும் காலையில் துயில் எழுவதில் இருந்து இரவு தூங்கும் வரையும் ஏன் தூங்கிய பின்பும் ஒரு மனிதன் எவ்வாறு செயற்பட்டால் உடல்,மன ஆரோக்கியத்துடன் வாழ்வான் என்பதற்கான பலஆயிரம் காரணகாரியங்களை வகுத்து வைத்துள்ள அற்புதமான அறிவியல் பூர்வமான ஒரு மதத்தத்துவம் என்றால் மிகையில்லை.

ஆனால் இவைகள் அறிவியலை மையப்படுத்தி உருவாக்கியுள்ள கோட்பாடுகளே ஒழிய கற்பனையில் பேய்க்கதைகளை உருவாக்கி அகோர உருவங்களை காட்சிகளாக காட்டும் சினிமாப்படங்கள் அல்ல. ஆனால் அது தற்காலத்தில் நிஜ வாழ்வில் சினிமாப்படம் காட்டும் அகோர பேய்க் காட்சிகள் போன்று மாறிவிட்டது. எமது ஆயிரம் விஞ்ஞானிகளுக்கு சமமான ஆற்றலைக்கொண்ட சித்தர்களாலும், ரிசிகளாலும், யோகிகளாலும், ஞானிகளாலும் உருவாக்கப்பட்ட முழுக்க முழுக்க அறிவியலாக உருவாக்கப்பட்ட ஜோதிடமும் அதன் மூலமாக உரைக்கப்படுகின்ற செவ்வாய் தோசம் என்பதும் இன்று மனிதவாழ்விற்கும் குடும்ப வாழ்விற்கும், திருமண வாழ்விற்கும் பாரிய தடைக்கற்களாக மாறியுள்ளது.

இதற்கு காரணம் எமது மக்களுக்கு இவ்விடயம் தொடர்பான பூரணமான அறிவு இல்லாமையே. இந்நிலை மாற்றப்பட வேண்டும். இன்று ஒட்டுமொத்த மக்களின் திருமண வாழ்வும் ஒரு குறுகிய கூட்டத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

ஒரு விடயத்தில் உள்ள அறிவியலை நோக்காது அல்லது புரிந்து, அறிந்து கொள்ளாது ஒவ்வொருவரும் மனம்போன போக்கில் கதைப்பதும் கற்பனை செய்வதும் தாங்கள் தாங்கள் நினைத்தபடி முடிவுகளை எடுப்பதும் இதன் மூலமாக உரிய வயதில் நடைபெறவேண்டிய திருமணம் காலம் கடந்து வயதான பின்னர் நடைபெறுவதற்கு காரணமாக இருப்பது. மன்னிக்கமுடியாத குற்றமாகும்.

இதனைப்போன்று மனம்போன போக்கில் செவ்வாய் தோச விதிகள், விலக்குகள் ஆராயப்படாது கண்டபடி இணைப்புக்கள் செய்யப்பட்டதால் சிறுவயதில் திருமணப்பிரிவினைகள், சிறுவயது விதவைகள் , புரிந்துணர்வற்ற மணவாழ்வுகள் என பல ஆயிரம் துன்பங்கள் எம்மக்கள் மத்தியில் சுமத்துப்பட்டுள்ளது. இது யார் தவறு?

செவ்வாய்தோச நிர்ணயமானது எமது நல்வாழ்விற்காக, சந்தோசமான குடும்ப வாழ்விற்காக உருவாக்கப்பட்ட அறிவியல் உண்மைகளை நாம் பிழையாக பயன்படுத்தி யானை தன் தலையில் தானே மண்ணை வாரிப் போடுவது போன்றதான தவறினை செய்துகொண்டுள்ளோம்.

இக்கொடிய மாயமான கற்பனை பிடியில் இருந்து தாங்கள் மீள்வதற்கு இக்கட்டுரையினை தெளிவாக முழுமையாக படித்துணருமாறு தயவாக தாங்களை கேட்டுக்கொள்கின்றேன். (விளக்கத்தில் தெளிவின்மை ஏற்பட்டால் தாங்கள் என்னுடன் நேரடியாக தொடர்பு கொண்டு தெளிவைப்பெறலாம்.)

தற்போது இக்கட்டுரையில் செவ்வாய் தோச விளக்கம் விரிவாக ஆராயப்படும். இதில் செவ்வாய் தோசம் பற்றி ஆன்மீக, விஞ்ஞான, மருத்துவ, பூகோள ரீதியாக ஆராச்சியும் செவ்வாய் தோசம் அற்ற நிலையும் தோச விதிவிலக்குகளும் செவ்வாய் தோச பரிகாரங்களும் தொடராக விளக்கப்பட்டுள்ளது.

## செவ்வாய் ஹிரகத்தின் தன்மை எப்படிப்பட்டது?

## புராணத்தில் செவ்வாய்

சப்தரிசிகளில் பரத்வாஜரிற்கு பிள்ளையாக பிறந்தவர் அங்காரகன் எனும் செவ்வாய் ஆவார். இது ஒரு அழகிய கதை. நர்மதை நதிக்கரையில் ஆச்சிரமம் அமைத்து வாழ்ந்த மகாதவ சிரேஸ்டரான பரத்வாஜர் ஒரு நாள் நர்மதை நதிக்கரைக்கு நீராடச் சென்ற போது அங்கு நீராடிக்கொண்டிருந்த

தேவகன்னிகையினை கண்டு மனம்தடுமாறி ஆசைக்கு உட்பட்டு தேவ கன்னிகையும் பரத்வாஜரும் இணைந்ததால் உருவானவர்தான் செவ்வாய். ரிஷி பிண்டம் இரவு தங்காது என்ற முதுமொழி உண்டு என்பதற்கு அமைய அன்றே பிறந்தார் செவ்வாய்.

பிறந்தது முதல் சிறுவயது வரை தாய் தந்தையரால் கைவிடப்பட்ட அக்குழந்தை பூமாதேவியையே தாயாக எண்ணி வளர்ந்து உரிய வயதை அடைந்ததும் பூமாதேவியிடம் "அன்னையே என் விபரம் அறிந்தது முதல் தாயாக உங்களை மட்டுமே பார்த்து வருகின்றேன். என் தந்தையை பார்த்தது இல்லை. அவர் யார்? எனக்கு அவரை பார்க்க ஆவலாக உள்ளது". என்று கேட்கவே பூமாதேவியும் இனியும் ரகசியம் கூடாது என்று எண்ணி நடந்தவைகள் அனைத்தையும் கூறி "நான் உன்னை பெற்ற தாயல்ல வளர்த்த தாய்தான் உன் தந்தை மகாதவசிரேஷ்டரான பரத்துவாஜ மகரிஷியாவார்" என்று கூறியதுடன் அக்குழந்தையை அழைத்துக்கொண்டு பரத்வுவாஜ மகரிசியின் ஆச்சிரமத்திற்கு வந்து குழந்தையைப் பற்றி எடுத்துக்கூறி அவர் பிள்ளையை அவரிடமே ஒப்படைத்து விட்டு ஆசிகள் வழங்கி நான் உனக்கு எப்போதும் உதவி செய்வேன் என்று கூறி சென்றார்.

மகரிஷி பரத்துவாஜரும் அழகும், ஆண்மையும், பலமும், தேஜஸீம் உடைய தன் மைந்தனைப்பார்த்து மனமகிழ்ந்து அவனுக்கு "அங்காரகன்" என்று பெயரிட்டார். தன்மகனுக்கு பரத்துவாஜர் மகரிசி சகல சாஸ்திரங்களையும் முறைப்படி கற்றுக்கொடுத்து அவனை சிறந்த அறிவாளியாகவும் ஆன்மீகவாதியாகவும் ஆக்கியதுடன் அனைத்து படைக்கலப் பயிற்சிகளை வழங்கி சிறந்த படைத்தளபதியாகவும் ஆக்கினார். இதுதான் செவ்வாய்க்கிரக தோற்ற புராண வரலாறு.

## வானியல் ரீதியாக நோக்குவோமாயின்

சூரியக்குடும்பத்தில் ஒரு உறுப்பினர்தான் செவ்வாய் இந்த செவ்வாய். ஹிரகத்தினை தீவிரமாக விஞ்ஞானிகள் ஆய்வு செய்து வருகின்றார்கள். செவ்வாய்க்கு பூமிக்காரகன் என்ற பெயரும் உண்டு. பூமிக்கு சகோதர ஹிரகமாக செவ்வாய் உண்டு. சூரியக்குடும்பத்தில் சூரியனுக்கு அடுத்து புதன் உள்ளது.புதனை அடுத்து சுக்கிரன் உள்ளது.சுக்கிரனை அடுத்து பூமிமண்டலம் எனும் பூமியும் பூமியைச் சுற்றியவாறே சந்திரன் பூமியுடன் இணைந்தே சூரியனை சுற்றி வருகின்றது.பூமிக்கு அடுத்து சூரியனைச்சுற்றி வரும் 5ஆவது ஹிரகம் செவ்வாய் ஆகும்.

செவ்வாய் ஹிரகத்தில் உயிரினங்கள் வாழ்கின்றனவா? எனவும் அதில் வாழும் உயிரினங்கள் பூமியில் வாழும் மனிதனை விட அறிவியல் ஆற்றலை

அதிகமாக கொண்டுள்ளனவா? என்ற வகையில் பல நாடுகள் விண்வெளி ஆய்வில் மும்முரமாக செயற்பட்டுக்கொண்டுள்ளன.

## ஜோதிடத்தில் செவ்வாய்

ஜோதிட ரீதியாக செவ்வாய் ஹிரகம் தொடர்பாக ஆராயின் பல தன்மைகளில் நோக்கலாம்

உடலியல், குணம், பண்பு ரீதியாக அவரது ஆதிக்கத்தன்மை மட்டுமே இங்கு நோக்கப்படுகின்றது.

நவக்கிரகங்களில் ஒன்றான செவ்வாய் உடலின் ரத்தஅணுக்களுக்குரிய ஹிரகம். இதனை பூமிக்குரிய ஹிரகமாகவும் உடன்பிறப்பிற்குரிய ஹிரகமாகவும் சோதிடவியல் வல்லுனர்கள் குறிப்பிட்டுள்ளனர். நல்ல பாசமான சகோதரம் அமைவதற்கும், நல்ல கணவன் அமைவதற்கும் செவ்வாய், பிறப்பு ஜாதகத்தில் நல்லநிலையில் அமைந்திருப்பது முக்கியம்.

மனிதர்களின் நடத்தையினை நிர்ணயிப்பதில் செவ்வாய்க்கு முக்கிய பங்குண்டு. தைரியம் வீர தீர பராக்கிரமம், ரத்தபந்த பாசம், மரபணு, ரத்தஅணுக்கள் (மனிதர்களின் ரத்த வகை) என்பவற்றுக்கும் செவ்வாய்க்கும் சம்பந்தம் உண்டு என மருத்துவ ஜோதிடம் கூறுகின்றது. உடல்சூடு, உஷ்ணம், சுறுசுறுப்பு, ஆண்களின் விந்தணுக்கள் ஆகியவற்றிற்கு செவ்வாய்தான் காரணம். செவ்வாய் பலம் பெற்றஜாதகர்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தி அதிகமாக காணப்படும்.

ஒருவர் காரமான உணவினையும், அதிகசூடான உணவினையும், மாமிச உணவினையும் அதிகமாக விரும்பி உண்பதற்கு இந்த செவ்வாய் ஆதிக்கந்தான் காரணம். ஒருவர் வேகமாக செயற்படவும் அதிக கோபம் கொள்ளவும்,தைரியமாக போராட்டங்களில் ஈடுபடவும் செவ்வாய் ஆதிக்கமே காரணம்.

உடலின் அதிக காம உணர்விற்கும், சண்டை சச்சரவுகள், வன்முறைகள் பிரிவினைகள் திடீர்முடிவுகள் அனைத்திற்கும் செவ்வாய்தான் காரணம்.

செவ்வாய் வீரியத்திற்கு உரிய ஹிரகம் என்பதால் ஆண் பெண் இருபாலருக்கும் அது சரியாக அமைந்திருக்க வேண்டும். ஜாதகத்தில் தோசம் எனக் குறிப்பிடப்படுவது இந்தக் குறைபாட்டினைத்தான். எனவே ஒருவருக்கு அவரது ஜாதகத்தில் செவ்வாய் நீசமாகி சுபக்கிரக பார்வை இல்லாமல் இருந்தால் அவருக்கு காமத்தில் குறைவான ஈடுபாடுதான் அமைந்திருக்கும்.

ஆண்பெண் இருவருக்கும் சரியான விகிதத்தில் செவ்வாய் அமைந்திருக்க வேண்டும். அப்பொழுதுதான் அவர்களின் தாம்பத்திய வாழ்க்கையில் இன்பம்

ஏற்படும். பெண்ணுக்கு வலுவான செவ்வாய் அமைந்திருந்தால் ஆணுக்கும் வலுவான செவ்வாய் அமைந்திருக்க வேண்டியது கட்டாயம் என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும்.

ரத்தத்தின் காரகனான செவ்வாய் ஆதிக்கம் உள்ளவர்களுக்கு மற்றவர்களை விட சற்றே கூடுதலாக உணர்ச்சி இருக்கும். அது சிலருக்கு கோப உணர்ச்சியாகவும் சிலருக்கு வேக உணர்ச்சியாகவும் சிலருக்கு காம உணர்ச்சியாகவும் இருக்கும். செவ்வாய் ஆதிக்கம் பெற்றவர்களுக்கு தாம்பத்தியத்தில் அதிக நாட்டம் இருக்கும். செவ்வாய் ஆதிக்கம் பெற்றவர்களையே செவ்வாய் தோசம் பெற்றவர்களாக கூறப்படுகின்றது. அதனால் தோசம் இல்லாதவர்கள் காலப்போக்கில் தாம்பத்தியத்தில் இருந்து விலகுவர்.

தோசம் இல்லாதவர்களுக்கு தோசம் உள்ளவர்களை திருமணம் செய்து வைத்தால் அவர்களுக்குகிடையில் தாம்பத்திய ரீதியான பிரச்சினைகள் ஏற்படும். சூசகமாக கூறவேண்டுமானால் ஒருவர் விரும்ப ஒருவர் மறுப்பு தெரிவிப்பார். ஒரு கட்டத்தில் பிரிவினைகளை கொண்டதாக வாழ்வு அமைந்து விடும்.

எனவே செவ்வாய் ஹிரகத்தின் தன்மை குடும்ப வாழ்வின் தாம்பத்திய உறவின் சுகதுக்கங்களையே ஆளுகை செய்வதால் திருமணப்பொருத்தத்தில் கட்டாயமாக செவ்வாயின் நிலை கவனிக்கப்பட்டு பொருத்தமானதன்மை ஏற்படுத்தப்பட்டதன் பின்னரே திருமணம் அனுமதிக்கப்படவேண்டும். இதனைக் நான் இங்கு முக்கியப்படுத்தி கூறுவதன் காரணம் திருமண பந்தத்தில் இணைபிரியாத பந்தபாசத்தனை ஏற்படுத்தும் ஆற்றல்மிக்க கருவியாக செவ்வாய் அமைந்திருப்பதனால் ஆகும்.

ஆனால் மாறாக அதிகமான மக்களினால் ஆதாரமற்ற (காகம் நிற்க பனம்பழம் விழுந்ததுபோல) ஏதோ காரணத்தினால் அல்லது வேறு பல பல காரணங்களினால் நடைபெற்ற மரணத்தினை செவ்வாய் தோசம் காரணமாக நடைபெற்றதாக மூடநம்பிக்கையை பரப்புவதற்காக அல்ல என்பதை தாங்கள் புரிந்து கொள்ள வேண்டும். ஒருவருக்கு ஏற்பட்ட மரணத்திற்கு மிகமுக்கியமாக செவ்வாய் தோசமே காரணம் என்பதற்கு அறுதியிட்ட உறுதியான முடிவுகள் ஆராய்ச்சி ரீதியாக கண்டறியப்படவில்லை.

ஏன் எனில் மரணம் என்பது அனைவருக்கும் பொதுவானது என்பதுடன் மரணத்தின் வகைகளை ஜோதிடம் பல ஹிரக நிலைகளையும் பல விதிகளையும் கூறி அதனை வகைப்படுத்தியுள்ளது. இந்நிலையில் ஆணுக்கு அல்லது பெண்ணுக்குள்ள செவ்வாயால்தான் மரணம் ஏற்படுகின்றது என்பதை 100% ஜோதிட ஆராய்ச்சி ரீதியாக ஏற்றுக்கொள்ளமுடியாத தன்மை நிலவுகின்றது.

இதன் உண்மைகளை ஜோதிட அபிமானிகள் புரிந்து கொள்ளவேண்டும். ஒரு மனிதனானவன் ஒரு தாயின் கருவில் உருவாகும்போதே அவன் விதியும் (மனித வாழ்வியல் நிகழ்ச்சி) நிர்ணயிக்கப்பட்டு விடுவதை ஜோதிட சாஸ்திரம் தெளிவாக உறுதிப்படுத்தியுள்ளது.

இங்கு விதி என்பது ஒரு பிறந்த குழந்தையின் ஜாதகத்தினை ஆராய்ந்து இக்குழந்தை கல்வியில் மாமேதை, ஒரு நாட்டின் ஜனாதிபதி, மருத்துவமேதை, தொழில் அதிபர், கீர்த்திமான், புகழ்மான், கல்வியில் சாதனை செய்யமுடியாத குழந்தை, மோசமான குணநலன்களை கொண்ட பிள்ளை என பல ஆயிரம் விடயங்களை குழந்தையின் ஜாதகத்தினை ஆராய்ந்து குறிப்பிடமுடியும். அவ்வாறு அனைத்துமே குழந்தை பிறப்பின்போதே நிர்ணயிக்கப்பட்டுவிட்டது என்பது உறுதிப்படுத்தப்படுகின்றது.

இதன் நிதர்சன விளக்கம் யாதாயின் மனிதவாழ்வில் பிறப்பு முதல் இறப்பு வரையான வாழும்காலத்தில் இடைநடுவில் ஏதுவுமே ஏற்படுவதில்லை. இதனைத்தான் எமது யோகசுவாமிகள் அடிக்கடி கூறிய "எப்பவோ முடிந்தவிடயம், ஒரு பொல்லாப்பும் இல்லை, எல்லாம் சொற்படி வித்தை", என்ற தத்துவ முத்துக்கள் வெளிப்படுத்துகின்றன.

இதனைத்தான் ரமணமகரிசிகள் தமது அமிர்தவாக்கியத்தில் "அவரவர் பிராப்த பிரகாரம் அததற்கானவன் ஆங்காங்கு நின்று ஆட்டுவிப்பான். எது நடைபெறமுடியாதோ அது எம்முயற்சியினும் நடைபெறாது. எது நடைபெறுமோ அது எம்முயற்சியிலும் நிறுத்தமுடியாது" என்கின்றார்.

இதனைத்தான் எமது ஜோதிடக்கிரந்தம் "மனிதனின் அவரவர் தமக்குள்ள – ஆயுள் – கல்வி – பொருள் – எழில் – மரணம்... எனும் அனைத்தும் தவமுடைய பிரமதேவன் சிவனின் அருளாலே கர்ப்பத்தில் நிச்சயிப்பான்" என்கின்றது.

இவைகள் அனைத்தும் தங்களுக்கு எதனைக் காட்டுகின்றது? அனைத்துமே முடிந்தமுடிவு என்பதை மிக வலுவாக பிரகடனப்படுத்துகின்றன.

எனவே ஒருவரின் மரணத்திற்கும் விபத்திற்கும் வேறு ஒருவர் காரணம் அல்ல. எனவே செவ்வாய் தோசம் எனும் நிர்ணயத்தினை திருமண பந்தத்தினால் ஒரு ஆணும் பெண்ணும் பெறுகின்ற உடல் – மன இன்பத்துடன் மட்டும் இணைத்துப்பாருங்கள். இனிவரும் காலத்தில் நீங்கள் செவ்வாய் தோசத்தினை பயத்துடன் நோக்காது ரசனையுடன் உணர்வுடன் நோக்குவதற்கும் பார்ப்பதற்கும் பழகிக்கொள்ளுங்கள். ஏதுமற்ற மக்கள் பாமர மக்கள் தமது மகனுக்கு அல்லது மகளுக்கு செவ்வாய் தோசம் இருந்தால் அது ஏதோ தீண்டத்தகாத விடயம் போல தலையில் இடி விழுந்தது போல பயம்கொண்டு அலைவதைக்காண்கையில் மிகவும் மனவேதனையாக உள்ளது. இதனை ஜோதிடர்களாகிய சிரேஷ்டர்கள் தயவு கூர்ந்து அவர்களின் அறியாமையால் அவர்கள் அனுபவிக்கும் துன்பத்திற்கு தெளிவான விளக்கம் அளித்து உண்மையை உரைத்து அவர்களை ஆற்றுப்படுத்துங்கள். இது

ஒவ்வொரு ஜோதிருடையதும் மற்றும் சமூகத்தில் உள்ள புத்திஜீவிகளின் தலையாய கடமையாகும்.

இதனை மையமாகக் கொண்டு வாசகர்களின் தெளிவிற்காக செவ்வாய் தோசம் தொடர்பான சிறு புரிதலை இக்கட்டுரையில் மூலமாக தாங்கள் அறிந்து கொள்ளலாம்.

## செவ்வாய் தோசம் நிர்ணயம்

செவ்வாய் தோசம் 03 சுற்றுக்களாக கணிக்கப்படும்.




தாங்கள் ஜாதகங்களில் **இல** என்று போடப்பட்டுள்ள இடத்தில் இருந்து மேற்கண்டவாறு 1-2-4-7-8-12 எனும் ஆறு இடங்களில் செவ்வாய் இருந்தால் எந்த இடத்தில் செவ்வாய் உள்ளதோ அந்த இடத்தினை குறிக்கும் ஸ்தான எண்ணால் செவ்வாய் தோசம் உரைக்கப்படும். இதனை நீங்களாகவே மணிக்கூட்டு கடிகார சுற்று தெசையில் எண்ணி கணக்கிட்டுக்கொள்ளலாம்.




தாங்கள் ஜாதகங்களில் **சந்திரன்** என்று போடப்பட்டுள்ள இடத்தில் இருந்து மேற்கண்டவாறு இலக்கினத்திற்கு கணக்கிட்டது போன்று கணக்கிட்டு அறிந்து கொள்ளலாம்.




தாங்கள் ஜாதகங்களில் **சுக்கிரன்** என்று போடப்பட்டுள்ள இடத்தில் இருந்து மேற்கண்டவாறு இலக்கினத்தற்கு கணக்கிட்டது போன்று கணக்கிட்டு அறிந்து கொள்ளலாம். மேற்குறிப்பிட்ட படி ஆறு இடங்களில் செவ்வாய் இருந்தால் தோசம் என்று கூறப்படாலும் அதனை அப்படியே எடுத்துக்கொண்டு தோசம் பாதிப்பு உண்டு என்று கலங்கி

நிற்கவேண்டாம் இதற்கு பல பல விதி விலக்குகளை ஜோதிட சாஸ்திரம் எடுத்து இயம்புகின்றது. இவ்விதி விலக்குகளை அறிந்து கொள்வதன் ஊடாக செவ்வாய் தோசம் பற்றிய வீண் பயம் அச்சத்தினை தவிர்த்து சாதாரணமாக திருமணப்பொருத்தம் நிச்சயிக்கலாம். விதி விலக்குகளை நோக்குவோம்.




01, செவ்வாய் மேற்குறிப்பட்டபடி தோச இடத்தில் இருந்தாலும் அது செவ்வாயின் ஆட்சி- உச்ச- நீச- வீட்டில் இருந்தால் செவ்வாய் தோசம் பாதிப்பு அற்ற தன்மையாக கொள்ளப்படும் இதற்கு தோசம் உண்டு என்றஅடிப்படையில் நோக்காது தோசமற்றதாக கணக் கெடுத்தல் வேண்டும்.

02, சிம்ம இலக்கினத்தில் பிறந்தவர்களுக்கு செவ்வாய் எங்கிருந்தாலும் தோசம் இல்லை என்று பிரம்மஸ்ரீ P.S ஐயர் எழுதிய விவாஹ விஞ்ஞானம் என்ற நூலில் தெளிவாக குறிப்பிட்டுள்ளார்.

03, குரு சேர்க்கை பார்வை படும் செவ்வாய் தோசமற்றதாக கொள்ளப்படும் இதனை குரு பார்க்க கோடி தோசம் நிவர்த்தி என்பர். எனினும் ஆட்சி உச்ச வீட்டில் குரு இருந்து பார்த்தால் அதி விசேசமாகும்.




குறிப்பு:- குரு தான் நின்ற இடத்தில் இருந்து 5-7-9 ஆம் இடங்களை நோக்குவார் மணிக்கூட்டு திசையில் எண்ணிக்காண்க. உதாரணத்திற்கு கடகராசியில் குரு நின்றால் அதன் பார்வை படும் இடங்கள் சுட்டிக்காட்டப் படுகின்றது. இதனைப் போன்று நீங்கள் உங்கள் ஜாதகத்தில் குரு நின்ற இடத்தில் இருந்து அவரது பார்வை தங்கள் ஜாதகத்தில் உள்ள செவ்வாயை பார்வை செய்கின்றதா? எனக்கண்டு கொள்ளலாம்.




04, குரு ஆட்சி உச்சம் பெற்றுள்ள யோகஜாதகர் செவ்வாய் தோசம் உள்ள மறுதரப்பினால் பாதிக்கப்படமாட்டார் எனவே இவ்வாறானவர்கள் செவ்வாய் தோசம் உள்ள ஜாதகர்களை அச்சமற்று மணம் முடிக்கலாம். இது தொடர்பாக நான் பாதிப்பற்ற தன்மைகளை

ஆராய்ந்து அறிந்துள்ளேன். இவ்விதி 99% சரியானது. இவ்வாறான நிலையினைக் காட்டும் ஜாதக அமைப்பு




05,செவ்வாய் நட்பு பெற்று அமைந்திருந்தால் இதன்பாதிப்பு குறைவாக காணப்படும். எனவே தோசம் குறைந்தவரையோ அல்லது தோசம் அற்றவரையோ திருமணம் செய்து கொள்ளலாம். எனவே நட்பு பெற்று செவ்வாய் உள்ளவர்களும் வீண் அச்சம் கொள்ளத் தேவையில்லை.

06, மிருகசீரிடம், சித்திரை, அவிட்டம் ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு செவ்வாய் தோசம் பார்க்கத் தேவையில்லை.

07, ஜாதகத்தில் இலக்கினத்தினையோ 7 ஆம் இடத்தினையோ அல்லது பெண்களுக்கு 8 ஆம் இடத்தினையோ குரு வலுவாக பார்த்தால் செவ்வாய் பாதிப்பு இல்லை.

08, மேடம்-விருட்சிகம்-கடகம்-மகரம் ஆகியவற்றில் ஓரிடம் இலக்கினமாக அமைந்தவர்களுக்கும் தோசம் இல்லை.

09,செவ்வாய் அமர்ந்துள்ள நட்சத்திரபாதசாரம் மிருகசீரிடம்-சித்திரை-அவிட்டம் எனில் தோசமில்லை.

இதனை விட மேலும் பல விதிவிலக்குகள் ஜோதிட ஹிரந்தங்களில் உரைக்கப்பட்டுள்ளன. எனவே வீண் பயம் அச்சங்களை கைவிட்டு செவ்வாய் தோச விதிவிலக்குகளை சீர்தூக்கி பார்த்து திருமணம் புரிந்து மனமகிழ்வான வாழ்வை வாழுங்கள்.

**தோசம் அதிகமுள்ள செவ்வாய்த் தாக்கத்தினை நோக்குவோம்.**

**01, சூரியன் செவ்வாய் இணைந்த நிலை**

சிலவகையில் அமைந்துள்ள செவ்வாய் கிரகத்திற்கு அதிகமான தோச பாதிப்புக்கள் உண்டு.

கீழ் கண்ட இராசிகளில் சூரியன் செவ்வாய் இணைந்திருந்தால் அதன் பாதிப்பு மிக மிக அதிகம். இது ஆணைவிட அதிகமாக பெண்களுக்கே தாக்கம் அதிகமாக காணப்படும். சூரியன் செவ்வாய் இணைவதால் அதிகபாதிப்பினை ஏற்படுத்தும் இராசிகள் மேடம்- சிம்மம்- விருட்சிகம்- மகரம் இந்த நான்கு இராசிகளில் அதிகபாதிப்பு ஜாதக ஆய்வில் கண்டறிப்பட்டுள்ளது.( சில விதி விலக்குகள் இருக்கலாம் ஆனால் அது 10% மாகவே இருக்க முடியும்.)

இத்தோசம் தொடர்பாக திருமணப்பொருத்ததில் மிக அவதானமாக துல்லியமாக ஆராய்தல் வேண்டும். விதிகள் விதி விலக்குகள் இருந்தால் மாத்திரமே திருமணம் பொருத்தம் வழங்குதல் வேண்டும்.




இவ்விடங்கள் 1-7-8-12 எனில் பாதிப்பு அதிகமாகவும், 2-4 ஆம் இடங்கள் எனில் பாதிப்பு 50% குறைவாகவும் காணப்படும். பாதிப்புக் களின் தன்மை ஒவ்வொருவரது ஜாதக தன்மைக்கு அமைவாக குடும்ப பிரிவினை-தூரஇடமாக வாழ்தல்- மரணம்-பாரிய நோய்கள்- விபத்து க்கள் என்று பலவாறு பாதிப்புக்கள் ஏற்படுவது ஜாதக ஆய்வின் மூலமாக அறியப்பட்டுள்ளது.




ஏனைய 3-5-6-9-10-11 இடங்களில் இச்சேர்க்கை பெரியளவிலான பாதிப்பினை வழங்குவது இல்லை. ஆனால் குற்றம் குறையான வாழ்க்கைக்கு காரணமாக அமைந்துள்ளது கண்டறியப்பட்டுள்ளது. இக்குற்றம் குறைகளாக கல்வி-சாதி-மதம்-குலம்-உருவம்-அந்தஸ்து-பட்டம்-பதவிகளில் குறைநிறைகள் ஏற்பட்டுள்ளது ஜாதக ஆய்வில் கண்டறியப் பட்டுள்ளது. பாதிப்பு அற்ற இடங்களில் சூரியன் செவ்வாய் இணைந்துள்ளது உதாரணத்திற்கு கீழ் காட்டப்பட்டுள்ளது.




02, கன்னி இராசியில் செவ்வாய் இருந்து சுபக்கிரக பார்வை இன்றி பாவக்கிரக பார்வை ஏற்படுவது பாதிப்பு அதிகமாக காணப்படும் தன்மை ஆராய்ந்து அறியப்பட்டுள்ளது. "கன்னி செவ்வாய் கடல் நீரையும் வற்றச் செய்யும்..." இவ் உதாரண ஜாதகத்தில் கன்னி இராசியில் செவ்வாய் கேதுவுடன் அமைய சனி இராகு பார்வை செய்வது காட்டப்பட்டுள்ளது. இங்கு சனி 3-7-10 ஆம் பார்வை செய்வது காட்டப்பட்டுள்ளது.

03, சனியும் செவ்வாயும் இணைந்திருந்தோ அல்லது பார்வை செய்வது 1-2-4-7-8-12 என்ற இடமாக இருந்தால் பாதிப்பு மிக அதிகமானது. இதனை

ஜோதிட ஹிரந்தம் "மந்தன் சேய் இருவர் சேர்ந்து இருந்த இடமும் பார்த்த இடமும் அந்த அந்த இடமாக தீ மூண்டு அழிந்து விடும் என்கின்றது." இதனை காட்டும் ஜாதக அமைப்பிற்கு உதாரணத்திற்காக 7 இல் உள்ள செவ்வாயை சனி பார்வை செய்வது காட்டப்பட்டுள்ளது.




## தோச நிவர்திக்காக பின்பற்றப்பட்டு வரும் பரிகாரங்கள்

01. செவ்வாய் ஹிரகமே முருகக்கடவுளின் தளபதியாவார். எனவே செவ்வாய் பாதிப்பினை குறைக்க செவ்வாய் கிழமைகளில் விரதம் இருந்து ஒரு நேரம் உணவருந்தி கந்தசஷ்டி கவசம் பாராயணம் செய்தல் வேண்டும். இவ்வாறு 41 வாரம் செய்வது அதிதமான அற்புதமான நன்மைகளை பெற்றுத் தரும் பரிகாரம் ஆகும். இதனை மங்களவார விரதம் என்றும் அழைப்பர்.
02. இரத்ததானம் செய்வது மிகச்சிறந்த பரிகாரம் ஆகும்.
03. மனஅமைதி பெற கோப தாபங்களை கைவிட்டு தியானம் செய்வது.
04. அசைவ உணவுகளையும் மிதமான உணவுகளையும் காரம் குறைவான உணவுகளை விரும்பி உண்ணப்பழகுவது சிறந்த பரிகாரமாக அமையும்.
05. மலைமீதுள்ள முருகன் ஆலயங்களுக்கு மலைஏறிச்சென்று முருகனை மனமுருகி வழிபடுவது.
06. பரபரப்பான நகரங்களை விட்டு இயற்கையுடன் இணைந்து வாழப்பழகுவது.
07. சமூகப்பணிகளில், பொதுப்பணிகளில் ஈடுபடுவது நன்மைகளைச் செய்யும்.
08. வன்முறையான காட்சிகளையும் கதைகளையும் பார்ப்பதையும் கதைப்பதையும் தவிர்த்தல்.
09. மனம்சார்ந்த ,ஆன்மீகம் சார்ந்த, அறிவு சார்ந்த புத்தங்களை வாசிப்பதை நாளாந்த கடமையாகக் கொள்ளல் வேண்டும்.
10. தூய்மையான ஆடைகளை அணிவதையும் நல்லொழுக்கத்தையும் தியாக உள்ளத்தையும் வளர்த்துக்கொள்ள வேண்டும்.

யதார்த்த -தத்துவார்த்த ஜோதிட ஆய்வாளர்
**திரு.V.M.N.திலகன் (ராகவேந்திரா)** B.A (Hons)
Dip In Astro, Dip In Vasthu sasthiram, Dip In Saiva Siththantham
Following B.A Astrology

# 2018, 2019 இல் வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம் நடாத்திய முழுநிலா நிகழ்வுகள்

நிகழ்வு 207, 21 ஆண்டு நிறைவு விழா.(27-07-2018)

நிகழ்வு 208, (22-08- 2018)

கலாநிதி தமிழ்மணி அகளங்கன் அவர்களின் தலைமையில் **முத்தமிழ் அறிஞர் கலைஞர் டாக்டர் மு.கருணாநிதி** அவர்களுக்கு அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது. அஞ்சலிக்கவிதைகளும் அஞ்சலி உரைகளும் இடம் பெற்றன.

நிகழ்வு 209 (24.09.2018)

அகளங்கனின் **"சங்கமும் தமிழரும்"** கட்டுரைத் தொகுப்பு நூல் வெளியீடு நடைபெற்றது. தலைமை.கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன். பிரதம விருந்தினர் திரு. க. சுவர்ணராஜா(பீடாதிபதி-வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி)
தமிழ் மொழி வாழ்த்து சிறுமி பானுஜா பாலேந்திரன். வரவேற்புரை.திருமதி நந்தீஸ்வரி மாயவன், வெளியீட்டுரை, இன்தமிழ் இனியன் எஸ்.எஸ். வாசன்,அறிமுக உரை திருமதி த.நிறைமதி.முதற்பிரதி அருட்கலை வாரிதி, கலாபூஷணம், ஸ்தபதி சு.சண்முகவடிவேல். நூல் நயவுரை வித்யாரத்னா.ந.பார்த்தீபன், வித்யாரத்னா சி.வரதராஜன் சிறப்புப்பேருரை இலக்கியச் சுடர் ஐ.கதிர்காம சேகரன்.நன்றிஉரை. திரு.த.பிரதாபன் .

நிகழ்வு 210 (22.11.2018)

தலைப்பு **பாரதியாரும் அவர் வழிவந்த கவிஞர்களும்**

தலைமை் கலாநிதி தமிழ்மணி அகளங்கன்.தமிழ்மொழி வாழ்த்து சிறுமி பானுஜா பாலேந்திரன். வரவேற்புரை திரு.ஐ. யோகநாதன். அறிமுகவுரை திரு.நா.தியாகராசா. சிறப்புரை-இன்தமிழ் இனியன் எஸ்.எஸ்.வாசன். நன்றியுரை-திரு.சி.நாகராஜா

நிகழ்வு 211 (19.02.2019)

தலைப்பு **ஔவையாரின் அறிவுச் செல்வங்கள்**

தலைமை் கலாநிதி தமிழ்மணி அகளங்கன்.தமிழ் வாழ்த்து சிறுமி பானுஜா பாலேந்திரன். வரவேற்புரை திரு. ஐ.யோகநாதன். அறிமுகவுரை திரு.நா.தியாகராசா. சிறப்புரை வித்தியாரத்னா ந. பார்த்தீபன். நன்றியுரை சி. நாகராஜா.

நிகழ்வு 212 (20.03.2019 )

தலைப்பு **ஜோதிடத்தில் சந்திரனின் பங்கும் அறிவியல் உண்மையும்**

தலைமை கலாநிதி தமிழ்மணி அகளங்கன் தமிழ் வாழ்த்து சிறுமி பானுஜா பாலேந்திரன். வரவேற்புரை திரு. நா. தியாகராசா. அறிமுக உரை திரு.வி.எஸ். தனபாலசிங்கம். சிறப்புரை யதார்த்த தத்துவார்த்த ஜோதிடர் திரு. வி.எஸ். திலகன். கௌரவிப்பு திரு.த.பிரதாபன்( அகில இலங்கை சைக்கிள் சாதனைப் பயணம். 2125 k.m)

நன்றி உரை : சித்திரக்குரலோன்.சி. நாகராஜா.

நிகழ்வு 213 (16.06.2019)

தலைப்பு **பிரபஞ்ச சக்தியின் விளையாட்டு.**

**தலைமை : கலாநிதி தமிழ்மணி அகளங்கன்.**

**தமிழ்மொழி வாழ்த்து : சிறுமி பானுஜா பாலேந்திரன்,**

**வரவேற்புரை : திரு. சி. நாகராஜா.**

**அறிமுக உரை : திரு.நா.தியாகராசா.**

**சிறப்புரை : திரு.எம். லாசகன்.**

**நன்றி உரை : திரு.வை.சு.தனபாலசிங்கம்**


N.S.RATNAM & BROS

*Dealers in*
*all kinds of electronic items and spares*

HONDA

*No.6, 1st Cross Street,*
*Vavuniya.*
*Tel / Fax : 024 - 2221237*

# வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின்
# 21 ஆண்டு நிறைவு விழா

வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் இருபத்தோராண்டு நிறைவு விழா கடந்த 27.07.2018 இல் வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க கலாசார மண்டபத்தில் இதன் தலைவர் கலாநிதி தமிழ்மணி அகளங்கன் தலைமையில் நடைபெற்றது.

வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் மாதாந்த முழுநிலாக் கருத்தாடல் நிகழ்வு வரிசையில் இது 207 ஆவது நிகழ்வாகும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாக முதல்வர் கலாநிதி த. மங்களேஸ்வரன் கலந்துகொண்டார். சிறப்பு விருந்தினர்களாக வவுனியா பிரதேச செயலாளர் திரு. கா.உதயராஜா, வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திரு.முத்து. இராதாக் கிருஷ்ணன், வவுனியா வடக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அன்னமலர் சுரேந்திரன், வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி திரு.க.சுவர்ணராஜா ஆகியோர் கலந்துகொண்டனர்.

விசேட விருந்தினர்களாக மாவட்ட கலாசார உத்தியோகத்தர், திருமதி .ஜெ.தட்சாயினி பிரதேச கலாசார உத்தியோகத்தர் பண்டிதர் வீ. பிரதீபன் ஆகியோர் கலந்துகொண்டனர். கௌரவ விருந்தினர்களாக வவுனியா நகரசபை உறுப்பினர்,மக்கள்சேவை மாமணி நா. சேனாதிராசா, வவுனியா இந்து மாமன்றப் போசகர் சிவநெறிப் புரவலர் சி.எ.இராமஸ்வாமி, வவுனியா சி.க.கூ.ச.சமாசத் தலைவர் திரு.அ.ச.பாரதி ஆனந்தம் பொறியியலாளர் திரு. தி.மகேஸ்வரராஜா (லண்டன்) ஆகியோர் கலந்து கொண்டனர்.

சிறுமி பானுஜா பாலேந்திரன் தமிழ் வாழ்த்திசைத்தார். திரு.நா.தியாகராசா வின் வரவேற்புரை, தலைவரின் தலைமை உரை ஆகியவற்றைத்தொடர்ந்து கின்னஸ் உலக சாதனை படைத்த இயந்திரவியல்ப் பொறியியலாளர் திரு. கனகேஸ்வரன் கணேஸ்வரன், கௌரவிக்கப் பட்டார்.

வவுனியாவின் கலை இலக்கிய வளர்ச்சியில் மிக முக்கிய பங்கெடுத்துவரும் பதிப்புச் சுடர் திரு. முருகேசு கௌரிகாந்தன், நாட்டியக் கலாஜோதி திருமதி துஷ்யந்தி வேலுப்பிள்ளை, இசைக்குயில் திருமதி. வதனி ஸ்ரீதரன் ஆகியோர் முறையே பதிப்புக் கலைச் செல்வர், பரதக் கலைச் செல்வர், இசைக்கலைச் செல்வர், ஆகிய பட்டங்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். கௌரவிப்பு உரையினை வட்டத்தின் செயலாளர் கலாநிதி கந்தையா ஸ்ரீ கணேசன்

நிகழ்த்தினார்.கௌரவம் பெற்றவர்கள் சார்பில் ஏற்புரையினை திரு.முருகேசு கௌரிகாந்தன் ஆற்றினார்.

தொடர்ந்து, காப்பியக் கோ ஜின்னாஹ் ஷரிபுத்தீன் அவர்களை அட்டைப் பட அதிதியாகக் கொண்ட வட்டத்தின் மாருதம் சஞ்சிகையின் 18 ஆவது இதழ் பிரதம விருந்தினரால் வெளியிடப்பட்டது. முதற்பிரதியை அருட்கலை வாரிதி, கலாபூஷணம் ஸ்தபதி.சு. சண்முகவடிவேல் பெற்றுக்கொண்டார். அறிமுக உரையை இன்தமிழ் இனியன் எஸ்.எஸ். வாசன் ஆற்றினார்.

வவுனியா பண்டாரிகுளம் முதலியார் ச. தியாகராஜா நினைவு மாணவச் சாதனையாளர் விருது தலா பத்தாயிரம் (10000) ரூபாவும், நினைவுச் சின்னமும், சான்றிதழும், நான்கு மாணவர்களுக்கு வழங்கப்பட்டன. போட்டியில் பங்குபற்றிய வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த 64 மாணவர்களுக்கும் 500 ரூபாவுக்கும் மேற்பட்ட விலை உள்ள ஈழத்து எழுத்தாளர்களின் நூல்கள் வழங்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து பெண்கள் மட்டுமே பங்குகொண்ட சிறப்புப் பட்டிமண்டபம் திருமதி த. நிறைமதியின் தலைமையில் இடம்பெற்றது. எமது நாட்டில் பெண்களுக்கு போதிய உரிமைகள் உண்டு என்றும் இல்லை என்றும் முறையே திருமதி.கி.லிசாந்தினி, திருமதி.மா.நந்தீஸ்வரி, திருமதி ம. அனுஷா, கஜரதி பாண்டித்துரை ஆகியோர் விவாதித்தனர். திரு.ஐ.யோகநாதனின் நன்றி உரையோடு விழா நிறைவுற்றது.

பக்.79 தொடர்ச்சி...

போய் சேர்ந்தனர். அப்போது ஆயிரம் ஆண்டு அடிமைத் தளையில் இருந்து பாரதத்தின் விடுதலை பெறும் விழாவிற்காக எல்லோரும் காத்திருந்தனர். அந்த சுதந்திர வைபவ தினத்தில் மௌண்ட் பேட்டனிடம் இருந்து செங்கோலை குரு மகாசன்னிதானம் திருவாவடுறை ஆதினம் தம்பிரான் பண்டார சுவாமிகள் பெற்று செங்கோலுக்கு புனித நீர் தெளித்து ஓதுவார் மூர்த்திகள் **"வேயுறு தோளி பங்கன்"** என்று துவங்குகிற தேவாரத்திருப் பதிகத்தைப் பாட பதினோராவது பாடலின் கடைசி வரி **"அடியார்கள் வானில் அரசாள்வார் ஆணை நமதே"** இந்த வரியைப் பாடி முடிக்கும் போது தான் சுவாமிகள் செங்கோலை நேருவிடத்தில் கொடுத்தார். இந்த நிகழ்வைத்தான் நாம் சுதந்திர தினமாக கொண்டாடுகிறோம்.

இந்த நிகழ்வு தமிழுக்கும் தமிழகத்திற்கும் எவ்வளவு பெருமை, திருவாவடுதுறை ஆதின மடத்தில் இந்த செங்கோல் வைபவம் கறுப்பு வெள்ளை புகைப்படமாக உள்ளது. புகைப்படத்தில் 15.08.1947 என்று திகதியிட்டு இருப்பதையும், நேரு கையில் செங்கோலுடன் இருப்பதையும், தம்பிரான் பண்டார ஸ்வாமிகள் அருகில் உள்ளதையும் காணலாம்.

தகவல் : கே.வி.எஸ்.மோகன் , நன்றி நா.நடராஜா

## வாழ்த்துகிறோம்

வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின்
இருபத்திரண்டாண்டு பணியை
பாராட்டுகின்றோம்.

# மாருதம் 19 ஐ

வாழ்த்துகின்றோம்.

# தமிழ் விருட்சம்

# சைக்கிளில் "அகில இலங்கை சாதனைப் பயணம்"

## 2125Km

## 25 மாவட்டங்களையும் 26 நாட்களில் சுற்றி

எனது பயணமானது 10.02.2019 காலை 9.00 மணிக்கு வவுனியா கோவில்க்குளம் சிவன் ஆலயத்தில் ஆரம்பமாகி 07.03.2019 இல் வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க நடராசர் மண்டபத்தருகே மாலை 05.15 மணிக்கு நிறைவு பெற்றது.

வவுனியாவில் ஆரம்பமாகிய பயணம் அனுராதபுரம், தம்புள்ள, மாத்தளை, கண்டி, கேகாலை, குருநாகல், புத்தளம், சிலாபம் நீர்கொழும்பு, களுத்துறை, காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை, கதிர்காமம், உடவளவை தேசிய பூங்கா ஊடாக இரத்தினபுரி, அவிசாவளை, கித்துல்கல, ஹட்டன், நுவரெலியா.

பதுளை, பஸ்ஸரை ஊடாக மொனராகலை, பொத்துவில், கல்முனை, மட்டக்களப்பு, பொலநறுவை, ஹபரணை ஊடாக திருகோணமலை, புல்மோட்டை, கொக்கிளாய் படகுப் பாதை ஊடாக முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, பரந்தன், கிளிநொச்சி, ஆனையிறவு, சாவகச்சேரி, நெல்லியடி, பருத்தித்துறை, செல்வச்சந்நிதி, நல்லூர், யாழ்ப்பாண பல்கலைக்கழகம், பூனகரி ஊடாக மன்னார் ஆகிய இடங்கள் ஊடாக பயணித்து 07.03.2019 அன்று மாலை வவுனியா நகரை வந்தடைந்தேன்.

கோரிக்கை

1. தோட்டத் தொழிலாளர்களுக்கு ரூபா 1000/= சம்பளம் வழங்க வேண்டும்.
2. லயன் வீடுகளை அகற்றி, தனித்தனி வீடு அமைத்து கொடுக்க வேண்டும்.
3. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வவுனியா வளாகத்தை தனிப் பல்கலைக் கழகமாக மாற்ற வேண்டும்.

**த.பிரதாபன்**

# ஔவையாரின் கல்விச் சிந்தனைகள்

செல்வி.சி.துவாரகா
வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி
இந்துசமயப்பிரிவு (2ம் வருடம்)

ஔவையார் நன்கு அறிமுகமான ஒரு பெண் புலவர். ஔவையார் எனும் பெயர் பூண்ட புலவர்கள் பலர் இருந்தனர். நூலமைதி, தமிழ்நடை தொடர்புடையோர் முதலானவற்றை கருத்திற்கொண்டு வரலாற்று நோக்கில் பார்க்கும் போது அவர்கள் வெவ்வேறு காலத்தில் வாழ்ந்தவர்கள் என்பது புலனாகும்.

ஔவையாரினை காலந்தோறும் அதாவது சங்ககாலப் புலவர், அறநூல் புலவர், நூல் புலவர், கதையில் வரும் புலவர், சிற்றிலக்கியப் புலவர் என்று பாகுபடுத்திக் காணமுடிகின்றது. சங்ககாலப் புலவர் ஔவையார் அதியமான் காலத்தில் வாழ்ந்தவர். அக்காலத்தில் வாழ்ந்தவரே கபிலர், கபிலரின் நண்பனான பாரியின் மகளான அங்கவை, சங்கவை இருவரின் திருமணத்திற்கு முயற்சி மேற்கொண்டவர்கள் ஔவையும் கபிலரும் ஆவார்.

அன்றியும், ஔவையார் ஆக்கிய நூல்கள் பட்டியலில் வரும் பல நூல்கள் பெயரளவிலேயே காணப்படுகின்றன. அவை

- கல்வியொழுக்கம்
- நன்னூற்கோவை
- நான்மணிக் கோவை
- நான்மணிமாலை
- அருந்தமிழ் மாலை
- தரிசனப் பத்து
- பிடக நிகண்டு

ஔவை என்ற சொல் அவ்வா என்ற சொல்லின் திரிபாக இருக்கலாம். என்ற கருத்து பலரிடம் இருக்கின்றது. மூதாட்டி அல்லது தவப்பெண் என்ற கருத்தை உடையது என்று பழந்தமிழ் அகராதி கூறும். பிற்காலத்தில் ஔவை என்ற சொல் ஆண்டு மற்றும் அறிவு என்பவற்றில் முதிர்ச்சி அடைந்தவர்களைக் குறிக்கும் நிலையாயிற்று.

## ஔவையார் காலம்

சங்ககாலத்தில் அதாவது கி.பி. இரண்டாம் நூற்றாண்டுக்கு முன் அகம் மற்றும் புறம் சார்ந்த பாடல்களைப் பாடியவராகக் காணப்படுகின்றார் ஔவையார். புறநானூறு, அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை ஆகிய நான்கு நூல்களில் இவரது பாடல்கள் உள்ளன. அவற்றில் புறத்திணை பாடல்கள் 55, அகத்திணை 26. அதிக பாடல்களை பாடிய புலவர் வரிசையில்

ஒன்பதாம் நிலையில் உள்ளார். சங்க காலத்தில் அதிக பாடல்கள் பாடியவர் வரிசையில் கபிலர், பரணருக்கு அடுத்த நிலையில் உள்ளார். இவரிடம் பாடல் பெற்றவர்களாக சேர, சோழ, பாண்டியர், நாஞ்சில் வள்ளுவன் முதலானோரைக் குறிப்பிடலாம். இவர் வரலாற்றினை நோக்கும் போது அதியமானிடம் இருந்து நெல்லிக்கனி பெற்றவராகக் குறிப்பிடமுடிகின்றது.

இக்கால ஔவையின் தோற்றப் பொலிவினை நோக்கும் போது பலரது உள்ளப் பிரிவில் இருக்கும் கிழவிப் பருவம் சங்ககால ஔவைக்கு இல்லை. அதியமான் தன்னை அழைத்ததாக இவரது பாடலில் உள்ள தொடர் இவரது இளமை எழிலைக் காட்டுகின்றது. ஔவை ஒரு விறலி. மை தீட்டிய கண்களும், வட்டமான நெற்றியையும் கொண்டவள், எடுப்பான இடுப்பில் அழகிய அணிகலன்களை அணிந்திருக்கின்றாள்.

இடைப்பட்ட கால ஔவையினை நோக்கும் போது இவர் கி.பி. பத்தாம் நூற்றாண்டுக்கு முற்பட்டவர். இவர் மூவேந்தரினை பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடல்கள் பாடினார்.

இவரது வரலாறு அங்கவை மற்றும் சங்கவையுடன் தொடர்புபட்டதாகக் காணமுடிகின்றது. இது சங்ககாலத்தின் நிலையாக உணரமுடிகிறது. பாரியின் மகள்கள் அங்கவை, சங்கவை, பரணரின், கபிலரின் காலம், சங்ககாலம், கபிலரின் நண்பன் பாரி குறுநில மன்னன். இது சங்ககாலம்.

சோழர்கால ஔவையினை நோக்கும் போது இவர் பன்னிரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். இவர் சோழர் அசதி, அசதி விக்ரம சோழன் என்பவரை பாட்டுடைத் தலைவனாகக் கொண்டுள்ளார். இவர் ஒரு சமயப் புலவராகவும் காணப்படுகின்றார். விநாயகரை பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடல்கள் பாடியமையானது எடுத்துக்காட்டாக அமைகின்றது. இவரது நூல்கள்.

- ஆத்திசூடி
- கொன்றைவேந்தன்
- நல்வழி
- மூதுரை (வாக்குண்டாம்)
- அசதிக்கோவை
- விநாயகர் அகவல்

பிற்காலம் அதாவது பதினாறாம், பதினேழாம் நூற்றாண்டைச் சேர்ந்தவராகக் குறிப்பிடப்படும் ஔவையாரினை நோக்கும் போது இவர் தமிழறியும் பெருமாள் கதை என்னும் வரலாற்றின் ஊடாக எடுத்து நோக்க முடிகின்றது.

பதினேழாம் பதினெட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தவராகக் குறிப்பிடப்படும் ஔவையார் பந்தன் என்னும் வணிகனை அதாவது அவன் செய்த சிறப்புக்களினை பந்தன் அந்தாதி என்னும் அந்தாதியில் பாடியமையானது அவரது வரலாற்றினை எடுத்துக் காட்டுகின்றது.

## ஔவையாரும் கல்வியும்

ஔவையாரின் கல்விக் கொள்கையினை நோக்கும் போது விஞ்ஞான ஆராய்ச்சிக்கு அடிப்படையான எண்ணையும் (கணிதம்) இலக்கிய வளர்ச்சிக்கு அடிப்படையான எழுத்தையும் இகழ்ந்து ஒதுக்குதல் ஆகாது எனக் குறிப்பிடுகிறார். இதனை **"எண் எழுத்து இகழேல்"** எனக் குறிப்பிடுகிறார். எக்காரணத்தை முன்னிட்டும் ஞான நூல்களைப் படிப்பதை விட்டு விடலாகாது என்பதனை "ஓதுவது ஒழியேல்" எனக் குறிப்பிடுகிறார்.

மேலும் இளமைப்பருவத்திலேயே கல்வி கற்றுக் கொள்ள வேண்டும் என்பதை **"இளமையில் கல்"** என்றும் கற்றவர் சொல்லும் பொருள் கேட்டு ஆராய்ந்து அறிவைப் பெருக்கிக் கொள்ள நீ முயற்சி செய்ய வேண்டும் என்பதை **"கேள்வி முயல்"** என்றும் உனக்குத் தெரிந்த கைத்தொழிலை மறைக்காதே என்பதை **"கைவினை கரவேல்"** என்றும் அறிஞர்கள் நிறைந்த கூட்டத்தில் கலந்து கொள்வாயாக என்பதை **"சான்றோர் இனத்திரு"** என்றும் அறிவு வளர்க்கும் நூல்கள் பலவற்றையும் விடாது கற்பாயாக என்பதனை **"நூல் பல கல்"** என்றும் குறிப்பிடுகின்றார்.

கல்விப் பொருளை விரும்பிக் கற்க வேண்டும் என்பதனை **"வித்தை விரும்பு"** என்றும், கையிலே வைத்திருக்கின்ற நிலைத்திராத பொருளை விட உண்மையாக நிலைக்கும் பொருள் அழிவில்லாத நிலையான கல்வியாகும் என்பதனை **"கைப்பொருள் தன்னில் மெய்ப்பொருள் கல்வி"** என்றும் பெற்றவளுக்கு அழகு எது என்றால் அவள் பெற்ற மக்களை கல்வியறிவால் நிறைந்தோர் என்று உலகம் சொல்வதே என்பதனை **"சான்றோர் என்கை ஈன்றோட்கு அழகு"** என்றும், நிலைத்திருக்கும் படியான கல்வி கற்பதாவது சொன்ன சொல் தவறாது இருத்தலே ஆகும் என்பதனை **"நிற்கக் கற்றல் சொல் திறம்பாமை"** என்றும் குறிப்பிடுகின்றார்.

அறநூல்களில் விதிக்கப்பட்ட முறைகளை அறிந்து சொல்லப்பட்டிருக்கும் முறைகளை அறிந்து நல்லொழுக்க வழியில் நடப்பாயாக என்றும் கல்வி அறிவிலே அனுபவம் முதிர்ந்தவர் கூறும் சொற்கள் தேவாமிர்தம் போன்றவை ஆகும் என்பதனை **"மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்"** என்றும் நல்ல நூல்களைப் படிக்காதவரிடம் அறிவும் நன்னடத்தையும் காணுதல் இயலாது என்பதனை **"ஓதாதார்க்கு இல்லை உணர் வொடு ஒழுக்கம்"** என்பதன் ஊடாக குறிப்பிடுகின்றார் இவ்வாறாக ஔவையாருடைய கல்விச் சிந்தனையை கண்டுகொள்ள முடிகின்றது.

மலர்களில் நான் மல்லிகையாக இருக்கிறேன்.

– கீதையில் கிருஷ்ணன்



மல்லிகை என் மன்னன்
மயங்கும் பொன்னான
மலரல்லவோ

# வன்னி மதுரை மல்லிகை

உதிரிப்பூக்களாகவும், மாலைகளாகவும்
பெற்றுகொள்ள





## தம்பா மாதிரிப் பண்ணை

தொ.பே: 077 7153 963,
024 5670262

வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம் நடாத்தும்
22 ஆண்டு நிறைவு விழா – நிகழ்வு 214

காலம் : 16.07.2019 செவ்வாய்க்கிழமை
காலை 9.30 மணி
இடம் : வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க கலாசார மண்டபம்

**தலைமை**

**கலாநிதி.தமிழ்மணி அகளங்கன் அவர்கள்**
(தலைவர், வ.க.இ.ந.வட்டம்)

**பிரதம விருந்தினர்**

**கலாநிதி.த.மங்களேஸ்வரன் அவர்கள்**
(முதல்வர், யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாகம்)



**சிறப்பு விருந்தினர்கள்**

**திரு.கா.உதயராஜா அவர்கள்**
(பிரதேச செயலாளர் - வவுனியா)

**திரு.முத்து இராதாகிருஷ்ணன் அவர்கள்**
(வலயக்கல்விப் பணிப்பாளர் - வவுனியா தெற்கு)

**திருமதி.அன்னமலர் சுரேந்திரன் அவர்கள்**
(வலயக்கல்விப் பணிப்பாளர் - வவுனியா வடக்கு)

**திரு.க.சுவர்ணராஜாஅவர்கள்**
(பீடாதிபதி - வவு.தேசிய கல்வியியற் கல்லூரி)

**விசேட விருந்தினர்கள்**

**திருமதி.மாலினி கிருஷ்ணானந்தன்** அவர்கள்
(மாவட்ட கலாசார உத்தியோகத்தர், - மாகாணம், வவுனியா)

**திருமதி.தட்சாயினி ஜெனானந்தசிவம்** அவர்கள்
(மாவட்ட கலாசார உத்தியோகத்தர், - மத்திய அரசு, வவுனியா)

**தமிழ்வாரிதி. பண்டிதர் வீ.பிரதீபன்** அவர்கள்
(பிரதேச கலாசார உத்தியோகத்தர் - வவுனியா)

**பிரம்மஸ்ரீ.ச.குகனேஸ்வர சர்மா** அவர்கள்
(இந்து சமய கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் - வவுனியா)

**திரு.சி.சிவகஜன்** அவர்கள்
(இந்து சமய கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் - செட்டிகுளம்)

**கௌரவ விருந்தினர்கள்**

**மக்கள் சேவை மாமணி நா.சேனாதிராசா. சமா.நீ.** அவர்கள்
(நகரசபை உறுப்பினர் - வவுனியா)

**சைவசிரோமணி சி.சுப்பிரமணியம்** அவர்கள்
(உறுப்பினர் - வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை)

**திரு.வீ.ஜெகசோதிநாதன்** அவர்கள்
(தலைவர் - பல.நோ.கூ.சங்கம், வவுனியா)

**திரு.அ.ச.பாரதி ஆனந்தம். சமா.நீ.** அவர்கள்
(தலைவர் - வவுனியா மாவட்ட சி.க.கூ.ச.சமாசம்)

**சிவநெறிப்புரவலர், சமூக சஞ்சீவி**
**சி.ஏ.இராமஸ்வாமி** அவர்கள்

**நயினை கி.கிருபானந்தா அவர்கள்**
(செயலாளர் - யாழ் இலக்கிய வட்டம்)

**தொடர்பியல் வித்தகர் அருணா செல்லத்துரை** அவர்கள்
(வரலாற்று ஆய்வாளர்)

**திரு.செ.சந்திரகுமார் (கண்ணன்)** அவர்கள்
(ஸ்தாபகர் - தமிழ்விருட்சம்)

## நிகழ்ச்சி நிரல்

மங்கல விளக்கேற்றல்

தமிழ் வணக்கப் பாடல் : சிறுமி.பானுஜா பாலேந்திரன் அவர்கள்

வரவேற்புரை : வித்தியாரத்னா ந.பார்த்தீபன் அவர்கள்
(சிரேஷ்ட விரிவுரையாளர் - வ.தே.க.கல்லூரி)
துணைத்தலைவர் - வ.க.இ.ந.வட்டம்

தலைமை உரை : தலைவர்

### மாருதம் சஞ்சிகை இதழ் 19 வெளியீடு

முதற்பிரதி பெறுபவர்

அருட்கலைவாரிதி, கலாபூஷணம்,
**ஸ்தபதி, சு.சண்முகவடிவேல் அவர்கள்**

**அறிமுகவுரை**

இன்தமிழ் இனியன் **எஸ்.எஸ். வாசன்** அவர்கள்
(மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் - வவுனியா)

**கௌரவிப்பு நிகழ்வு**

சான்றோர் கௌரவிப்பு
வவுனியாவின் கலை இலக்கிய சமூக வளர்ச்சிக்கு பெரும் பங்களிப்பு செய்து வரும்

**திரு.இரா.சுப்பிரமணியம்** அவர்கள்
**திரு.வை.சு.தனபாலசிங்கம்** அவர்கள்
**திரு.ப.எ.அன்ரன் பரந்தாமன் (தமிழினியன்)** அவர்கள்

கௌரவிப்பு
ஓவியம், விளையாட்டு ஆகிய துறைகளில் சாதனை படைத்தவர்களாகிய
**திரு.சோ.ஸ்ரீராஜ்குமார் (ரவி ஆட்ஸ்)** அவர்கள்
**திருமதி.அகிலத்திருநாயகி சிறிசெயானந்தபவன்** அவர்கள்

**கௌரவிப்பு உரை**

**கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன் அவர்கள்**
(சிரேஷ்ட விரிவுரையாளரும், இணைப்பாளரும்
ஆங்கிலமொழி கற்பித்தல் - யாழ். பல்கலைக்கழகம்,)
செயலாளர், வவுனியா க.இ.ந.வ

---

வவுனியா பண்டாரிகுளம்
**முதலியார் ச.தியாகராஜா** அவர்களின் மகன்
பொறியியலாளர், **கவிஞர் தி.மகேஸ்வரராஜா** (லண்டன்) அவர்கள் வழங்கும்
வவுனியா பண்டாரிகுளம் முதலியார் ச.தியாகராஜா நினைவு

### மாணவச் சாதனையாளர் விருது - 2018

பாடசாலைக்காலத்தில் பாடசாலையின் உள்ளேயும், வெளியேயும் தமிழியல் சார்ந்த துறைகளில் மாணவர்கள் செய்த சாதனைகளின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட மூன்று மாணவர்களுக்கு ரூ.10, 000 பணப்பரிசும், சான்றிதழும், நினைவுச் சின்னமும், நூல்களும் வழங்கப்படும். அத்தோடு போட்டியில் பங்குபற்றிய அனைவருக்கும் ரூ.500 க்கும் குறையாத பெறுமதிமிக்க ஈழத்து நூல்கள் வழங்கப்படும்.

**விருந்தினர் உரைகள்**

**நூல் வெளியீடு :**

நெடுங்கேணி
**திருமதி.புவனேஸ்வரி சுந்தரலிங்கம்** அவர்களின்

1. **நிஜம் பருவங்கள் ஏன் எப்படி**
   அறிமுக உரை :
   **திருமதி.த.நிறைமதி** அவர்கள
   (ஆசிரிய ஆலோசகர் - தமிழ், வவுனியா தெற்குக் கல்வி வலயம்)
2. **மங்கையின் தன்னம்பிக்கை (கதைகள்)**
   அறிமுக உரை :
   **வித்தியாரத்னா சி.வரதராஜன்** அவர்கள்
   (ஆசிரியர், கணேஸ்வரா வித்தியாலயம், பாவற்குளம்)

சிறப்பு நிகழ்ச்சி : **தென்னாசியக் கவிதைகள்** - அறிமுகம்
மொழிபெயர்ப்பு : **கவிஞர். சோ.பத்மநாதன்** அவர்கள்
(முன்னாள் அதிபர், பலாலி ஆசிரிய கலாசாலை)

அறிமுக உரை :
**பேராசிரியர்.சி.சிவலிங்கராஜா** அவர்கள்
(முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் - யாழ் பல்கலைக்கழகம்)

**நன்றியுரை**

**திரு.நா.தியாகராசா.** சமா.நீ. அவர்கள்
(துணைத்தலைவர் - வ.க.இ.ந.வட்டம்)

நிகழ்ச்சித் தொகுப்பாளர்கள்
சித்திரக்குரலோன் **சி.நாகராஜா** அவர்கள்
மதுரக்குரலோன் **ஐ.யோகநாதன்** அவர்கள்

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

# வவுனியா மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்

### பதிவு

21.11.1986 ந் திகதி கூட்டுறவுச் சட்டத்தின் கீழ் வவுனியா கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தினால் பதிவு செய்யப்பட்ட கூட்டுறவு அமைப்பாகும்.

303ஏ
21.11.1986

### அங்கத்துவம்

195 சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களை அங்கத்துவ சங்கங்களாக கொண்டுள்ளது. அத்துடன் சிககூ சங்கங்கள் அல்லாத கிராம மட்டங்களிலுள்ள பதிவு செய்யப்பட்ட 15 அமைப்புக்கள், சங்கங்களை இணைஅங்கத்துவமாக கொண்டுள்ளது.

### நோக்கம்

கிராம மட்டங்களிலுள்ள மக்களை சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் உள்வாங்கி அவர்களின் சேமிப்பு பழக்கத்தை ஊக்குவித்து, அதன் மூலம் தொழில் முயற்சிகளுக்கு சிககூ சங்கங்களின் ஊடாக குறைந்த வட்டி வீதத்தில் இலகுவான முறையில் நுண்கடன்களை வழங்கி அவர்களின் சமூக, பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்துதல் ஆகும்.

### தொழிற்பரப்பெல்லை

நான்கு பிரதேச செயலாளர் பிரிவுகளையும் உள்ளடக்கிய வவுனியா மாவட்டம்.

### தொழிற்பாடு

சேமிப்பு, கடன்திட்டம், காகிதாதி விற்பனை, மண்டப வாடகை

**சேமிப்புத்திட்டம் :**

பங்கு
சாதாரண சேமிப்பு
கட்டாய சேமிப்பு
விசேட சேமிப்பு
சணசவார சேமிப்பு
சிறுவர் சேமிப்பு
தனிநபர் சேமிப்பு

**கடன்திட்டம்**

விவசாயக் கடன்
நெற்செய்கை, தோட்டப்பயிர்செய்கை
மேட்டுநிலப் பயிர்செய்கை
அபிவிருத்திக் கடன்
விசேட அபிவிருத்திக் கடன்
கால்நடை வளர்ப்பு (பசு,ஆடு, கோழி)
சுயதொழில் முயற்சி (சிறுகைத்தொழில், சிறுவியாபாரம், சிறுகடை)

**இல.44, பொதி மண்டப வீதி, வவுனியா. தொ.பே,பக்ஸ் இல: 0242222341**
**Email:vavuniyadtccsunion@gmail.com**

மாருதம் சிறப்புற வாழ்த்துகிறோம்.

ஜீ.எச்.ஏ.டீ.சில்வா அன் கோ
பஜார் வீதி, வவுனியா.

Vaani - Vavuniya. 024 2223658